கழக வெளியீடு: ௫௨௭

# பிறந்த நாள்

[ஒரு வாழ்வியல் நாடகம்]

PRESENTED BY
V. PR. PL. M KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY. PAGANERI

புலவர் 'அரசு' எழுதியது

பாகனேரி

:: திருநெல்வேலி, தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை 1.

முதற் பதிப்பு : சனவரி, 1950

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEELLY, LTD.,
1/140, BROADWAY :: MADRAS 1.

*Head Office*

24, EAST CAR STREET :: THIRUNELVELI.

Liberator Press, Madras.

4074

## நாடக உறுப்பினர்:

1. சொக்கலிங்க முதலியார்: *சொக்க நகர் மிராசுதார்; வயது 50.*

2. கண்ணப்பன்: *சொக்கலிங்க முதலியாரின் மகன்; 20 வயது.*

3. தாமரைக்கண்ணி அம்மாள்: *சொக்கலிங்க முதலியாரின் மனைவி; வயது 45.*

4. மங்கைநல்லாள்: *கண்ணப்பன் தங்கை; 16 வயது.*

5. பூங்காவனம்: *சொக்கலிங்க முதலியார் வீட்டிலே வேலை செய்யும் பெண்; 17 வயது.*

6. இலக்குமி: *பூங்காவனத்தின் அன்னை; வயது 35.*

7. முனிசாமி முதலியார்: *சொக்கலிங்க முதலியார் நண்பர்; 52 வயது.*

8. எல்லப்பன்: *உயர்தரப் பள்ளி ஆசிரியர்; 26 வயது.*

9. தேவதாஸ்: *சொக்கலிங்க முதலியார் குமாஸ்தா; 24 வயது.*

10. மேரி: *தேவதாஸ் தங்கை; பத்தாவது படிக்கிறாள்; 16 வயது.*

11. கமலம்; *மேரியின் அன்னை; 40 வயது.*

12. கன்னியப்பன்: *கண்ணப்பன் நண்பன்.*

13. டாக்டர்

**நாடகம் நிகழ்விடம்: சொக்க நகர்**

# பதிப்புரை

நாடு நல்வாழ்வெய்த 'ஒன்றே குலம்' என்ற கொள்கை மக்களுளமெல்லாம் பரவி நிலைபெறுதல் வேண்டும்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பர் திருவள்ளுவர், 'உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்றார் பாரதியார். இவ்விரு நெறிகளும் உலகனைத்தும் ஒளிவீச உழைக்கின்றனர் அறிஞர்.

இவ்வாறு பெருகியெழும் புத்துணர்ச்சி வெள்ளத்தின் ஓர் அலையே 'பிறந்த நாள்'

திரு. புலவர் அரசு அவர்கள், நன்முறையில் இந்நாடக நூலை அமைத்துத் தந்துள்ளனர்.

தமிழகம் இந்நூலை நன்கு வரவேற்றுப் பயனெய்துமென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# பிறந்த நாள்

## காட்சி - 1

**இடம் :** சொக்க நகர் சொக்கலிங்க முதலியார் வீடு
**காலம் :** காலை எட்டு மணி

[சொக்கலிங்க முதலியார் ஒரு நாற்காலியில் அமர்ந்து பஞ்சாங்கம் பார்க்கிறார். எழுத்தாளன் தேவதாசன் எதிரே ஒரு பெஞ்சியின் மேல் அமர்ந்து கணக்கெழுதுகிறான்.]

**சொக்க :** (பஞ்சாங்கத்தை வைத்துவிட்டு) இன்னும் பத்து நாட்களே உள்ளன! எதைச் செய்ய முடியும்? (தம் மனைவியைக் கூப்பிடுகிறார்) தாமரை! தாமரை!!

**தாமரைக்கண்ணி :** (உள்ளிருந்தபடியே) தாமரை குளத்திலே யிருக்கும். (வெளியே வந்து கதவோரம் நின்று) என்னுங்க!

**சொக்க :** உன் மகன் பிறந்தநாள் இன்னும் பத்து நாள் கழித்து வருகிறது! தெரியுமா!

**தாமரை :** கண்ணன் பிறந்தநாளா?

**சொக்க :** (வெறுப்புடன்) ஆமாம்! மணிவண்ணன் பிறந்தநாள் தான்.

**தாமரை :** போன தடவையே ஏமாற்றிவிட்டீர்கள். இந்த முறையிலாவது பத்துப் பிராமணருக்கு வேட்டியுந் தட்சணையும் சமாராதனையும் பண்ணவேணும்.

(மங்கை உள்ளிருந்து வருகிறாள்)

**சொக்க:** (நகைத்து) ஏது! பிராமணுள் ஆசிர்வாதம் பலமாய்ப் போய்விடும்!

**மங்கை:** (தந்தையிடம் வந்து நின்று) நம் வீட்டுப் படியாட்களுக்கெல்லாங் கூடச் சமாராதனேயும் ஒவ்வொரு சோடி வேட்டியுங் கொடுக்க வேணும் அப்பா!

**சொக்க:** (வெறுப்புடன்) உம். உங்களண்ணன் திட்டம் என்னவோ?

**மங்கை:** (அதைக் கவனிக்காதவள் போல) நான் சொன்னது காதில் விழுகிறதா!

**சொக்க:** (தேவதாசைப் பார்த்து) ஏன் தேவா, புதுக் கலெக்டர் எப்படிப்பட்டவராம்?

**தேவ:** நல்லவர்தானும், ஆனுல் கண்டிப்பானவராம்.

**சொக்க:** அதை நான் கேட்கவில்லே. நம் விருந்துக்கு வருவாரா என்று தெரிய வேண்டும்.

**தேவ:** எப்போது விருந்து?

**சொக்க:** நம் கண்ணப்பன் பிறந்த நாளின் போது தான்.

**தேவ:** கேட்டுப் பார்க்கிறேன்.

**சொக்க:** விவரமாகக் கேட்டுப் பார். மாலேக்குள் தெரிய வேண்டும். (தாமரைக்கண்ணியை நோக்கி) தாமரை! நாலு பிராமணுள்—நூறு விருந்து—படியாட்களுக்குக் கதம்பம். இந்தத் திட்டம் முடியும். இன்னும் அந்தப் பையன் என்ன சொல்கிருனே?

**தாமரை:** (சலிப்புடன்) நான் சொல்வது எப்போதும் அம்பலந்தானே! இதற்கு என்னேக் கேட்பானேன்?

**மங்கை :** ஆமாம் அப்பா ! படியாட்களுக்கு—எலும்பு முறிய உழைக்கிறவர்களுக்குக்—கதம்பங்கூட என்னத்துக் கப்பா ?

**சொக்க :** (எழுந்து) சரிதான். எல்லாம் வெள்ளை யப்பன் கண் பார்த்தால் விளங்கிவிடும். ஒன்றுக்குப் பத்தாக விலையேறி யிருக்கும்போது என்ன செய்யலாம்? (செல்கிறார்)

**தாமரை :** ஆமாம். இப்படி எதாவது பதில் சொல்ல முடியாவிட்டால் ஓட்டந்தான். என்ன தேவா ! ஐயாவிடம் நிலுவை அதிகமோ ?

**தேவ :** (கணக்கைப் புரட்டிப் பார்த்து) நிலுவை யொன்றும் இல்லையே. போனமாதச் சம்பளங்கூட எனக்கு இன்னும் கொடுக்கவில்லை. கேட்கலாமென்றிருந்தேன். அதற்குள் போய்விட்டார். நீங்களாவது கொஞ்சம் சொல் கிறீர்களா ? சம்பளமும் கொஞ்சம். அதுவும் ஒழுங்காய்க் கிடைக்காவிட்டால் எப்படிக் காலங் கழிப்பது ?

**மங்கை :** (அவனைப் பார்த்துக் கொண்டே) அம்மா ! அப்பாவிடம் பணம் இல்லையா ?

**தாமரை :** அது யாருக்குத் தெரியும்? இவர் கொஞ்சங் கூட இல்லை யென்கிறாரே !

**மங்கை :** ஏனம்மா ! இவருக்குக்கூடச் சம்பளங் கொடுக்கவில்லை. பிறந்த நாளன்றைக்கு விருந்து நூறு பேருக்கு ! இன்னும் கச்சேரி யெல்லாங்கூட இருக்கும்.

**தேவ :** ஆமாம். எல்லாம் ஐந்நூறு அறுநூறுக்குக் கொண்டுபோய்விடும். போன மாதம் படியாட்களுக்குப் படிகூடக் கொடுக்கவில்லை.

**மங்கை:** அப்படியானால் இந்தப் பிறந்த நாள் விழா! கடன் வாங்கி-உழைத்தவர்களின் வயிற்றைக் காயவிட்டுத்-தானா நடத்த வேண்டும்? (தேவதாஸைப் பார்த்து) உங்கள் பிறந்த நாள் விழா எல்லாம் எப்போது? எப்படி நடக்கும்?

**தேவ:** (வெறுப்புடன்) என்றைக்குச் சரியானபடி உண்ணவும் உடுக்கவும் முடிகிறதோ அன்றே பிறந்த நாள் - கவலையின்றி தன் மதிப்புடன் வாழ என்று முடிகிறதோ அன்றே பிறந்த நாள்!

**மங்கை:** தன் மதிப்புடன் என்றால்?

**தேவ:** அடிமையாக இல்லாமல் வாழ்வது என்று பொருள்.

**மங்கை:** ஆனால், நீங்கள் இப்போது அடிமையா?

**தேவ:** (புன்முறுவலுடன்) ஒருவரிடம் சம்பளம் வாங்கிக் கொண்டு உழைப்பதென்றால் அவருக்கு அடிமை தானே? நினைத்தபோது வரவும் போகவும் முடியுமா?

**தாமரை:** நீ சொல்வது எங்களுக்கு என்ன புரியும்? உன் வேலையைப் பார். (உள்ளே செல்கிறாள்)

**மங்கை:** மேரி நன்றாகப் படிக்கிறாளா?

**தேவ:** என்னமோ சுமாராகப் படிக்கிறாள். வறுமைப் பாலைவனத்திலே கல்விப் பயிர்!

**மங்கை:** (இரக்கத்துடன்) பாவம்! அவளுக்கு எல்லாப் பாடமும் நன்றாக வருமே!

**தேவ:** கணக்கு ஒன்றுதான் வராது, சின்ன வகுப்பிலேகூடக் கணக்குக் கொஞ்சங் கடினந்தான். அப்பா விடம் நீயும் கொஞ்சம் சொல்லம்மா! மேரிக்குச் சம்பளங் கட்டப் பணம் வேண்டும்.

**மங்கை :** ஆகட்டும் ; சொல்கிறேன். விடுமுறை நாட்களில் ஒருநாள் மேரியை வரச் சொல்கிறீர்களா?

**தேவ :** வரச் சொல்கிறேன். (மங்கை உள்ளே செல்கிறாள்) செல்வர்களுக்கு ஏழைகளின் வருத்தம் தெரிவதெப்படி ? காக்கைக்கு எருதின் வருத்தம் தெரியுமா? ஒருநாள் வேலை செய்யாவிட்டால் உலகமே புரண்ட மாதிரியாய்விடும் அவர்களுக்கு? ஆனால், ஒரு மாதம் சம்பளங் கொடுக்காவிட்டாலும் ஒன்றுங் குடி முழுகிப் போய்விடவில்லை யென்பார்கள். (துக்கத்துடன்) வறுமையையும் படைத்து, வயிற்றையும் படைத்து விட்டாயே கடவுளே !

---

## காட்சி - 2

**இடம் :** எல்லப்பன் வீடு.
**காலம் :** அன்று காலை 9 மணி.

[ஆசிரியர் எல்லப்பன் பி. ஏ., எல். டி., ஒரு நாற்காலியில் அமர்ந்து மேஜையின் மேற் கிடக்கும் ஆங்கிலக் கட்டுரைப் பயிற்சிச் சுவடிகளைத் திருத்துகிறார். அவருக்கு எதிரே ஒரு சாய்வு நாற்காலியில் முனிசாமி முதலியார் பத்திரிகை படித்துக்கொண் டிருக்கிறார்.]

**எல்லப்பன் :** (வெறுப்புடன்) இந்தப் பையன்கள் தொல்லை கொடுக்கவே வந்தவர்கள் !

**முனிசாமி :** என் அப்படி ?

**எல்லப்பன் :** ஒரு வாக்கியமும் சரியாயில்லை. எல்லா வற்றையும் மாற்றி எழுத வேண்டியிருக்கிறது ?

**முனிசாமி :** என்ன ?

**எல்லப்பன் :** (எழுந்து ஒரு கட்டுரைச் சுவடியை எடுத்து அவரிடம் கொடுத்து) இதைப் படித்துப் பாருங் கள் ! பள்ளியிறுதி வகுப்புப் படிக்கிற பையன்கள் இப்படி எழுதினால் எப்படி ? ஒரு வாக்கியமாவது சரியா யிருக்கிறதா ?

**முனிசாமி :** (நகைத்துக் கொண்டு) மிகவும் பொறுமை யாகத் திருத்தி எழுதியிருக்கிறீர்களே !

**எல்லப்பன் :** வாத்தியார் வேலையைப்போல வேதனை யுடையது எதுவும் இல்லை ! பிழைகளையே பல நாளும் திருத்தஞ் செய்து கொண்டு இருக்க வேண்டியதுதான்.

**முனிசாமி :** இப்படி யெல்லாம் பொறுமையுடன் மாணவர்களைத் திருத்துவதனாலேதான் 'வாத்தியாருக்கு நரகமில்லை' என்கிறார்கள்.

**எல்லப்பன் :** இங்கேதான் இருக்கிறதே நரகம்— செத்த பிறகுமா கூடவரும் ?

**முனிசாமி :** அப்படியெல்லாம் வெறுப்பாய்ப் பேச வேண்டாம். வாத்தியார் வேலையிலே வேண்டிய ஓய்வு கிடைக்கிறது. எத்தனையோ பேர் உங்களிடம் படித்துப் பெரிய மனிதர்கள் ஆகிப் பெரிய உத்தியோகத்தில் இருப்பார்கள். அவர்களெல்லாம் உங்களை எங்கள் ஆசிரியரென்று மதிப்பார்கள். நீங்களும் எங்கள் மாணவர் களென்று களிப்படையலாம். அப்பா தன் பிள்ளையின் பெருமையைக் கண்டு களிப்பதைப் போன்றது அது ?

**எல்லப்பன் :** (நகைத்து) அந்த மதிப்பை ஏன் சொல்கிறீர்கள் ? நீங்கள் நினைப்பது ஏதோ பழைய கால முறையாக இருக்கலாம். இப்போது வகுப்பிலேயே பையன்கள் ஆசிரியரை மதிப்பதில்லை. கல்விக் கடலைக் கடக்க ஆசிரியர் தெப்பம். அந்தத் தெப்பத்தைக் கடலைக் கடந்தபின்னும் திரும்பிப் பார்க்கலாமா ? ஓய்வு அதிகமென்றீர்கள். உழைப்புக்கேற்ற ஓய்வே தவிர அதிகமென்பது அசட்டுத்தனம். நூறு வயதிருப்பவன் ஆசிரியர் வேலைக்கு வந்தால் ஐம்பது வயதிலேயே அருமையான உடம்பைப் போட்டுவிடுவானென்பது அனுபவ உண்மை !

**முனிசாமி :** என்ன இப்படிப் பேசுகிறீர்கள் ? 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்பதை அறியாதவர் யார் ? ஒருவன் தவறாக நடந்தால், 'எந்த வாத்தியாரடா உனக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்தவன்?' என்பார்கள். ஒரு பையனுடைய வாழ்க்கை வளர்வது—பண்படுவது பள்ளிக்கூடத்திலேதானே ? (கட்டுரைச் சுவடியைக் கொடுக்கிறார்.)

**எல்லப்பன் :** நீங்கள் கூறுவது ஏட்டுச் சுரைக்காய் தான். இன்றைய கல்வித்துறையிலே எவ்வளவோ குறைகள் இருக்கின்றன. அவைகளைக் கூற நேரமேது ? இவைகளை இப்போது எப்படியாவது திருத்தி யொழிக்கவேண்டும். இன்றைக்கு நான்காவது பயிற்சி கொடுக்க வேண்டும்.

**முனிசாமி :** அப்படியானால் திருத்துங்கள். ஆமாம், நீங்கள் கணக்காசிரியர்தாமே ? இந்த வேலை ஏன் ?

**எல்லப்பன்:** (ஒரு சுவடியைப் பிரித்துக்கொண்டு) ஏதாவது ஒரு வகுப்பு ஆங்கிலமும் எடுத்துக்கொள்ள வேண்டும்

என்று தலைமையாசிரியர் சொன்னார். எனக்குப் ஒரேயடியாகப் புள்ளி போட்டுக்கொண்டே இருப்பது தலைவேதனையாக இருக்குமென்று பட்டது; அதனால் எடுத்துத் தொலைத்தேன்.

**முனிசாமி :** அப்படியானால் நீங்களாகவே 'சணப்பன் வீட்டுக் கோழியைப்போல்' அகப்பட்டுக் கொண்டு இப்போது வருந்தலாமா?

**எல்லப்பன் :** இந்தப் பாழாய்ப்போன திருத்த வேலையொன்றுதான் உயிரை வாங்கி விடுகிறது. கல்லூரியாயிருந்தால் 'டியூட்டர்' என்று ஒருவரைப் போட்டிருப்பார்கள்.

**முனிசாமி :** (ஏதோ நினைவு வந்தவர் போல்) நல்ல வேளையாக 'டியூட்டரை' நினைவு கூட்டினீர்கள்.

**எல்லப்பன் :** என்ன அது?

**முனிசாமி :** மிராசுதார் சொக்கலிங்க முதலியாரைத் தெரியுமா உங்களுக்கு?

**எல்லப்பன் :** எனக்கு யாரையுந் தெரியாது. இங்கு வந்து ஓராண்டுகூட முடியவில்லையே! மேலும் உங்களோடுதான் பேசுகிறேன். வேறு யாரோடும் பேசுவதுமில்லை.

**முனிசாமி :** சரிதான்! சரிதான்! அவருடைய பையன் கண்ணப்பன் பள்ளியிறுதி வகுப்பிலேதான் படிக்கிறான்.

**எல்லப்பன் :** (ஒரு கட்டுச் சுவடியை எடுத்து) இந்தப் பையன்தானே? இப்போதுதான் யாரென்று புரிகிறது.

**முனிசாமி :** எப்படி?

**எல்லப்பன் :** ஆளழகாய் உடையுடுத்திக் கொண்டு நன்றாகத் தலையை வாரி விட்டுக்கொண்டு வருவான். பாடங்

கேட்டால் பல்லை இளிப்பான்! செல்லப் பிள்ளையாக இருப்பதாலேதான் கவலையின்றி இருக்கிறான்போலும்!

**முனிசாமி :** பரவாயில்லையே! நீங்கள் ஒருவாறு அவனை மதிப்பிட்டுவிட்டீர்கள். அவன் ஒரே பிள்ளை. அவன் தந்தையின் திரண்ட சொத்தை அவனேதான் பிற்காலத்தில் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**எல்லப்பன் :** (புன்முறுவலுடன்) பையனைப் பார்த்தால் அப்படித் திரண்ட சொத்துக்காகக் கவலையொன்றும் படமாட்டான்போலிருக்கிறது. அது போகட்டும். நீங்கள் என்னமோ கூற வந்தீர்களே, அதைக் கூறுங்கள்.

**முனிசாமி :** (கவலையுடன்) அப்படியானால் படிப்புமில்லை, ஒழுக்கமும் இல்லையென்கிறீர்கள்!

**எல்லப்பன் :** எனக்குப் படுவது அதுதான்! இருந்தாலும் நான் அவனை வகுப்பிலேதானே பார்க்கிறேன்? பையன்களுடைய நட்பாலும் பக்குவமின்றி யிருக்கலாம்.

**முனிசாமி :** (கவலை நீங்கியவராய்) என்வரைக்கும் அவன் நல்ல பையனே. சொக்கலிங்க முதலியார் எனக்கு மிகவும் வேண்டியவர். என்ன நான் சொல்வது?

**எல்லப்பன் :** (புன்முறுவலுடன்) சொக்கலிங்க முதலியாருக்காக நீங்கள் பேசுகிறீர்கள்.

**முனிசாமி :** ஆமாம். அவர் மிகவும் நல்லவர். அவருக்கு ஒரு டியூட்டர் வேண்டும்.

**எல்லப்பன் :** அவர் ஏதாவது படிக்கிறாரா?

**முனிசாமி :** (நகைத்து) கண்ணப்பனுக்குத்தான் வேண்டும்.

**எல்லப்பன் :** யாரைப் பிடிக்கப் போகிறீர்கள்?

**முனிசாமி:** உங்களைத்தான்! எவ்வளவோ பேர் வருவார்கள். எனினும் நீங்கள்தான் நன்றாகச் சொல்வீர்களென்று சொன்னேன். அவன் உங்களுக்குத்தான் அடங்குவான். மாசம் முப்பது ரூபாய் கொடுப்பார்.

**எல்லப்பன்:** (வியப்புடன்) என்ன முப்பதா? மாசம்பத்துத்தான்!

**முனிசாமி:** உங்களுக்கு வியப்பாக இருக்கிறது. அவருடைய செல்வத்திற்கு இன்னும் அதிகமாகவும் கொடுக்கலாம். எப்படியாவது பையன் செலக்ஷனில் தேற வேண்டும்.

**எல்லப்பன்:** பணமும் முப்பதாயிருக்க வேண்டும் பெண்ணும் முத்தாயிருக்கவேண்டுமோ? முப்பதல்ல, முன்னூறு கொடுத்தாலும் அவனுக்குச் சொல்லிக் கொடுக்க முடியாது. அதுவும் அவன் வீட்டிற்கு வந்து சொல்லிக் கொடுக்க முடியாது; சாத்தியமில்லை,

**முனிசாமி:** (கவலையுடன்) உங்களிடத்திற்கே வரச் சொல்லுகிறேன். நீங்கள் கேட்பதையும் கொடுக்கச் சொல்லுகிறேன்.

**எல்லப்பன்:** ஒரு மாதம் வரச் சொல்லுங்கள். சம்பளம் ஒன்றும் வேண்டாம். அப்புறம் சொல்லுகிறேன்.

**முனிசாமி:** (எழுந்து) அப்படியே. நான் போய் வருகிறேன்.

**எல்லப்பன்:** (எழுந்து கைகூப்பி) நன்று. போய் வாருங்கள்.

---

## காட்சி - 3

**இடம் :** சொக்கலிங்க முதலியார் வீடு.
**காலம் :** அன்று பகல் 2 மணி.

[தாமரைக்கண்ணி அம்மாளும் மங்கைநல்லாளும் ஒரு கட்டிலில் அமர்ந்திருக்கிறார்கள். மங்கை நல்லாள் ஒரு சவுக்கம் பின்னிக்கொண்டிருக்கிறாள். தாமரைக்கண்ணி வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கிறாள்.]

**தாமரை :** எப்பொழுதே பிடித்து வேண்டுகிறேன், சற்றே அந்த நளச் சக்கரவர்த்திகதையைப் படி படியென்று! என்னவோ எப்பவும் பின்னிக்கொண்டேயிருக்கிறாயே!

**மங்கை :** நானும் எப்பொழுதே பிடித்துச் சொல்கிறேன், எனக்கு அந்தக் கதையைப் படிக்கத் தெரியாதென்று?

**தாமரை :** பின்னே அந்தப் பாழாய்ப் போன பள்ளிக்கூடத்திலே என்னடி சொல்லிக் கொடுத்தார்கள்?

**மங்கை :** (வெறுப்புடன்) நான் என்ன படித்து விட்டேனாம்! சும்மா எட்டாவது படித்தால் வந்திடுமோ? என்னோடு படித்த மேரி, பூவை எல்லோரும் இப்போதும் அண்ணாமலையோடு பத்தாவது படிக்கிறார்களே!

**தாமரை :** அது என்னவோ அம்மா! நீ படிக்கிறதை நானா தடுத்துவிட்டேன்?

**மங்கை :** பின் யார் தடுத்தார்களாம்?

**தாமரை :** அது என்னவோ அம்மா! வயசுக்கு வந்த அப்புறம் படிக்கிறது நம் வழக்கத்திலே இல்லையே!

**மங்கை:** அப்படியானல், இப்பொழுது படிக்கிறவர்களுக்கு வயசு வல்லையா?

**தாமரை:** அது அவர்களுக்கு அடுக்கும்; நமக்குத் தகுமா? போகட்டும். அப்படியாவது படித்துவிட்டு எந்த உத்தியோகத்திற்கு ஓடப் போகிறாய்?

**மங்கை:** ஏன்? உத்தியோகத்திற்குப் போகக் கூடாதோ?

**தாமரை:** (சினத்துடன்) போடி பயித்தியக்காரி! அதை உங்கள் அப்பாவிடம் சொல்லிக்கொள்! (வேலைக்காரப் பெண் பூங்காவனம் ஒரு கூடையை இடுப்பில் வைத்துக்கொண்டு வருகிறாள்.) ஏண்டி! தம்பி சாப்பிட்டதா?

**பூங்கா:** (கூடையை இறக்கி வைத்து) என்னமோ எலி கொறிக்கிறாப்போல ரெண்டெடுத்து வாயிலே போட்டுக்கிட்டாரம்மா! (கீழே உட்காருகிறாள்)

**தாமரை:** என்னடி அப்படிச் சொல்லுகிறாய்?

**பூங்கா:** படித்துக்கிட்டேதானிருக்கிறார்! சாப்பாட்டு மேலே நினைவே ஏது?

**தாமரை:** (மகிழ்ச்சியுடன்) நன்றாய்ப் படித்துக் கலெக்டராக வரும்! பாரேன்!

**மங்கை:** (நகைத்து) ஆமாம்! பத்தாவது படித்துவிட்டால் கலெக்டராகத்தானா வரமுடியும்? அதற்கு மேலுங்கூட வரலாம்!

**தாமரை:** அப்படியாடி நான் சொன்னேன்? பெரிய படிப்பெல்லாம் படித்துவிட்டு வருமென்று சொன்னேன்.

**மங்கை:** இந்தப் படிப்பை முடித்தாலே ஆஞ்சநேயருக்கு வடை மாலை சார்த்தலாமே!

**பூங்கா:** என்ன சின்னம்மா! அப்படின்னு உங்க அண்ணாச்சி நல்லாப் படிக்கலேயின்னு சொல்றே? அப்படியின்னு கையிலே வைச்சிருந்தது என்ன!

**மங்கை:** அதுவா நாவல் புத்தகமாக இருக்கும்! வேறே அதைப்போல ஏதாவது இருக்கும்; அது பாடமா என்ன?

**பூங்கா:** (வியப்புடன்) எனக்கு என்ன தெரியும்? படிக்காத மூடந்தானே அம்மா?

**மங்கை:** நீ ஏண்டி படிக்கக் கூடாது?

**பூங்கா:** யாரம்மா படிக்கவைப்பாங்க? துணிக்கும் சாப்பாட்டுக்குமேதான் தப்படிக்கிறோமே? நானும் எங்கம்மாளும் என்ன உழைத்தாலும் அரை வயிற்றுக் கஞ்சி கூடக் கிடைக்கலியே?

**தாமரை:** ஏண்டி பெண்ணே! தம்பி மீதி சாப்பாட்டை என்னடி பண்ணிற்று?

**பூங்கா:** அந்தச் சாப்பாட்டை ரெண்டுபேர் சாப்பிட்டாங்கம்மா!

**தாமரை:** அது யாரடி?

**பூங்கா:** நம்ப சின்ன முதலியாரும் அவங்க கூட்டாளியுந்தாம்மா!

**மங்கை:** கன்னியப்பனாக இருக்கும் அம்மா!

**தாமரை:** அவனுக்குச் சாப்பாடு வராதோ?

**மங்கை:** இல்லையம்மா! அது வீட்டுக்குப் போய்த் தான் சாப்பிட்டுவிட்டுவரும். அண்ணன்தான் கூப்பிட்டிருக்கும்.

**பூங்கா :** ஆமாம்மா! அவரு போரேண்ணுதான் சொன்னரு. நம்ப சின்ன முதலியார்தான் தொந்தரவு செய்தாரு! அது இருக்கட்டும் அம்மா! நம்ப சின்ன அம்மாவைப்போல இருக்கிற பொண்ணுங்களெல்லாம் கொஞ்சங்கூடக் கூச்சமில்லாமே ஆம்பளங்களோடே உக்காந்து படிக்கிருங்கம்மா; இதே மாத்திரம் ஏம்மா நிறுத்திப்பூட்டிங்க ?

**மங்கை :** (நகைத்து) அப்படிக் கேளடி !

**தாமரை :** போதும் போதும்! பிள்ளை படிச்சு வாரிக் கொட்டுதே ! பெண்ணும் வாரிக் கொட்டாதே போறற் போகுது ! நீ பேசாதே போய்த் துணியைத் துவைச்சுப் போடு-போ !

**பூங்கா :** ஆகட்டும் அம்மா! இதோ போறேன். ஒண்ணு உங்களே...கேக்கணும்ணு இருந்தேம்மா !

**தாமரை :** என்ன ?

**பூங்கா :** (நாணத்துடன்) இந்தத் துணி (உடுத்தியிருக்கும் துணியைக் காட்டுகிருள்) உள்ளேல்லாம் கிழிஞ்சு போயிருக்குதும்மா! இதுக்கு மாத்துத்துணிகூட இல்லே! நல்ல துணியா ஒண்ணு வேணும்மா! பள்ளிக்கூடத்துக்குச் சாப்பாடு எடுத்துக்குணு போறதுக்கு வெக்கமா இருக்குது!

**தாமரை :** (நகைத்து) நல்ல கதையில்லையா ? யாரோ ஒரு சாமியார் கோவணம் கசக்கிப் போட ஓராள் வைத்தாணம்! அப்புறம் அந்த ஆளுக்குச் சாப்பாடு, துணிமணி, பெண்டாட்டி, அப்படியாக சம்சாரம் பலத்துதாமே? அப்படி யிருக்கிறது கதை !

**பூங்கா :** (வாடிய முகத்துடன்) என்னம்மா !

**தாமரை :** என்னவா ? பின்னே என்னடி ? அரைப் பணத்துக் கோழி ஐம்பது பணத்து நெல்லைத்தின்ற கதை யாக, நீ செய்யும் வேலைக்குச் சம்பளம் ரூபாய் ஒன்று, மீதி சோதி இருக்கும் சோறு, எல்லாம் தொலைப்பது மில்லாமே துணி வேறேயா ? ஒரு புடவை இப்போது என்ன விலை தெரியுமா? பத்து ரூபாய் ! நீ வேறே யிடத்திலே வேலை செய்தால் இந்த ரேஷன் காலத்திலே ஒரு பருக்கைகூடக் கிடைக்காது ! பிரியமிருந்தால் செய் ! இல்லாவிட்டால் போ !

**பூங்கா :** (கண்ணீர் ததும்ப) கோவிச்சிக்காதிங்கம்மா இதோ போறேன் (போகிறாள்.)

**மங்கை :** என்னம்மா ; என்னைப்போலேதானே அவ ளும் ஒரு பெண்.

**தாமரை :** (வியப்புடன்) என்னடி சொல்கிறாய் ? உன்னைப் போல் அவளும் மிராசுதார் பெண்ணா ?

**மங்கை :** (வியப்புடன்) மானத்தை மறைக்கத் துணி கட்டக்கூட மிராசுதார் பெண்ணாயிருக்க வேண்டுமா ?

**தாமரை :** யார் அவளைத் துணி வாங்கிக் கட்டிக் கொள்ளாதே என்றார்கள் ?

**மங்கை :** அவள் எப்படி வாங்கிக் கொள்வாள் ? நாளெல்லாம் இங்கே வேலை அவளுக்கு ! சரியாக வயிற்றுக் கும் சோறு இல்லை! ஆனால், ஒரு வேலையுமே செய்யாத நான் மட்டும் மூன்று நான்கு வேளை மூக்கைப் பிடிக்கச் சாப்பிடுகிறேன் ! பத்துப் பதினைந்து புடவைகளை மாற்றி மாற்றிக் கட்டிக் கொள்ளுகிறேன். நம்மைப்போல் ஒரு பெண் நமக்காக உழைக்கிறாள். அவளுக்கு வயிற்றுக்குப் போதுமான சாப்பாடும், முழுசாகக் கட்டிக்கொள்ள ஒரு

துணியுங்கூட இல்லையானால், இது பெரிய கொடுமை யில்லையா அம்மா?

**தாமரை :** (வியப்புடன்) அடி அம்மா! என்னடி இந்தப் பெண் என்னென்னமோ சொல்லுதே! அப்படி யெல்லாம் அவளுக்கு வாங்கிக் கொடுத்தால் கட்டுமாடி!

**மங்கை :** (வெறுப்புடன்) கட்டுமாடி! ஒரு துணி கொடுப்பதாற் குடியா முழுகிப் போய்விடும்? நான் என் துணியில் கொடுக்கிறேன்!

**தாமரை :** (கோபத்துடன்) சீ போ! ஏது நிரம்பவுந் தெரிந்தவளைப்போல் பேசுகிறாயே! உனக்குக் கல்யாண மான அப்புறம் உங்கள் முதலியார் சம்பாதனையிலே கொடு, போ! இப்போது எங்களாலே கொடுக்க முடி யாது! வேலைக்குத் தகுந்த கூலிதான் கொடுக்கலாம்? (எழுந்து வெளியே போகிறாள்.)

**மங்கை :** (வெறுப்புடன்) அட தெய்வமே! ஏழை யாய்ப் பிறப்பதே பெரும் பாவம்!

---

## காட்சி - 4.

**இடம் :** சொக்கலிங்க முதலியார் வீட்டின் பின்புறம், கிணற்றடி.
**காலம் :** அதே நாள்—பகல் 3 மணி.

[பூங்காவனம் கண்ணீர் விட்டுக்கொண்டே துணி துவைக்கத் தண்ணீர் மொண்டு ஊற்றுகிறாள், மங்கை வருகிறாள்.]

**மங்கை :** (கயிற்றைப் பிடித்துக் கொண்டு) நான் மொண்டு ஊற்றுகிறேன். நீ துணியைத் துவைத்துப்

போடு. (அவள் முகத்தைப் பார்த்து) ஏன் அழுகிறாய்? நான் என் புடவையில் ஒன்று தருகிறேன்.

**பூங்கா:** (கயிற்றை விடாமல்) வேண்டாம்மா! நீ போ. அம்மா வந்தாக்கா என் வேலையே போய்விடும்! எங்கம்மா வேறே என்னை அடிப்பாங்க!

**மங்கை:** உன் வேலைக்கு நான் இருக்கிறேன். (அன்புடன்) நீ என்னைவிடச் சின்னவள். நான் குந்தாணி போல உட்கார்ந்திருக்கிறேன்! நீ ஓய்வு ஒழிச்சல் இல்லாதே வேலை செய்கிறாய்! (தண்ணீர் இழுக்கிறாள்).

**பூங்கா:** (கூடவே இழுத்துக் கொண்டு) உனக்கென்னம்மா! நல்ல எழுத்து நடுவே யிருக்கும்போது கோண எழுத்துக் குறுக்கேயா வரும்? உனக்கு இந்தத் தங்கமான மனசு இருக்கிறதே போதும்!

(தண்ணீரை ஊற்றுகிறாள்)

**மங்கை:** என்ன தங்கமான மனசு? நான் உன்னைவிட எந்த விதத்தில் தங்கமென்று சொல்!

**பூங்கா:** (நகைத்து) எல்லாவிதத்திலேயும் தங்கந் தானம்மா? கடவுள் புண்ணியத்திலே பணமிருக்குது, படிப்பு இருக்குது, குணம் இருக்குது! எனக்கு என்னம்மா இருக்குது? (துணியைத் துவைக்கிறாள்)

**மங்கை:** (துணியைப் பிடுங்கி வைத்துவிட்டு) நீ சொல்வது பெரிய தப்பு! இதோ பார்! நீ இல்லாதுபோனால், இந்த வீட்டு வேலையெல்லாம் எப்படி நடக்கும்? என்னைப் போல் சோம்பேறி என்ன செய்ய முடியும்?

**பூங்கா:** நான் இல்லாதபோனா வேறே ஒருத்தி வருவாள் காசை வீசி எறிஞ்சா!

**மங்கை:** எப்படியும் இன்னொரு வேலைக்காரியாவது வந்துதானே தீரவேண்டும்? ஆகவே, நீதானே உயர்ந்தவள்?

**பூங்கா:** (வாயிலே கையை வைத்து மூடிக்கொண்டு) இதுதானும்மா நீ படிச்சது?

**மங்கை:** ஆமாம்! இந்தப் படிப்புக்கென்னடி?

**பூங்கா:** நீ சொல்றபடி நடக்கணும்னு உலகமே புரண்டுபூடாதா? கீழுமேலுண்ணு ஒண்ணுமே யிருக்காது.

**மங்கை:** கீழ்மேலென்றால் என்னடி? வேலை செய்பவர்கள் தாழ்ந்தவர்கள், சோம்பேறியாக உட்கார்ந்து கொண்டு அவர்கள் உழைப்பிலே சாப்பிடுகிறவர்கள் உயர்ந்தவர்களா?

**பூங்கா:** அப்படிச் சொல்லப்படாதம்மா! நீங்க முன் பிறப்பிலே புண்ணியம் பண்ணினதாலே சுகமா இருக்கிறீங்க. நாங்க செய்தது பாவம். அதனாலே வயிற்றுக் கொடுமைக்காக உழைக்கிறோம்.

**மங்கை:** (கண்ணீர் வடிய) பூங்காவனம்! இனிமேலே இந்தமாதிரிப் பேசாதே! நீ நாளெல்லாம் உழைக்கிறாய்! வயிற்றுக்கும் சோறில்லை; கட்டவும் துணியில்லை! சும்மா இருக்கிற நானோ சுகமாக உட்கார்ந்திருக்கிறேன். இதை எந்தப் பாவ புண்ணியத்திலே சேர்க்கிறது? எனக்குத்தானே பாவம்?

**பூங்கா:** நான் தானேம்மா வலிய வந்து வேலை செய்கிறேன்? வேலை செய்தால் கூலி கிடைக்கிறது.

**மங்கை:** நான் சொல்வது உனக்கு ஏன் புரிகிறது? உழைத்துழைத்து உன் உடம்பிலே உணர்ச்சியே செத்துப் போச்சே!

**பூங்கா:** அது என்னமோ, நீ சொல்வது ஒண்ணுந் தான் புரியலே! ஆனா, என் வேலே எனக்குப் புரியத்தாம் புரியுது.

**மங்கை:** என்ன உன் வேலே?

**பூங்கா:** அம்மா, நீ, பெரிய முதலியார், சின்ன முதலி யார் இடும் வேலேயெல்லாஞ் செய்வதுதான்! சாப்பிட்டு மீந்ததைப் போட்டாச் சாப்பிடுவது! துணிகிணி வேணுண்ணு கெஞ்சி கேட்டு வாங்கிக்கிணும்.

**மங்கை:** (வருத்தத்துடன்) என்ன சொன்னாலும் உனக்கு எருதுபோலிருக்கிறதே. (சிந்திக்கிறாள்)

**பூங்கா:** (வருத்தத்துடன்) நீ போம்மா! அம்மா வந்தா கோவிச்சுக்குவாங்க! (துணி துவைக்கத் தொடங்கு கிறாள்.)

**மங்கை:** (அதைத் தடுத்து) நான் சொல்லும் வேலே யையுஞ் செய்வாயா?

**பூங்கா:** செய்யமாட்டேன்னு சொன்னேன்?

**மங்கை:** இனிமேல் நான்தான் உனக்குச் சோறு போடுவேன். அதுவரைக்கும் நீ எங்கேயும் போகக் கூடாது. (துவைக்க வைத்திருக்கும் புடவைகளில் ஒன்றைக் கொடுத்து) இதை நீ கட்டிக்கொள்ள வேண்டும். ...உம்...அப்புறம், ஒவ்வொரு நாளும் நான் பாடம் சொல்லித் தருவேன்; படிக்க வேண்டும்! என்ன? செய்வாயா?

**பூங்கா:** (நகைத்து) சரிதான்! நாளேக்கே நான் வேலேயே விட்டுவிட்டு ஓடிப்போவணும். அதுக்குத்தான் நீ இப்படியெல்லாம் பண்றே!

**மங்கை:** என்மேல் நம்பிக்கையில்லேயா!

**பூங்கா :** என்மேலே நீ வைச்சிருக்கிற ஆசையாலே நீ என்னென்னமோ சொல்றே. பெரியவங்க அதுக்கெல்லாம் ஒத்துக்குவாங்களா ?

**மங்கை :** அவர்களை ஒத்துக் கொள்ளச் செய்வது என் வேலை. முடியவில்லையென்றால், நானும் உன் கூடவே வந்து விடுகிறேன்.

**பூங்கா :** (கும்பிட்டு) வேண்டாமம்மா ! நீ இவ்வளவு சொல்றதே போதும். அம்மாவுக்கு எதிரா ஒண்ணுஞ் சொல்லாதே. 'உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா ?' வேலைக்காரிக்குத் தகுந்தாப்போலேதானே நானு இருக்கணும் ?

**மங்கை :** (அன்புடன்) நான் சொல்கிறபடி கேட்பது இதுதானா ? (வீட்டிலிருந்து அன்னை கூப்பிடுகிறாள்) ஏன் அம்மா !

**பூங்கா :** (நடுங்கி) ஐயையோ ! நீ போம்மா ! (துணி துவைக்கிறாள்.)

**மங்கை :** (துணியைப் பிடித்துக்கொண்டு) கூடாது ; நான் சொல்கிறபடி செய்.

**பூங்கா ;** (நடுங்கி) ஐயோ ! வேண்டாம்மா ! உனக்கும் பேச்சுக் கிடைக்கும், போ.

**மங்கை :** பேசாமல் மணிக்கட்டைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திரு. இல்லையோ, உனக்குத்தான் பேச்சுக் கிடைக்கும் ! (பூங்காவனம் மணிக்கட்டைப் பிடித்துக்கொண்டு அழுகிறாள். மங்கைநல்லாள் துணி துவைக்கிறாள். தாமரைக்கண்ணி வருகிறாள்) பூங்காவனம் ! கை மிகவும் வலிக்கிறதா ?

**தாமரை :** என்னடி கையிலே? நீயேன் மங்கை, துணி துவைக்கிறாய்?

**மங்கை :** (துணி துவைத்துக் கொண்டே) தண்ணீர் இறைக்கும்போது மணிக்கட்டுப் பிசகிவிட்டதாம்! பாவம். ஒன்றும் முடியாமற் பேசாமல் உட்காந்துவிட்டாள்!

**தாமரை :** அதற்காக நீ துவைக்கிறாயோ? (பூங்காவனத்தைப் பார்த்து) போடி! உங்க அம்மாளைக் கூப்பிட்டு வா! மங்கை! உன்னாலே முடியாது, போட்டுவிடு.

**மங்கை :** ஏன், நானென்ன சோம்பேறியா? இல்லே! பொம்மையா?

**தாமரை :** (திகைத்து) என்னடி அம்மா! அதற்கென்று ஆளிருக்கும்போது நாம் ஏன் துவைக்க வேண்டும்? சம்பளம் வாங்கவில்லையா? போடி, பூங்காவனம்!

**மங்கை :** நல்லது! இவளுக்குத்தான் சம்பளங் கொடுக்கிறோம். இவள் அம்மாவுக்கும் சம்பளங் கொடுக்கிறோமா?

**தாமரை :** அது என்னவோ அம்மா! எனக்குச் சட்டம் கிட்டம் ஒன்றும் தெரியாது. ஏண்டி நிற்கிறாய்? பூங்காவனம்!

**மங்கை :** பூங்காவனம்! நீ போகாதே. நான்தான் இன்றைக்குத் துணி துவைப்பேன். இன்றேல் என் உடல் வலிமையின்றி மெலிந்துவிடும்!

**தாமரை :** ஐயோ! என்னடி அம்மா! என்னவோ இலக்கணத் தமிழ் பேசுகிறாய்? எப்படியாவது போ. (போகிறாள்)

---

## காட்சி - 5

**இடம் :** சொக்கலிங்க முதலியார் வீடு.
**காலம் :** அன்று பகல் 4 மணி.

[சொக்கலிங்க முதலியார், வெளி வராந்தாவில சாய்வான நாற்காலியில் அமர்ந்திருக்கிறார், முனிசாமி முதலியார் வருகிறார்).]

**சொக்க :** என்ன முதலியார்! வாருங்கள். அந்த வாத்தியார் ஒத்துக்கொண்டாரா?

**முனி :** நான் சொன்னதும் ஒத்துக் கொண்டார். ஆனால், நம்முடைய பையன்தான் பையலாவாது படிப்பானு என்பது தெரியவில்லை. சரக்கை வைக்கும் பை ஓட்டையா யிருக்கிறதே!

**சொக்க :** ஆமாம், என்ன செய்யலாம்? நம்மால் ஆனமட்டும் பார்த்துவிட்டால், அப்புறம் எப்படியாவது போகிறான். குதிரைக் குக் கொள்ளு கட்டலாம்; தின்னு விட்டால் என்ன செய்வது?

**முனி :** நான் அதற்குச் சொல்லவில்லை. அவனைத் திட்டம் பண்ண வேண்டுமென்கிறேன்.

**சொக்க :** அப்படியே செய்வோம். அவர் என்ன சம்பளம் கேட்கிறார்.

**முனி :** அவர் கேட்பாரா என்ன? நாமே அவர் மதிப்புக்கேற்றவாறு கொடுக்க வேண்டும்.

**சொக்க :** என்ன கொடுக்கலாம்?

**முனி :** குறைந்தது முப்பது ரூபாயாவது கொடுக்க வேண்டாமா?

சொக்க: (வியப்புடன்) அப்பாடா! அவ்வளவா? அந்தப் பை கொள்ளுமா? இப்போது பள்ளிக்கூடத்தில் என்ன வாங்குகிறார்?

முனி: எண்பது ரூபாய். நீங்கள் ஏன் இப்படி நினைக்கிறீர்கள்? பத்தாவதுக்குப் பாடம் இரண்டுக்குக் கணக்கே அதுதான்.

சொக்க: ஓ! அது வேறேயா? நம் நிலை அதைத் தாங்காதுபோல இருக்கிறதே!

முனி: (திகைத்து) ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்? உங்கள் நிலைக்கென்ன?

சொக்க: என்னவா? 'பேரு பெத்த பேரு, தாகுடகு நீளு லேது' என்ற தெலுங்குக் கதைதான்! வரும் வரும்படியெல்லாம் படியளக்கத்தானே பற்று கிறது? வீட்டிலே அன்றாடம் விருந்தும் பத்துப் பேருக்குக் குறையாமற் பற்றுகிறது?

முனி: வேளாண்மையே உபகாரந்தானே? மேலும் விருந்தில்லாத சோறு மருந்தென்பதும் உங்கள் உள்ள நிலை.

சொக்க: நீங்கள் கூறுவது உண்மையே. (புன்முறு வலுடன்) மேலும், சாப்பிடும் நண்பர்கள் குறை கூறாத வண்ணம் இரண்டு மூன்று வகைக் கறிகள், வடை, பாயசம், கெட்டித் தயிர், நெய் எல்லாம் வேண்டுமென்பது என் எண்ணம்.

முனி: தெரிந்த கதைதானே? நீங்கள் அடிக்கடிக் கூறுவீர்களே இதை! நான் கூட இரண்டொரு முறை இனிமையாகச் சாப்பிட்டிருக்கிறேன். வயிறாரச் சாப்

பிட்டவன் வாயாரச் சொல்ல வேண்டாமா? அறுசுவை உண்டியை ஆர அமர்ந்து உண்டேன்.

**சொக்க:** (நாணத்துடன்) ஆனால், நீங்கள் வரும் போதெல்லாம் பார்க்கிறேன், ஏதாவது குறை நேர்கிறது! எல்லாம் நன்றாய் இருக்கும்போது வந்து சாப்பிட்டதே யில்லை.

**முனி:** என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? நான் சாப்பிட்ட போதெல்லாம் வடை பாயாசமாவது கெட்டித் தயிராவதுதான் இல்லாமலிருக்கும்! கறிவகைகளிலும் ஒன்றிரண்டு தான் குறைவாக இருக்கும்! கொடுத்து வைக்க வேண்டாமா? 'கற்பகத்தைச் சார்ந்தார்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்—முற்பவத்திற் செய்த வினை' தானே? இருந்தாலும் தங்கள் விருந்தை நினைத்தால் நாவில் நீர் ஊறுகிறது! வீராசாமி முதலியாரைப் போலும் ஆராவமுத ஐயங்காரைப் போலும், 'எல்லாம் வெளி மயக்கே' ஆகப் பேசும் வழக்கமுண்டா உங்களுக்கு?

**சொக்க:** அந்தக் குறையெல்லாம் நம் பையன்பிறந்த நாள் விழாவிலே அகற்றி விடுகிறேன்.

**முனி:** கண்ணப்பன் பிறந்த நாள் விழாவா? அப்படி யானால் பெரிய திட்டங்களெல்லாம் இருக்கும்!

**சொக்க:** நண்பர்களோடு விருந்துண்பது அன்று சற்று அதிகமாகவும் பலமாகவும் இருக்கட்டுமே யென்றொரு திட்டம் போட்டேன். படியாட்களுக்குக்கூட விருந்தும் வேட்டியும் அளிக்க வேண்டுமென்று மங்கை தலையாலே தண்ணீர் குடிக்கிறாள். எனக்கென்னவோ அன்றைக்குப் போய்த் தீண்டத் தகாதவர்களுக்கு ஏதும் கொடுக்கக்கூடா தென்று எண்ணம்

முனி: அப்படியானால்.........?

சொக்க: என்ன செய்வது? மங்கையின் கண்ணீரை யுந் துடைக்க வேண்டாமா? கதம்பமாகப் பிசைந்து ஒவ்வோருருண்டை போட்டு விட்டாற்போகிறது. அவளுக்கு வேலைக்காரரென்றால் ஒரு மாதிரி அன்பு உண்டு. அவர்களும் சின்னம்மா சின்னம்மா என்று உயிரை விடுவார்கள். அது இருக்கட்டும். அன்றைய விருந்துக்குக் கலெக்டரும் வருகிறார். ஆகவே, விருந்து முதல்தரமாகத் தனிச் சிறப்புடன் ஏற்பாடு செய்யப் போகிறேன்.

முனி: அவர் ஒப்புக்கொண்டாரா?

சொக். ஆள் ஒரு மாதிரிதான்! இருந்தாலும் சொக்கலிங்கம் முயற்சி சோர்வடைந்து போனதுண்டா? விருந்துடன் இசையரங்கும் ஏற்பாடு செய்யப் போகிறேன்! நம் வறட்டாற்றுப் பங்களாவிலேதான் எல்லாம். காலையில் சிற்றுண்டி—பதினொரு மணிக்கு விருந்து—மாலை மூன்று மணிக்குத் தேநீர்—ஐந்து மணிக்குக் குயில்மொழி கோமளம் இசையரங்கு—இரவு 8 மணிக்கு மறுபடியும் நிலாச் சாப்பாடு.

முனி: (குதூகலமாய்) அப்படிச் சொல்லுங்கள்!

சொக்: இவ்வளவும் கலெக்டருக்குத்தான்! இல்லாவிட்டால், இந்த மாசம் படியாட்களுக்குங் குமஸ்தாவுக்குங் கூடச் சம்பளங் கொடுக்காமல் கடன்வாங்கிச் செய்வேனா? அது இருக்கட்டும். அந்த வாத்தியாரைப் பற்றிச் சொல்லுங்கள். அவருக்குப் பதினைந்து ரூபாய் போதாதா?

முனி: என்ன, அந்த வாத்தியாரென்கிறீர்கள்? வாத்தியாரென்றால் மதிப்பில்லாதவரா?

**சொக்:** உலகத்திலே இல்லாததை உண்டு என்று உரைப்பதெப்படி?

**முனி:** வாத்தியாரின் வேலை மக்களின் அறிவை விளக்குவது; அதை மதிப்பில்லாத வேலையென்றால் வேறு எதை மதிப்பது?

**சொக்:** (புன்முறுவலுடன்) போகட்டும், உங்கள் விருப்பப்படியே ஏற்பாடு செய்துவிடுங்கள்.

**முனி:** நான் சொல்லிப் பார்க்கிறேன். அவர் என்ன சொல்வாரோ? (பூங்காவனம் சிற்றுண்டியுங் காப்பியும் கொண்டுவருகிறாள். இருவருக்கும் எதிரில் மேசைமேல் வைக்கிறாள்.)

**சொக்:** அப்படிச் சொல்லாதீர்கள்; எப்படியாவது முடிவு செய்துவிடுங்கள். காப்பி ஆறுவதற்குள் சாப்பிடுங்கள். (இருவரும் சாப்பிடுகிறார்கள்)

---

## காட்சி - 6

இடம்: சொக்கநகர் உயர்நிலைப்பள்ளியில் ஒரு மரத்தடி
காலம்: அன்று மாலை 6 மணி

[கண்ணப்பன் அமர்ந்திருக்கிறான். கன்னியப்பன் வருகிறான்.]

**கண்:** என்னடா, இவ்வளவு நேரம் காக்க வைத்தாய்?

**கன்:** (புன்முறுவலுடன்) மன்னித்துக்கொள்ளப்பா! ஆய்வுகளத்தில் கொஞ்சம் செய்முறை வேலை தொந்தரவு கொடுத்தது. (அமர்கிறான்)

**கண் :** அப்படிப் பாடத்திலே மூழ்குகிறவன் என்னை யேனிருக்கச் சொன்னாய் ?

**கன் :** அப்படி உன்வேலை என்ன அழிந்தது ?

**கண் :** காப்பிக் குடிநேரம் கடந்தது. தலைவலிக்கிறது.

**கன் :** (நகைத்து) உனக்குப் பாலுங் காப்பியும் சர்க்கரையும் சேர்ந்த காப்பியில்லாமல் தலைவலி. ஆனால் எண்ணற்ற ஏழைகட்குச் சோறும் உப்பும் நீருங் கலந்த கஞ்சியில்லாமல் வயிற்றுவலி ! எந்த வலி தொந்தரவு ?

**கண் :** (நகைத்து) எல்லாந் தொந்தரவுதான் ! ஏழைகளைக் காப்பி குடிக்க வேண்டாமென்று எவர் தடுத்தார் ?

**கன் :** (வெறுப்புடன்) சட்டியிலிருந்தாலன்றோ அகப்பையில் வரும் ? சட்டியிலிருப்பதைப் பெருவயிற்றுப் பூதங்களாகிய நீங்கள் பிடுங்கிக் கொள்கிறீர்கள் !

**கண் :** நாங்களா பிடுங்கிக் கொண்டோம் ? அவர்கள் வினை !

**கன் :** என்ன வினையப்பா அது ?

**கண் :** முற்பிறப்பிலே பசித்தவர்க்குக் கொடாமல் உண்டவர்களாக இருப்பார்கள்.

**கன் :** (நகைத்து) இது ஒரு சொக்குப்பொடி தர்மம் ! அப்படியே அதை ஒத்துக்கொண்டாலும், இப்போது அந்த ஏழைகள் அரைவயிற்றுக்கும் இல்லாமல் அல்லற் பட்ட உழைப்புப் பொருளை ஆர அமர அமர்ந்து உழைப் பின்றி உண்பவர்கள், வரும் பிறப்பில் அல்லலுற வேண்டி யதுதானே ?

**கண் :** (சிந்தனையுடன்) ஆமாம் !

**கன் :** மேலும் ஒரு கூட்டத்தாரே வருந்தி உழைக்க, அதன் பயனை மற்றொரு கூட்டத்தாரே வழி வழியாக உண்ணும் ஊழ்வினையும் இருக்குமோ?

**கண் :** அப்படித்தானே உலகம் நடக்கிறது?

**கன் :** உலகம் யாரால் நடக்கிறது?

**கண் :** உயர்ந்தோரால் நடக்கிறது.

**கன் :** உயர்ந்தோரென்று நீ யாரைக் கூறுகிறாய்! நகத்தில் அழுக்குப்படாமல் நிழலில் இருந்துகொண்டு மக்களுக்கு ஒழுக்கம் வகுத்தவர்களைத்தானே?

**கண் :** அவர்களைத்தான். பின் யார் ஒழுக்கம் வகுப்பார்கள்? பகுத்தறிவின்றி மாடுகளைப்போல் உழைப்போர்க்கு எந்த அறம் தெரியும்?

**கன் :** உழைப்பின் அருமையறியாத உயர்ந்தோர்கள் தங்கள் நலத்தை நாடியே ஒரு கூட்டத்தையே உழைக்க வழி செய்து விட்டார்கள். அவர்களுக்கு முதலுமில்லை! நிலமுமில்லை! ஆகையினாலே, நீங்கள் காப்பிக் குடி தவறியதே யென்று தவிக்கவும், அவர்கள் பசித்தபோது கஞ்சியுமில்லையே யென்று கலங்கவும் நேர்ந்தது.

**கண் :** நீ கூறுவது உண்மை.

**கன் :** உண்மையென்று ஒப்புக் கொள்வதால் மட்டும் அவர்களுக்கு நன்மை செய்ததாகி விடுமா? வாய்மொழியால் வயிறு நிரம்பாது.

**கண் :** (புன்முறுவலுடன்) பின் என்ன? தொழிலாளர்களுக்காக உழைக்க வேண்டுமென்கிறாயா?

**கன் :** ஆம்.

**கண் :** நாமா உழைக்க வேண்டும்?

கன் : என்ன, நாமா என்கிருய்? செல்வ மிகுந்த உன்னைப் போன்றவர்கள் உழைப்புக்கே மதிப்புண்டு. என்னைப் போன்ற ஏழைகளின் உழைப்பு நலந்தராது. படிப்பு முடிந்தவுடன் இத்துறையிலே உழைக்க உறுதி செய்து கொள்வோம்.

கண் : (நகைத்து) அப்படியே செய்யலாம். இதற்காகவா என்னை நிறுத்தினய்?

கன் : இதற்கன்று. நீ காப்பிக்குடியை நினைவுபடுத்தியதால் நேர்ந்த நன்மையன்றோ இது! இன்னும் பத்து நாளில் உன் பிறந்த நாள் வருகிறதாமே; உண்மையா?

கண் : ஆமாம்! அதைப்பற்றி என்ன?

கன் : அன்று நடைபெறும் நிகழ்ச்சிகள் என்ன?

கண் : (நகைத்து) அந்தணர்களுக்கு வயிற்றுக் குணவும் வாய்க்குத் தாம்பூலமும் செலவுக்குப் பணமும் உடுக்க உடையும் உண்டு. செல்வ நண்பர்களுக்கு வாய்க்கு மட்டுமன்று; கண்களுக்கும் காதுகளுக்குங் கூடப் பல்வகை விருந்துகளுண்டு.

கன் : உன் வேலையாட்களுக்கு?

கண் : அவர்களுக்கும் விருந்துதான்.

கன் : என்ன விருந்து?

கண் : சோற்றுக் கதம்ப உருண்டை ஒவ்வொன்று.

கன் : சீ! இவ்வாறு கூற எள்ளளவேனும் நாணமில்லையா உனக்கு? இந்நேரம் என்ன பேசினேம்? அறிவாளிகளென்ற கயவர்கள் அறிவில்லாதவர்களென்ற ஒரு கூட்டத்தாரை ஏமாற்றி வாழும் முறை இதுதானே? நல்ல காலமாக இப்போது உனக்கு முதன்முறையான வாய்ப்புக் கிடைத்தது. என்ன செய்யப்போகிருயோ, பார்ப்போம்.

**கண்:** (கண்ணீர் ததும்ப) நண்பா! என்னால் என்ன முடியும்? அதை நடத்துவது வலிய, பயிற்சியுள்ள கையன்றோ? நாம் அதைத் தடுக்க முடியுமா? நானும் ஊனாலும் இரத்தத்தாலும் மட்டும் ஆனவனல்ல; உணர்ச்சியாலும் சிந்தனையாலும் ஆனவனே. நீ கூறுவதற்கு முன்னிருந்தே நான் இதனால் அலைக்கப்பட்டு வருகிறேன்.

**கன்:** (அன்புடன் தழுவிக்கொண்டு) காலம் சூழ்ச்சியையும் வலிமையையும் அளிக்கும். என்னாலான சிறு பணியும் உனக்காகும். இன்னொன்றும் உனக்குக் கூற வேண்டும்.

**கண்:** அதையுங் கூறு!

**கன்:** வகுப்பிலிருக்கும்போது அடிக்கடிப் பெண்கள் பக்கம் பார்க்கிறாய்! இது நன்றா?

**கண்:** (நாணத்துடன்) அந்தப் பெண் மேரியின் அழகு என்னை அப்படிச் செய்கிறது. அமைதியான, சாந்தமான அவள் கண்கள் என் எண்ணங்களையும் அமைதியுறச் செய்கின்றன.

**கன்:** (புன்முறுவலுடன்) ஆகையால், உன்படிப்பும் அப்படியே அமைந்துவிடும்.

**கண்:** (நகைத்து) பொல்லாத படிப்பு! வாழ்க்கையிலே, எப்போதும் அடிமை உத்தியோகத்திலே கிடப்பதற்குத் தகுந்த படிப்பு! இப்படிப்பால் என்ன நன்மை?

**கன்:** நீ கூறுவது உண்மையே. ஆயினும், என்னைப் போன்றவர்கள் படித்தால்தானே நான்கு காசுகள்?

**கண்:** (புன்முறுவலுடன்) படிக்காதவர்களின் வியர்வை நீரிலிருந்து விளைவிக்க முடியும்!

கூன் : (நகைத்து) உன்னைப் போன்ற பூதங்களின் கைகளிலிருந்து கொள்ளையடிக்க முடியும் என்று சொல். படித்தவன் ஏழையைத்தான் சுரண்டவேண்டுமென்று எழுதியிருக்கிறதா என்ன? அது இருக்கட்டும். இளமையிலேயே இம்மாதிரி அறிவைக் குழப்பும் பெருங்கேட்டில் இறங்காதே. படித்த பிறகு மணம். தக்க இடத்தில் தங்க வேண்டும் உள்ளம். என்ன?

கூண் : (புன்முறுவலுடன்) இந்த ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாதப்பா! எனினும், என் உள்ளம் எப்போதும் தகாத இடத்தைச் சாராது. போவோம் வா (இருவரும் எழுகிறார்கள்)

கூன் : வயதின் கோளாறு மனத்தைக் கெடுக்கிறது. (செல்கிறார்கள்)

---

## காட்சி—7

இடம் :—மேரியின் வீடு.
காலம் :—அதே நாள் இரவு 7 மணி.

[சுவரில் மாட்டப் பெற்ற சுவரொட்டி விளக்கு வெளிச்சத்தில், தரையின்மேல் விரிக்கப்பட்ட பாயில் அமர்ந்து மேரி படிக்கிறாள். மேரியின் அன்னை கமலம் உள்ளே சமையல் செய்கிறாள்.]

மேரி : (வித்யுத் வியோகம், வித்யுத் வியோகம், வித்யுத் வியோகம்....)..அம்மா!

கமலம் : (உள்ளிருந்தபடியே) என்னடி?

மேரி: மணியோசை கேட்கிறது. அண்ணா வரும் போலிருக்கிறது. (தேவதாசன் மிதி வண்டியுடன் உள்ளே வருகிறான்) என்ன அண்ணா பணம் வந்ததா?

தேவ: (வண்டியை அதனிடத்தில் வைத்துக் கொண்டே) வந்தது.

மேரி: (புன்முறுவலுடன்) 'நாளைக்குப் பதினைந் தாயிற்றே, எங்கே பணம் வாராமற் போய் விடுமோ? கடையாணியான அது இல்லாமற் படிப்பு வண்டி நின்று விடுமோ?' என்று கலங்கினேன்.

தேவ: (சட்டையைக் கழற்றி மாட்டியில் தொங்க விடுகிறான்) அம்மா! காப்பி!

கமலம்: (உள்ளிருந்தபடியே) இதோ! மேரி! இதைக் கொண்டு போடி!

மேரி: இதோ வந்தேன் அம்மா! (எழுந்து போகிறாள்)

தேவ: (ஒரு நாற்காலியில் அமர்ந்து சனியன்) பிடித்த வேலை! முழுக்க ஒரு மாதமாகியும் போன மாதச் சம்பளம் கொடுக்கவில்லை யென்றால் எப்படி வாழ்வது? சம்பளம் ஒரு மண் குதிரையாகிவிட்டதே!

மேரி: (காப்பியைக் கொண்டு வந்து கொடுத்து) இந்நேரத்திற் காப்பி குடித்தால் எப்போது சாப்பிடுவது? மேலும் அடுப்போரத்திலேயே கிடந்த காப்பி நன்றாகவா இருக்கும்?

தேவ: (காப்பியைக் குடித்துவிட்டு) அப்பா! என்ன களைப்பு? உன்னை மங்கை பார்க்க வேண்டுமாம்.

மேரி: (படிக்குமிடத்திலமர்ந்து) மங்கையா? சரி! (வாய்க்குள்ளே படிக்கிறாள்)

தேவ: என்ன செய்யலாம்? கறப்பது உழக்கானாலும் உதைப்பதிற் பல் வாய் போகும் போலிருக்கிறதே! (கமலம் உள்ளேயிருந்து வருகிறாள்) சமையலாயிற்றா?

கமலம்: (பாயில் அமர்ந்து) ஆச்சுது! சாப்பிட வேண்டுமா?

தேவ: இன்னும் கொஞ்சம் போகட்டும். மேரியும் வரட்டும். அம்மா! மேரி! என்ன பாடம் படிக்கிறாய்?

மேரி: இயற்கை நூல் அண்ணா! நீ படிக்கும்போது ஆங்கிலத்திலா இயற்கைக் கலையைப் படித்தாய்?

தேவ: ஆமாம்; ஆனால், அப்போது மற்ற பள்ளிக் கூடங்களிலெல்லாந் தமிழில்தான் இருந்தன.

மேரி: உங்கள் பள்ளிக்கூடம் மட்டும் ஏன் அப்படி?

தேவ: அங்கே தெலுங்கு பாதி, தமிழ் பாதி. அதனாலே அப்படி! பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாயிருந்தால் தனித்தனி ஆசிரியர் போட முடியும். கொஞ்சமாயிருந்தால் எல்லாம் ஆங்கிலமாகவேதான் இருக்கும்.

கமலம்: எவ்வளவு பணம் வந்தது?

தேவ: இருபது ரூபாய். இதோ எடுத்துத் தருகிறேன். (எழுந்து சட்டையிலிருந்து எடுக்கிறான்)

கமலம்: ஏதாவது எழுதியிருக்கிறாரா?

தேவ: இதோ பணம்! (பணத்தைக் கொடுக்கிறான்) இன்னும் நாலு நாட்களில் மாமா வருகிறாராம். அது இருக்கட்டும் அம்மா! உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்.

கமலம்: என்ன?

**தேவ:** நான் இப்போது வேலை பார்க்கிற இடத்திலே போன மாதச் சம்பளமும் இன்னும் கொடுக்கவில்லை உழைப்பின் அருமை ஒன்றுந் தெரியாதவர் அவர். இனி அங்கே வேலை பார்க்க மனமில்லை.

**கமலம்:** (திடுக்கிட்டு) ஏன் அப்படிக் கூறுகிறாய்? ஏதோ ஒரு மாதம் அப்படியிருக்கலாம் இதற்காக இருக்கும் நிழலைவிட்டு எங்கே போவது?

**தேவ:** (வெறுப்புடன்) இருப்பது நிழலா? தழையில்லா மரமம்மா அது! பணத்திமிர் பிடித்த பிணம்! வானத்தைப் பார்ப்பானே ஒழியக் கீழே பார்க்க மாட்டான். பணக்கார நண்பர்களுண்டு, அவனுண்டு; எப்போதும் விருந்துதான். ஏழை எளியவர்களை இரங்கி நோக்குவதென்பதே அறியாதவன்.

**கமலம்:** அப்படியெல்லாம் இழிவாகப் பேசாதே, அப்பா!

**தேவ:** உள்ளதைச் சொல்கிறேனம்மா! அடிக்கடி விருந்துக்கும் வேடிக்கைக்கும் மட்டும் செலவு செய்கிறவன், வேலைக்காரர்களுக்குமட்டும் ஏன் குறிப்பிட்ட காலத்திலே சம்பளங் கொடுக்கக் கூடாது? இப்போது அவன் மகன் மூளையிலே ஏறாத பாடங்களை ஏற்ற, ஒரு வாத்தியாரை முப்பது ரூபாயில் தனியாக வைக்கப் போகிறான்.

**மேரி:** கண்ணப்பனுக்கா? எந்த வாத்தியார்?

**தேவ:** உங்கள் கணக்கு வாத்தியார்தான்.

**மேரி:** அப்படியா? அவர் ஒப்புக்கொள்ளமாட்டாரே! மாணவன் வீட்டுக்கு ஆசிரியர் சென்று பணத்திற்குப் பாடஞ் சொல்வது தவறு என்று அடிக்கடி சொல்வாரே!

தேவ: பின் ஏன் ஒப்புக்கொண்டாரோ? பண மென்றால் பிணமும் வாய் திறக்குமென்பார்களே!

மேரி: அப்படியொன்றுக்கும் ஆசைப்படமாட்டார் அண்ணா! என்ன காரணமென்று தெரியவில்லை. அண்ணா! கோபித்துக் கொள்வாயா?

தேவ: எதற்கு?

மேரி: எனக்குக் கணக்கே வரமாட்டேன் என்கிறது அண்ணா!

தேவ: எனக்கும் அதே கதிதான்; எப்படி உனக்குச் சொல்லிக் கொடுப்பேன்?

மேரி: (புன்முறுவலுடன்) அந்த வாத்தியாரிடம் கணக்குச் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்கிறாயா?

தேவ: (நகைத்து) பணமேது நமக்கு?

மேரி: (நகைத்து) பணமெதற்கு, அண்ணா! ஞாயிற்றுக்கிழமைதோறும் சென்று கேட்டுக்கொள்ளலாம்.

தேவ: அதற்கு நான் எதற்கு?

மேரி: நாளைக்குப் போய் அவரைக் கேட்டுப் பார்ப்போம். வரச்சொன்னால் நீயும் கூட வரவேண்டும். தனியாக (நாணத்துடன்) நான் போகலாமா?

தேவ: அவர் ஒப்புக்கொள்வாரா?

மேரி: அவர் மிகவும் நல்லவர் அண்ணா! மேலும் அவரே அடிக்கடி மாணாக்கர்களை ஐயமிருந்தால் வந்து கேட்கலாமென்கிறாரே!

தேவ: சரி, பார்ப்போம். வா, சாப்பிடுவோம். (செல்கிறார்கள்)

---

## காட்சி—8.

**இடம் :** எல்லப்பன் வீடு.

**காலம் :** இரண்டாம் நாட் காலை 8 மணி.

[எல்லப்பன் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். கையில் தினசரிச் செய்தித்தாளொன்று இருக்கிறது.]

**எல்ல :** (தமக்குத் தாமே) இந்தப் பத்திரிகையில் காதலைப்பற்றி வானளாவப் புகழ்ந்திருக்கிறது! காதல் தெய்வத் தொடர்புடையதாம்! உயிரொன்றும் உடலிரண்டுமாக இருப்பதாம்! (நகைக்கிறார்) இது பச்சைப் பொய்! புலவர்கள் கட்டிய பொய் மூட்டை! ஏட்டுச் சுரைக்காய்! வாழ்க்கையிலே காணமுடியாத வான மலர்! கானல் நீர்! (துக்கத்துடன்) இரண்டே ஆண்டுகள் வாழ்ந்தோம். காதல் மணந்தான்! என்ன ஆயிற்று? "சாவிற் சாதல்" என்று கூறுவார்களே, அது நிகழ்ந்ததா? மங்கையர்க்கரசி என்ற பெயருக்கேற்ற அழகி! பண்பின் செல்வி! அறிவின் அமைதிச் சுடர்! எனினும் காலத்திற் கிரையானாள்! காதற் கப்பல் கவிழ்ந்தது! இப்போது நான் மட்டும் உயிர் சுமந்து வாழ்கிறேன்! உண்கிறேன்! உடுக்கிறேன்! உழல்கிறேன்! உறங்குகிறேன்! (கண்ணீர் ததும்ப) அவள் ஓவியமும் உள்ளத் திரையினின்றும் மறைந்து கொண்டிருக்கிறது நான்காண்டுகளுக்குள்! இதுவா தெய்வக் காதல்? (வெளியிலே தேவதாஸும் மேரியும் வந்து சார்! சார்! என்று கூப்பிடுகிறார்கள்) யார் அங்கே? உள்ளே வாருங்கள். (கண்களைத் துணியால் துடைத்துக்கொள்கிறார்; இருவரும் வணங்குகிறார்கள்) வா அம்மா! மேரி! இவர் யார்? (இருவரும் கைகுவிக்கிறார்கள்.)

**மேரி:** இவர் என் அண்ணா.

**எல்ல:** (புன்முறுவலுடன் கைகுவித்து) அப்படியா? உட்காருங்கள் அந்த நாற்காலியில்.

**தேவ:** (மரியாதையுடன்) பரவாயில்லை.

**எல்ல:** என்ன பரவாயில்லை? சும்மா உட்காருங்கள். (தேவதாஸ் ஒரு நாற்காலியில் அமர்கிறான்) நீயும் அந்த நாற்காலியில் உட்காரம்மா! (மேரி உட்காராமல் அண்ணன் பின் நிற்கிறாள்) ஏனம்மா, நிற்கிறாய்?

**மேரி:** (நாணத்துடன்) ஒன்றுமில்லை.

**எல்ல:** பள்ளிக்கூடத்திற் பாடம் படிக்கும் போதுதான் நின்று படிக்கவேண்டும். இங்கு என்ன அம்மா, உன் வீட்டில் உட்காரமாட்டாயா? இது உன் ஆசிரியர் வீடுதானே? ஆசிரியர் என்றால் மரியாதை தெரியாதவரா? கட்டாயம் உட்காரவேண்டும். (நாணத்துடன் மேரி உட்காருகிறாள்.)

**தேவ:** (புன்முறுவலுடன்) தங்களுக்கு ஒரு தொந்தரவு கொடுக்க வந்திருக்கிறோம்.

**எல்ல:** என்ன தொந்தரவோ? ஏற்றுக்கொள்ளக் கூடியதுதானே?

**தேவ:** அது உங்கள் நிலைமையைப் பொறுத்தது.

**எல்:** என்னவென்று இயம்புங்கள். இயல்வதானால் ஏற்றுக் கொள்ளுகிறேன். கூச்சமின்றிக் கூறுங்கள்.

**தேவ:** இவளுக்குக் கணக்கு நன்றாக வரவில்லையாம்.

**எல்:** ஆம், ஆம்! நானும் கூறலாமென்றிருந்தேன் அன்றாடம் பத்துக் கணக்குப் போடச் சொல்லுங்கள்.

**தேவ :** கணக்குகள் விளங்கினென்றே போட முடியும்? அதற்குத்தான் தொந்தரவு கொடுக்க விரும்புகிறோம்.

**எல் :** (புறமுறுவலுடன்) என்னுல் ஆனதை எப்போதுஞ் செய்வேன்.

**தேவ :** ஞாயிற்றுக்கிழமைதோறும் தங்களுக்கு ஒழிவான நேரத்தில் அழைத்து வருகிறேன்; அல்லது அனுப்புகிறேன். ஐயங்களைக் கொஞ்சம் அகற்ற வேண்டுகிறேன்.

**எல் :** அப்படியே ஆகட்டும். என் கடமையே அது. கூச்சமில்லாமல் எப்போது வந்தாலும் சொல்லித் தருகிறேன். தங்களுக்கு என்ன உத்தியோகமோ?

**தேவ :** (வெறுப்புடன்) அது ஒரு உத்தியோகமா? மிராசுதார் சொக்கலிங்க முதலியாரிடம் அடிமை வாழ்வு! எழுத்தாளன் வேலை.

**எல் :** எல்லா உத்தியோகமும் அடிமை வாழ்வே.

**தேவ :** இருந்தாலும் காலா காலத்திலே சம்பளமும் பெருமல் ஓய்வு ஒழிவின்றி உழைக்கும் உத்தியோகம் அது. அதற்கிணையேது?

**எல் :** (வியப்புடன்) என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? அவர் பெரிய பணக்காரரென்கிருர்களே! மேலும் தாராளமாகச் செலவு செய்வாராம்!

**தேவ :** உண்மையே. அந்தச் செலவெல்லாம் சமநிலையிலுள்ள நண்பர்களுக்குத்தான். சிப்பந்திகளுக்குக் கொடுக்கத்தான் காலத்தில் ஒன்றும் இராது.

**எல் :** என்னென்னவோ பெருமையாகப் பேசுகிருர்களே!

**தேவ :** ஏழை எளியவரின் அருமை தெரியாத பெருமைதான்.

**எல் :** அது எப்படிப் பெருமையாகும்? எளியவர்கள் தேனீயைப் போலச் சேர்த்துக் கொடுத்தால் இனிமையாக நண்பருடன் தின்று ஏப்பமிடுவதா பெருமை?

**தேவ :** நடப்பது அதுதானே? இப்போது கூட அடுத்த வாரத்திலே அவருடைய அருமை மகன் பிறந்த நாள் வருகிறது. அதற்கு ஆயிரம் ரூபாய் திட்டம் போட்டிருக்கிறார். அழைப்புத் தாள்கள் அச்சிடப் போகிறார் நாளைக்கு. ஆனால், எங்கள் சம்பளம் மட்டும் இன்னும் கொடுபடவில்லை. இது பெருமையில்லையா? தங்கள் அன்புக்கு வணக்கம். போய் வருகிறோம். (எழுந்து கைகூப்புகிறான்).

**எல் :** (எழுந்து கைகூப்பி) சரி, சென்று வாருங்கள். ஞாயிற்றுக்கிழமை யென்றல்ல, எப்போதும் வரலாம்.

**மேரி :** (கைகுவித்து) போய் வருகிறேன் சார்!

**எல் :** போய் வா அம்மா! (இருவரும் செல்கிறார்கள்) பணமே, உன்னால் என்ன குணமே! இடம்ப வாழ்வுக்கும் அதிகாரிகளைக் குல்லாய்ப் போடவும் ஏற்ற வாறு உதவுகிறாய்! உன்னைத் தேடியெடுக்கும் எளியவரை ஏறெடுத்தும் பாராமலிருக்கிறாய்! பொருட் செல்வம் பூரியாரிடத்திலே தான் பொருந்துமோ? சரி, குளித்து விட்டுச் சாப்பாட்டுக் கடைக்குச் செல்வோம்.

## காட்சி - 5

இடம் : சொக்கலிங்க முதலியார் வீடு; பின்புறத் தோட்டம்

காலம் : அன்று காலை 9 மணி.

[மேரியும் மங்கைநல்லாளும் ஒரு பெஞ்சியின் மேல் உட்கார்ந்திருக்கிறார்கள்]

**மேரி :** ஏது, இவ்வளவு காலங் கழித்து நினைத்துக் கொண்டாய்?

**மங்கை :** என்னடி அப்படிக் கூறுகிறாய்? உன்னை நினையாத நாளே யில்லையே! ஆனால், உன்னைப் பார்க்க நினைத்தது மட்டும் இப்போதுதான். எவ்வளவு ஆவலாயிருந்தேன், தெரியுமா?

**மேரி :** எனக்கும் ஆவல்தான். ஆனால், நீ என் வீட்டுக்கு வரமாட்டாய் என்றுதான் பேசாமல் விட்டு விட்டேன்.

**மங்கை :** ஆமாண்டி! பாழும் வழக்கமிருக்கிறதே, பெரியவளானால் வெளியே போகக் கூடாதாம். இல்லாவிட்டால் நானும் படித்திருக்கமாட்டேனா? அது இருக்கட்டும், உனக்குக் கணக்கு வரவில்லையாமே!

**மேரி :** (வியப்புடன்) யாரடி அந்தப் பெருமையைக் கூறினார்கள்?

**மங்கை :** (நகைத்து) ஆகாசவாணி கூறினாள்.

**மேரி :** (அவள் தாடையைத் தட்டி) சும்மா சொல்லடி!

**மங்கை :** உன் அண்ணா சொன்னார். ஏண்டி, உனக்குப் பையன்களோடே படிக்க வெட்கமா யில்லையாடி?

மேரி : வெட்கமென்னடி ? நம் வீடு மாதிரிதானே பள்ளிக்கூடமும் ? அந்தப் பிள்ளைகளுடன் நாம் அண்ணன் தம்பி மாதிரிதானே பழகி வந்திருக்கிறோம் ? (நாணத் துடன்) (உன்னை பார்த்தது நல்லதாயிற்றடி ! உன் அண்ண னிடம் சொல்லடி கொஞ்சம் !)

மங்கை : (திடுக்கிட்டு) என்னடி ?

மேரி : அடிக்கடி வகுப்பிலே பெண்களிருக்கிற பக்கம் பார்க்கிறார். அதனாலே ஏதாவது கெடுதி நேர்ந்தால் என்ன செய்கிறது ? நான்தான் தலைவர் வீட்டுப் பிள்ளை யென்று பொறுத்துக் கொள்ளுகிறேன். மற்றவர்கள் அப்படி யிருப்பார்களா ?

மங்கை : (சினத்துடன்) என்னடி பிதற்றுகிறாய் ? யார் தலைவர் ? யார் வேலைக்காரர் ? அப்படி இன்னொரு முறை கூறாதே. மேலும், அப்படி யிருந்தாலும் தலைவர் என்றால் ஒழுங்கின்றி நடக்க வேண்டுமென்பதுதான் அறமா ?

மேரி : நேரமாய் விட்டது. நீ சற்றுச் சொல். ஏதோ நீண்ட நாட்களாக வேற்றுமையின்றிப் பழகிவிட்ட தாலேதான் சொல்லுகிறேன்.

மங்கை : கட்டாயம் எச்சரிக்கிறேன். உட்காரடி போகலாம் ! ஒன்று உனக்குக் கூற வேண்டும். எங்களை வேற்றுமையாக ஏன் நினைக்கிறாய் ?

மேரி : என்ன ? வேற்றுமையாகவா நினைக்கிறேன் ?

மங்கை : பின் ஏன் எங்களைத் தலைவர்களென்றாய் ?

மேரி : சம்பளங் கொடுப்போர் தலைவர்களல்லவோ ?

மங்கை : (துக்கத்துடன்) நீ கூறுவது உண்மையே. ஆனால், உன் உள்ளத்திலும் என் உள்ளத்திலும் இந்த

வேற்றுமைப் பாம்பை விடக்கூடாது. எப்படிப் பள்ளியிலே சாதி சமயம் பணம் என்கிற அழுக்கில்லாமல் இருந்தோமோ அதே மாதிரி நம் வாழ்நாள் முழுவதும் தூயவர்களாக வாழ வேண்டும்; இன்றேற் சாகவேண்டும்.

**மேரி:** அந்த ஆற்றல் உனக்குண்டாகுக! ஆனால், உன்னை ஒரு பணக்காரனுக்குத்தானே கொடுப்பார்கள்?

**மங்கை:** (நகைத்து) அடி பயித்தியமே! இவ்வளவு சொல்லியும் இம்மியும் புரியவில்லையே! நான் ஏழையைத்தான் மணப்பேன்; நல்ல பண்பையே காதலிப்பேன். போதுமா?

**மேரி:** (அன்புடன்) உன் பெற்றோர்கள் யாருக்குக் கொடுப்பார்களோ, அவனைத்தான் மணக்க வேண்டும். அப்படியானால், அவன் ஏழையாக இருப்பானோ?

**மங்கை:** நீயும் நானும் இறைவனருளால் வாழ்ந்திருந்தோமானால் நடப்பதைப் பார்க்கப் போகிறாய்.

**மேரி:** எத்தனையோ பேர் இளமையிலே பெரிய பெரிய மனக்கோட்டைகளைக் கட்டினார்கள். அவை நடைமுறைக்கு ஒவ்வாமல் இடிந்து விழுந்தன.

**மங்கை:** (நகைத்து) முதிபவளாகிய நீ நடைமுறையிலே அவற்றை நன்றாகக் கண்டு விட்டாய்! உலகமே மாறினும் உள்ளம் மாறாது.

**மேரி:** செல்வத்திலே பிறந்து செல்வத்திலே வளரும் அம்மாதிரி நடந்தால் உண்மையிலேயே சீர்திருத்தம் வந்து விடும்.

**மங்கை:** நீ நடந்தால் வராதோ?

**மேரி:** நானா? நான்தான் எளியவளாகக் கருவிலேயே பிறந்தேனே! என் நிலை மாறுவது செல்வத்திலே செருக்குவதுதானே?

**மங்கை:** (கண்ணீர் ததும்ப) என்னையும் எளியவளாகப் படைக்கலாகாதா பாழும் விதி? இப்போது இந்த வேற்றுமைக் காட்டிலே அலைய வேண்டுவதில்லையே!

**மேரி:** (அன்புடன் தழுவிக் கொண்டு) நான் போய் வருகிறேன் மங்கை! மங்கை நல்லாள் என்று உனக்கு வைத்த பெயர் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது? உம். உன்னை ஒன்று கேட்கிறேன். கோபித்துக் கொள்ள மாட்டாயே?

**மங்கை:** என்னைக் கேட்டுத்தான் கூற வேண்டுமா? இப்படி நட என்றால் நடக்கக் காத்திருக்கிறேனடி!

**மேரி:** கூச்சமாக இருக்கிறதடி!

**மங்கை:** சும்மா சொல்லடி!

**மேரி:** வேண்டாம் மறுபடி ஒருநாள் கூறுகிறேன். (எழுகிறாள்)

**மங்கை:** (கையைப் பிடித்து இழுத்து) கட்டாயம் கூறிவிட்டுத்தான் போக வேண்டும்.

**மேரி:** நாம் எப்போதும் தோழிகளாக இருக்க வேண்டும்,

**மங்கை:** (நகைத்து) இப்போது தோழிகளில்லையா?

**மேரி:** (நாணத்துடன்) பார்த்தாயா? உனக்குப் புரியவில்லை. வேறுபாடில்லாத தோழிகளாக இருக்க வேண்டும்.

**மங்கை:** (வியப்புடன்) அப்படி என்றால் என்ன? நான் முன்பே இல்லையென்றேனே!

**மேரி:** செயலிலும் இல்லையாக வேண்டும். அதாவது ஒரே குடும்பமாக இருக்க வேண்டும். அதாவது நீ என் வீட்டிற்கு வந்து விடுவாயா?

மங்கை: (நாணத்துடன்) அதிக துணிவடி உனக்கு?

மேரி: பார்த்தாயா? சொல்வது செயலில் எளிய தாகாது என்பது உண்மையாயிற்று.

மங்கை: என்ன கூறினேன்?

மேரி: ஏழையைக் காதலிப்பேன் என்ருய்?

மங்கை: ஆனல் மன ஒற்றுமைதானே காதல்?

மேரி: ஆகவே, உன் மனம் எங்களிடம் ஒன்ற வில்லை.

மங்கை: அப்படியில்லையடி! என் மனத்திலே இன்னும் காதல் என்பது காணப்படவில்லை. உண்டாகும் போது பார்ப்போம்.

மேரி: சரி, மழுப்புகிருய்; நான் போய் வருகிறேன். (எழுகிருள்)

மங்கை: (எழுந்து) போய் வா. (மேரி செல்கிருள்)

---

## காட்சி - 10

**இடம்:** சொக்கலிங்க முதலியார் வீட்டுக் கூடம்.
**காலம்:** இரண்டாம் நாள் நடுப்பகல்.

[பூங்காவனம் மங்கை நல்லாள் கொடுத்த புடவை ஒன்றைக் கட்டிக் கொண்டிருக்கிருள். அவள் உடல் நடுங்குகிறது. மங்கை நல்லாள் அவள் கையைப் பிடித்துக் கொண்டு நகைக் கிருள்.]

மங்கை: ஏனடி, இப்படி நடுக்கம்? இந்தப் புடவை உனக்கு மிக நன்ருய்ப் பிடித்திருக்கிறதே! இது என்ன பூதமா?

**பூங்கா:** போ மங்கை! அம்மா திட்டுவாங்க. அவுத்து வச்சுடுறேன். (அவிழ்க்க முயல்கிருள்)

**மங்கை:** (அதைத் தடுத்து) சீ! அசடே! அவிழ்க்காதே வா, இப்படி உட்கார் இந்தச் சோபாவில். (உட்கார வைக்க முயற்சிக்கிருள்.)

**பூங்கா:** ஐயோ! வேண்டாம் அம்மா! அவுங்கவுங்க நிலையிலேதானம்மா அவுங்கவுங்க இருக்கணும்!

**மங்கை:** அந்தநிலை எங்கேயும் போகாதடி; சற்றே உட்கார்ந்துதான் பாரேன்!

**பூங்கா:** (நடுக்கத்தோடு உட்காருகிருள்) ரொம்ப மெத்து மெத்துண்ணுதான் இருக்குது. இருந்தாலும் விளக்குமாத்துக் கட்டைக்குப் பட்டுக் குஞ்சம் என்னாத்துக்கு? (எழுந்திருக்கிருள்)

**மங்கை:** சீ! எழுந்திருக்காதே (தானும் அவள் பக்கத்தில் உட்காருகிருள்) உனக்குக் கொஞ்சங்கூடப் படிக்கத் தெரியாதா?

**பூங்கா:** எழுத்துக் கூட்டிக் கூட்டித் தப்புந் தாறுமாய்ப் படிப்பேன்.

**மங்கை:** (எழுந்து பீரோவைத் திறந்து இரண்டாம் வகுப்புப் புத்தகத்தை எடுத்து வருகிருள்) இதைப் படி! (அவளிடம் ஒரு பக்கத்தைத் திறந்து கொடுக்கிருள்)

**பூங்கா:** (படிக்கிருள்) நா-ம்: நாம்; இ-ரு-க்-கு-ம் இருக்கும், நா-டு: நாடு; ந-ம-க்-கு-ச்: நமக்குச்; சொ-ந்-த-ம்: சொந்தம்.

**மங்கை:** நன்ருய்ப் படிக்கிருயே! சீக்கிரம் படித்துக் கொள்வாய். இந்தப் புத்தகத்தை நீயே வைத்துக்கொள். உனக்கு வேண்டியதைக் கூச்சமில்லாது கேள்; தருகிறேன்.

**பூங்கா:** ஆகட்டும் அம்மா! (உற்றுக் கேட்கிறாள்: வண்டி மாட்டுச் சதங்கையொலி கேட்கிறது) அதோ அம்மாவும் அப்பாவும் வராங்க! இந்தத் துணியை மாத்திக் கட்டிக்கிட்டு வரேம்மா! (எழுகிறாள்)

**மங்கை:** வேண்டாம். எழுந்தால் நான் பொல்லாதவளாக இருப்பேன். (மிராசுதாரும் தாமரைக்கண்ணியும் வருகிறார்கள்; பூங்காவனம் எழுந்து நடுக்கத்துடன் நிற்கிறாள்.)

**தாமரை:** (இவர்களைப் பார்த்துவிட்டுச் சினத்துடன்) எப்படியடி இந்தப் புடவை அகப்பட்டது?

**மங்கை:** புடவை காய்க்கிற மாத்திலிருந்து அறுத்தெடுத்து வந்தாளாம்! நாம்கூட ஒரு மரம் வாங்கி வந்தால் நன்றாயிருக்கும்.

**தாமரை:** போதுமடி பரிகாசம்!

**மங்கை:** பின்னே, பார்த்தால் தெரியவில்லையோ? என் புடவையை நான் கொடுத்தேன்!

**தாமரை:** (கணவனைப் பார்த்து) கேட்டீர்களா, உங்கள் அருமைப் பெண்ணின் அழகான பதிலை! நேற்றிலிருந்து ஒரு மாதிரியாக இருக்கிறாள்.

**சொக்:** (சட்டையைக் கழற்றிக் கொண்டே) என்ன மாதிரி இருக்கிறது? (சட்டையை மாட்டியில் மாட்டுகிறார்)

**மங்கை:** ஒரு மாதிரியும் இல்லையப்பா! இவளுக்கு நேற்று ஒரு புடவை கொடுக்கிறேன் என்றேன். இன்று கொடுத்தேன். இதுதான் மாதிரி!

**சொக்க:** (மனைவியைப் பார்த்து) போனாற் போகுதடி! இரண்டும் சிறுசுகள்! எப்படியாவது இருந்து போகட்டுமே!

**தாமரை:** (வெறுப்புடன்) எனக்கென்ன அப்பா சம்பாதிக்கிறார்; பெண் அழிக்கிறாள். அம்மா, மங்கை! புடவை மட்டுங் கொடுத்தாற் போதுமா? நகை நட்டும் போட்டால் அழகாக இருப்பாள்! (தலையை நொடிக்கிறாள்)

**மங்கை:** (நகைத்து) ஆமாம் அம்மா! என்னுடைய மற்றொரு ஜோடி தோடு இருக்கிறதே, அதைப் போட்டு ஒவ்வொரு ஜதை வளையலும் போடப் போகிறேன். மேலும் காலுக்குப் பட்டடையும் கழுத்துக்கு ஒரு சங்கிலியும்......

**தாமரை:** [கோபத்துடன்] அப்புறம் என் கழுத்துக்கு ஒரு கயிறும்...

**மங்கை:** [நகைத்து] அதோ உன் கழுத்திலே தாலிக் கயிறுதான் இருக்கிறதே அம்மா! இன்னொரு கயிறு ஏன்?

**தாமரை:** [கோபத்துடன்] இந்தக் கயிறு இருக்கிறது போதாது! இன்னும் பெரிய கயிறுயிருந்தால் நன்றாக இருக்கும் தூக்குப் போட்டுக் கொண்டால்! [கணவனைப் பார்த்து] என்னங்க! பேசாமலிருக்கிறீர்களே! [பூங்காவனத்தைப் பார்த்து] அடியம்மா! மகராசி! நீ வேலை செய்து விளங்கினது போதும். இனிமேல் வேண்டாம். இன்றைய வரைக்கும் சம்பளத்தை வாங்கிக் கொள். போ வீட்டை விட்டு.

**பூங்கா:** [பயத்துடன்] நான் எங்கே அம்மா போவேன்? விளையாட்டுக்கு இது கட்டிக்கச் சொல்லிச்சு! நானுங் கட்டிக்கிட்டேன் தெரியாதே. அவுத்து துவைச் சுடறேனம்மா.

**மங்கை :** [பூங்காவனத்தைத் தடுத்து] அடி இருடி! ஏன் அம்மா! இவளுக்குப் புடவை கொடுத்தது தப்பா?

**தாமரை :** [கோபத்துடன்] தப்புத்தான்.

**மங்கை :** அப்படியென்றால் இந்த வீட்டிலே எனக் கொன்றும் சொந்தமே இல்லையா?

**தாமரை :** [ஆத்திரமாக] சொந்தமிருக்கிறதுதான் தெரியுதே! இந்த வீட்டைக்கூட இவளுக்குக் கொடுத்து விடடி! அடுக்காத வேலையை ஏன் செய்ய வேண்டும்?

**மங்கை :** எது அடுக்காதது?

**தாமரை :** இந்தப் புடவையை யாரைக் கேட்டுவிட்டுக் கொடுத்தாய்?

**மங்கை :** உன்னைக் கேட்டுத்தான் கொடுக்க வேண்டுமா?

**தாமரை :** உன் தலையிலிருக்கும் பேனைக் கேட்டாலும் ஆமாம் என்னுமே!

**மங்கை :** என் தலைப்பேனுக்குத் தெரிந்தது எனக்குத் தெரியவில்லையா?

**சொக் :** [சோபாவில் அமர்ந்து கொட்டாவி விட்டு] ஏன் அம்மா! உன் அம்மாவைக் கேட்டுக் கொடுத்தால் என்ன?

**மங்கை :** [துக்கத்துடன்] அம்மா கொடுக்க மாட்டேன் என்றார்கள். நான் கொடுத்தேன். ஏனப்பா? என்போல் இவளும் ஒரு பெண். இவளுக்குக் கட்டிக் கொள்ள ஒரு புடவைகூடச் சரியாக இல்லை. எனக்கோ பத்துப் பதினைந்து புடவைகளுண்டு. ஒன்று கொடுத்தால் என்னவாம்?

**சொக்க:** நீ செய்வதும் சொல்வதும் உலகந் தெரியாத வளென்று நான் காட்டுகின்றன! புத்தகத்தில் படிப்பதை யெல்லாம், அப்படியே நடத்திக் காட்ட முடியுமா? எப்போதும் வேலையாட்களுக்கு ஒரு மட்டு மரியாதை உண்டு. அது உனக்குத் தெரியவில்லை. அப்புறம்...

**மங்கை:** (படபடப்பாக) அப்புறம் விழுப்புரம்! போங்கள் அப்பா! வேலைக்காரர் என்னும் ஒரு சாதியா இருக்கிறது? நம்மைப்போல அவளும் ஒரு மனித வர்க்கந் தானே? நமக்கு முளைத்திருக்கும் கொம்பு இவர்களுக்கு மட்டும் இல்லையோ?

**சொக்க:** (நகைத்து) அப்படித்தானம்மா உலகம் நடக்கிறது! மேலும் வேலைக்குத் தகுந்த கூலிதானே கொடுக்க வேண்டும்?

**மங்கை:** அவளுக்கு வேலைக்குத் தகுந்த கூலி என்று சட்டம்! நமக்கு வேலையில்லாமல் கொள்ளையடிப்ப தென்று சட்டம்! இப்படியும் ஒரு சட்டமா?

**சொக்க:** (நகைத்து) நம்மாட்டம் அவர்களும் செல்வ முடையவர்களாக இருப்பதை நாமா தடுக்கிறோம்? மேலும், உலகத்திலே இருக்கிறவர்களுக்கெல்லாம் நம் மைப்போல இருக்க உதவி செய்ய நம்மாலே முடியுமா?

**மங்கை:** நீங்கள் சொல்வது தப்பு. நம் வீட்டிலே இருக்கிறவளுக்கு—நமக்கு வேண்டிய வேலையெல்லாம் செய்பவளுக்கு—நம்மைப் போல உண்ண உடுக்க உதவி செய்ய முடியாதா அப்பா?

**சொக்க:** (சினத்துடன்) போதும், நிறுத்து! எங்களுக்குத் தெரியாத ஒன்றை நீ புதிதாகக் கண்டு பிடித்து விட்டாயோ? உன் கடமை நாங்கள் கூறுவதைக் கேட்பதுதான்! உன் அம்மா சொற்படி நட!

**மங்கை:** அப்படியானல் அவளை வேலையைவிட்டு நீக்கி விடுவீர்கள்!

**சொக்க:** பின் என்னவென்று எண்ணுகிருய்? அவள் இனிமேல் இங்கே இருந்தால் அவளுங் கெடுவாள்; நீயும் கெடுவாய்.

**மங்கை:** (அழுகை பீறிட) அப்படியானல் நானும் இவ்வீட்டை விட்டுப் போகிறேன். இந்த மாதிரி கொடுமைக்காரர் வீட்டிலே இருக்க எனக்குப் பிரியமே இல்லை.

**தாமரை:** (கோபத்துடன்) ஓகோ! அவ்வளவுக்கு ஆய் விட்டதா? எல்லாம் உங்களப்பா கொடுக்கும் செல்லந்தான்! (பூங்காவனத்தைப் பார்த்து) இப்போதே போடி வெளியே! (மங்கைநல்லாளின் கையைப் பற்றி இழுத்துக்கொண்டு உள்ளே போகிருள்.)

**சொக்க:** (தயங்கி அழுதுகொண்டிருக்கும் பூங்காவனத்தைப் பார்த்து) ஏன் நிற்கிருய்? போ வெளியே! (பூங்காவனம் சோர்வுடன் செல்கிருள்.)

---

4074

## காட்சி—11

**இடம்:** பூங்காவனத்தின் குடிசை.

**காலம்:** இரண்டாம் நாள் மாலை 5 மணி.

[பூங்காவனம் துக்கத்துடன் குடிசை வாயிலில் அமர்ந்திருக்கிறாள்.]

**பூங்கா:** (தானே) இனிமே எப்படிப் பிழைக்கிறது? அம்மா வந்தாக்கா என்னண்ணு சொல்வேன்?...ஏழையா மட்டும் பொறக்கக் கூடாதடி அம்மா! ஒண்ணுக்கும் ஆசைப்பட முடியாது; மாடா உழைச்சாலும் வயிறு நிறையச் சாப்பாடு ஆப்படாது! நல்ல துணி கட்டறவங்களைப் பார்த்து ஏமாறணும்! (இலக்ஷுமி வருகிறாள்) இதோ அம்மா வராங்க! என்ன சொல்வாங்களோ? (நடுங்குகிறாள்)

**இலக்:** (படபடப்புடன்) என்னடி ஒரு மாதிரியா இருக்கிறே? (பூங்காவனம் விம்முகிறாள்) ஏண்டி அழுறே? (அணைத்துக்கொண்டு) அழாதே, சொல்லு! பயப்படாதே!

**பூங்கா:** முதலியாரூட்டம்மா இனிமே வேலைக்கு வரவேண்டாண்ணுட்டுங்கம்மா!

**இலக்:** (திடுக்கிட்டு) ஏண்டி?

**பூங்கா:** நேத்து ஒரு புடவை கேட்டேன். அந்த அம்மா முடியாதுண்ணுட்டாங்க! மங்கை இண்ணிக்குக் கொடுத்துது. அதைப் பார்த்துட்டு அந்த அம்மா கோவிச்சிக்கிட்டாங்கோ! அப்புறம் நானு அங்கே இருந்தா மங்கையுங் கெட்டுப் பூடுமாம்! அதுக்காக வேண்டாண்ணுட்டாங்கம்மா! (அழுகிறாள்)

**இலக்:** (அவள் கண்ணீரைத் துடைத்து) என்னும்மா பண்றது, அழாதே! கடவுளுக்குக் கண்ணில்லையே! இந்தப் பாழாப்போன வயிற்றுக் கொடுமையாலே கிடைக்கிறது கிடைக்கட்டுண்ணு பார்த்தேன். (அவள் தலையைக் கோதிக் கொண்டு) இந்தக் குழந்தை வயசிலே கூலிக்கு வீட்டு வேலை செய்யணுண்ணு தலைவிதி! (பெருமூச்சு விடுகிறாள்.)

**பூங்கா:** மங்கை இருக்குதே, அது எங்கிட்ட உசிரையே வைச்சிருக்குது அம்மா! அது படிப்புக்கூடச் சொல்லித் தரேண்ணுது!

**இலக்:** அப்போ அது நல்ல பொண்ணுத்தான் இருக்கும். அதுக்குக்கூட இப்போது தொந்தரவுதானு?

**பூங்கா:** ஆமாம்மா! அதைச் செல்லமா வச்சிருக்தாங்க. அதாலே அது சொன்னு அவுங்க ஒப்புக்கு வாங்கண்ணு நினைச்சுது; நானும் நம்பினேன். ஒண்ணும் நடக்கலே! அது குடுத்த புடவையும் போச்சு, முன்னிருந்த வேலையும் போச்சு! புது வெள்ளம் பழைய வெள்ளத்தை அடிச்சிக்கிட்டு போச்சுது (அக்குடிசை யிருக்கும் தெரு வழியே முனிசாமி முதலியாரும் எல்லப்பனும் வருகிறார்கள்.)

**முனி;** (நின்று) பூங்காவனம்!

**பூங்கா:** என்னங்க!

**முனி:** முதலியார் உன்னை வேலையிலிருந்து நீக்கி விட்டாராமே! பாவம்! அந்தப் பெண் மங்கை ஓரே மூச்சாய் அழுதுகொண்டே கிடக்கிறது!

**பூங்கா:** பாவம்! ரொம்ப அழுதிச்சுங்களா? நானும் வாணுண்ணு தடுத்தேங்க! ஒரே பிடிவாதமா அந்தப் புடவையே கட்டிக்கச் சொல்லி தொந்திரவு பண்ணிட்டு துங்க!

**முனி:** பாவம்! இதுக்காக வேலையிலிருந்து நீக்கி விடலாமா? வேறே யார் நல்ல வேலைக்காரி கிடைப்பார்கள்?

**எல்:** அவர்கள் கொடுத்த சம்பளத்தை நான் கொடுக்கிறேன். என் வீட்டைச் சுத்தப்படுத்திவிட்டு வந்தாற் போதும்.

**இலக்:** ஐயா ஊடு எங்கே?

**முனி;** அதோ பக்கத்துத் தெருவிலே, கிட்டத்தான். வடக்கு வாடையிலே நாலாவது வீடு.

**இலக்:** சரிதானுங்க. நானு வரேன். தெய்வம் ஒண்ணு இல்லிங்களா! யார் மனசிலாவது புகுந்து உதவி செய்யுது.

**பூங்கா:** மங்கைதாம்மா வருந்தும்!

**இலக்:** என்னம்மா பண்றது? எதுவும் அளவோடே இருக்கணும்!, அவுங்க பணக்காரரு. நாம்ப அவுங்க கிட்டே வேலே செய்ஞ்சி பிழைக்கப் பிறந்துட்டோம். கொஞ்சம் விலகித்தானம்மா இருக்கணும். (கண்ணீர் ததும்ப தன் மகளைச் சுட்டிக்காட்டி) எல்லாம் விதி!

**முனிசாமி:** பாவம்! என்ன செய்வது? ஐயா சொல்லும் நேரத்துக்குப் போய், வீட்டை விளக்கி விட்டு வந்து விட வேண்டும்.

**இலக்:** எந்த நேரத்துக்கு வரதுங்க?

**எல்ல:** காலை எட்டு மணிக்கு வந்தால் போதும். பத்து நிமிஷ வேலை!

**இலக்:** ஆகட்டுங்க. (இருவரும் செல்கிறார்கள்) என்றுதான் இந்தத் துன்பந் தொலையுமோ கடவுளே!

---

## காட்சி - 12

**இடம் :** சொக்கலிங்க முதலியார் வீடு

**காலம் :** இரண்டாம் நாள் மாலை 5-30 மணி.

[சொக்கலிங்க முதலியார் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். அவர் அருகில் ஒரு பெரிய மேஜை. சுற்றிலும் நான்கு நாற்காலிகள். கண்ணப்பன் அவர் அருகில் நிற்கின்றான்.]

**சொக் :** (தலை நிமிர்ந்து) என்ன தம்பி!

**கண்ண :** என்னை வரச் சொன்னீர்களாமே!

**சொக் :** (நினைவு வந்து) ஓ! ஆமாம்! நீ படித்து அழகாக மார்க்கு வாங்குவதற்குப் பரிசு கொடுக்கக் கூப்பிட்டேன்.

**கண்ண :** (பேசாதிருத்தல்)

**சொக் :** (வருத்தத்துடன்) தென்னம் பிள்ளையை அழகாகத்தான் வளர்த்தேன். ஆனால், அதனுள் வண்டு நுழைந்து துளைத்து வருவதை இதுவரை அறியவில்லை.

**கண் :** (தரையைப் பார்த்துக்கொண்டே) கள்ளுக்குப் பயன்படுந் தென்னம் பிள்ளையை வண்டு அழிப்பது எவ்வளவோ நலந்தானே அப்பா!

**சொக்க :** (வியப்புடன்) ஓ! அப்படியா? வேறு எதற்குப் பயன்படப் போகிறாய்? [எல்லப்பனும் முனிசாமி முதலியாரும் வருகிறார்கள்] வாருங்கள், வாருங்கள்!

**எல்ல :** (கைகுவித்து) வணக்கம்.

**சொக்க :** [கைகுவித்து] வணக்கம். அமருங்கள். [இருவரும் நாற்காலிகளில் அமர்கிறார்கள்] கண்ணப்பா! இங்கே வா! [அவன் அருகில் வருகிறான், காதில் ஏதோ கூறுகிறார். அவன் உள்ளே செல்கிறான்]

**முனிசாமி:** [சொக்கலிங்க முதலியாரைப் பார்த்து] இவர்களே நான் சொன்ன ஆசிரியர்.

**சொக்க:** மிக நன்று. சிறு வயதிலேயே பெரு நிலையை அடைந்திருக்கிறார்கள்.

**முனிசாமி:** அதிலென்ன ஐயம்?

**சொக்க:** மிக மிக நல்லது. நம் நாடு இவர்களைப் போன்றவர்களாலேயே தலையெடுக்க வேண்டும்.

**முனிசாமி:** (நகைத்து) தலையெடுப்பதாவது! பழம் பெருமையை அடைய வேண்டும் என்று சொல்லுங்கள்.

**சொக்க:** ஆமாம் ஆமாம்!...நான் இவரைப்பற்றி ஜில்லாபோர்டு தலைவரிடம் சொல்லி வைக்கிறேன். பையன் பிறந்த நாள் விழாவிற்கு வருவார்.

**முனிசாமி:** நானும் நினைவு கூட்டுகிறேன். இவர்களும் இருப்பார்களே; நேரிலே அறிமுகப்படுத்தி வைக்கலாம். (எல்லப்பரைப் பார்த்து) அன்றைக்கு நல்ல விருந்து! கலெக்டரும் வருகிறார்! நூறு பேருக்கு விருந்து!

**எல்ல:** (புன்முறுவலுடன்) முப்பது பேர்களுக்கு மேல் விருந்தில் இருக்கக் கூடாதாமே.

**முனிசாமி:** (நகைத்து) இவர்களுக்குக் கூடவா அந்தச் சட்டம்? கலெக்டரே வருகிறாரே!

**எல்ல:** (நகைத்து) கலெக்டர் வந்தால் மட்டும் சட்டம் திருந்தி விடுமோ! நெருப்பை நம்முடைய தாக்கிக் கொண்டால் சுடாதிருக்குமோ?

**முனிசாமி:** நெருப்பு மிதிப்பதில்லையா?

**எல்ல:** அதாவது எளியோரால் சட்டத்தை மீற முடியாது; வலியோரால் முடியும் என்று கூறுகிறீர்களா?

சொக்க: [புன்முறுவலுடன்] அந்தத் தொல்லை யெல்லாம் உங்களுக்கு ஏன்? [எல்லப்பன் முகம் வாடுகிறது; சிற்றுண்டியும் காப்பியும் கண்ணப்பன் கொண்டு வருகிறான்] சிற்றுண்டி சாப்பிடுங்கள். [கண்ணப்பன் மூவருக்கும் அருகில் சிற்றுண்டியை வைக்கிறான்.]

எல்ல: நான் இப்போதுதான் சிற்றுண்டி சாப்பிட்டு வந்தேன். மன்னிக்க வேண்டும்.

சொக்க: (நகைத்து) கல்லைத் தின்று கல்லைச் சீரணிக்கும் வயது. இது என்ன செய்து விடும்?

எல்ல: அம்முறை பழக்கமில்லை; நினைத்தபோதெல்லாம் நெஞ்சு கொண்டாலும் உடல் கொள்வதில்லை.

சொக்க: காப்பியாவது......

எல்ல: காப்பிப் பழக்கமே கிடையாது.

சொக்க: (முகம் வாடி) சரி, முதலியார்! நீங்கள் சாப்பிடுங்கள். (மற்றிருவரும் சாப்பிடுகிறார்கள். கண்ணப்பன் ஆசிரியருக்குக் கொண்டுவந்தவற்றை எடுத்துச் செல்கிறான்) பையன் நிலை எப்படியோ?

எல்ல: இரண்டு நாட்களாகப் பள்ளியில் அவன் நிலையைக் கூர்ந்து கவனித்தேன். படிப்புப் பசியில்லாதவன். (தாமரைக்கண்ணி வந்து கதவருகில் அமர்கிறாள்.)

சொக்க: வாத்தியார் பசியில்லாத பிள்ளைகளுக்கு மருந்து கொடுக்கவேண்டும். நல்ல பையன்களுக்கு மட்டும் சொல்லிக் கொடுப்பதென்பது சரியா? இம்மாதிரிப் பையன்களையும் தேர்ச்சி பெறச் செய்யவேண்டுமல்லவா?

எல்ல: உண்மையே; ஆனால் நிலத்தின் பண்பையும் நினைக்க வேண்டாமா?

சொக்க: பின் என்ன செய்யப் போகிறீர்கள்?

**எல்ல:** பத்து நாள் பார்க்கிறேன். நீங்கள் அதற்காக ஒன்றும் கொடுக்க வேண்டாம். நிலத்தைப் பண்படுத்திப் பார்ப்போம்.

**சொக்க:** இனிமேலா பண்படுவது!

**முனிசாமி:** கலைத் தெய்வம் பணத் தெய்வத்தோடு கலப்பதுதான் இல்லையே!

**தாமரை:** [கண்ணீரைத் துடைத்துக் கொண்டு] பையன் படித்துக் கலெக்டராய் வருவானென்று கனவு கண்டேன். பயிர் முளையிலேயே கருகிவிடுமோ? அந்தப் பெண் வேறு சாப்பிடாமற் சங்கடப்படுத்துகிறாள்! இரண்டு கண்களும் கெட்டுவிடும் போலிருக்கிறதே நிலை!

**முனிசாமி;** என்னவோ பாவம்! சிறு பெண்கள். அவர்களுடைய உள்ளம் கள்ளங் கபடமற்றது. பழகிப் போகிறார்களென்று விட்டுவிட வேண்டும். அந்தந்தக் காலத்திலே அறிவு வருகிறது.

**சொக்க:** இதற்கெல்லாம் இடங்கொடுத்தால் 'ஆடு கிடந்த இடத்தில் அரை மயிருங் கிடவாமற் போய்விடும்.' செல்வத்தைத் தேடும் துன்பம் அவர்களுக்கு வேண்டா மென்று நினைத்தேன். அந்தப் பெண் கழுநீர்ப் பானையுடன் பால் பானையுங் கலக்க வேண்டுமென்கிறாள்! பையனோ பிஞ்சிலே பழுப்பான் போலிருக்கிறது!

**முனிசாமி:** தங்கள் விருப்பம்; நாங்கள் சென்று வருகிறோம். [இருவரும் எழுகிறார்கள்]

**சொக்க:** நல்லது. [எழுந்து கைகூப்புகிறார். அவர்களும் கைகூப்பிவிட்டுச் செல்கிறார்கள்.]

# காட்சி - 13

**இடம் :** தேவதாஸ் வீடு.

**காலம் :** இரண்டாம் நாள் இரவு 8 மணி.

[மேரி ஒரு பாயின் மேல் அமர்ந்து ஒரு தமிழ்ப் புத்தகத்தை விளக்கின் வெளிச்சத்தில் வைத்துக் கொண்டு படிக்கிறாள். அப்புத்தகத்தில் ஒரு கடிதம் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது. அவள் சிந்தனை அதிலேயே ஈடுபட்டிருக்கிறது.

**மேரி :** [தானே] இதை அண்ணனிடம் காட்டி விடுவோமா?...... கடிதத்தில் எவ்விதக் குற்றமான செய்தியும் காணப்படவில்லையே! உண்மையாகத்தான் அன்புத் தெய்வத்தை வழிபட்டு இடும் மலர்களைப் போலவே அம்மொழிகள் உள்ளன!.....ஆனால், இது தவறான நெறியன்றோ? (நகைத்து) நாவல் படிக்கும் கோளாறுதானிது! நாவல் போலவே இந்த மொழிகளும் பொய்யானால்...... ஆம், இவை வெறும் பிதற்றல்கள்!......ஏன்? தங்கையைப் போல அண்ணனும் இருக்கலாகாதா?...உண்மை மொழிகளாக இராவிட்டால் வீண் அவநம்பிக்கைகளாக வேண்டும். எப்படியிருப்பினும் இதைக் கிழித்துப் போடுவதே நன்மை. அண்ணனிடம் காட்டினால் பெருந் தீமையே நேரும். (கிழிக்க மடிக்கிறாள். ஆனால், அப்படியே புத்தகத்திற்குள் வைக்கிறாள். நகைக்கிறாள்) ஏன், இந்த நிலை? என் உள்ளமும் அக்கடிதத்தைக் கிழிக்க விரும்பவில்லையே! (உடல் நடுங்குகிறது) சீ! இது தவறு. இக்கடிதத்தைப் பார்த்தபோதிலிருந்து ஏனோ படிப்பிலும் கருத்துப் பாயவில்லையே! (கமலம் வருகிறாள்.) மேரி கடிதத்தை மூடுகிறாள். எங்கே அம்மா, இன்னும் அண்ணனைக் காணோம்?

**கமலம் :** இன்னும் மணி ஆகவில்லையே!

**மேரி :** மணி என்ன?

**கமலம் :** எட்டுத்தானே?

**மேரி :** எட்டாய் விட்டதா? பின் ஏன் மணி ஆகவில்லை யென்றீர்கள்?

**கமலம் :** ஒன்பது மணிக்குத்தான் வருவேனென்னு சொன்னுன். படித்து விட்டாயா?

**மேரி :** (தடுமாற்றத்துடன்) இன்னும் முடியவில்லை, அம்மா! (புத்தகத்தைத் திறக்கிறுள்.) இல்லை! இது முடிந்து விட்டது! ஆங்கிலம் படிக்க வேண்டும். (அதை வைத்துவிட்டு ஆங்கிலப் புத்தகத்தை எடுக்கிறுள்.)

**கமலம் :** என்னடி உடம்புக்கு? முடிந்தது என்கிருய்! முடியவில்லை என்கிருய்!

**மேரி :** (தயக்கத்துடன்) என்ன சொன்னேன்? தமிழ் முடிந்தது என்றேன்! இது தப்பா?

**கமலம் :** (கவலையுடன்) நான் எதையும் தப்பென்று சொல்லவில்லையடி! ஏதோ ஒருமாதிரி பேசுகிருயே!

**மேரி :** (நகைத்து நாணத்துடன்) ஒரு மாதிரியும் பேசவில்லையம்மா! இன்று காலை மங்கைநல்லாளைப் பார்த்தேன். அவள் அன்பு என்னைத் திணற வைத்து விட்டதம்மா! அதனுல் இப்படித் தடுமாற்றம்.

**கமலம் :** (வியப்புடன்) அவ்வளவு அன்பு பணக்காரப் பெண்ணுக்கு உண்டா? அப்பாவைப் போல் இல்லையா அவள்?

**மேரி :** இல்லையம்மா! பருந்தின் வயிற்றிலே பச்சைக் கிளி பிறந்ததுபோல் இருக்கிறுள்; ஆனுல், அவள் நோக்கம் நிறைவேறுமா என்பதுதான் ஐயம்!

கமலம்: என்ன நோக்கம்?

மேரி; சாதி சமயமெல்லாம் அழுக்காம். அவற்றைக் கழுவிவிடப் போகிறாளாம்.

கமலம்: உம், அப்புறம்?

மேரி: பணம் ஒரு பேயாம்! அதை அவள் ஓட்டி விடுவாளாம். (மிதிவண்டியின் மணியோசை கேட்கிறது) அதோ அண்ணன் வந்துவிட்டதம்மா! (தேவதாஸ் உள்ளே வருகிறான். மிதி வண்டியை வைத்துவிட்டுச் சட்டையைக் கழற்றி வைக்கிறான்) ஏதண்ணா இவ்வளவு விரைவில்?

தேவ: வேலை முடிந்தது! வேறொன்றும் இல்லை. (கமலம் உள்ளே சென்று காப்பி கொண்டுவந்து கொடுக்கிறாள். காப்பியைப் பருகுகிறான்.) காலையில் மங்கையைப் பார்த்தாயா, மேரி?

மேரி: (புன்முறுவலுடன் எவ்வளவு அன்புடன் வரவேற்றாளண்ணா! இரவு நீ அவள் அப்பாவை வைதாயே, அவள் அதற்கு முற்றும் மாறானவள்.

தேவ: ஆம், அவள் ஒரு தங்கக் கம்பிதான்! ஆனால், என்ன செய்யலாம்? முள் நிறைந்த காட்டிலே முளைத்திருக்கும் மருக்கொழுந்து! பூதம் காக்கும் புதையல்!

கமலம்: நீங்கள் பேசிக் கொண்டிருங்கள்; நான் போய்ச் சாப்பாடு தயார் செய்கிறேன். (போகிறாள்)

## காட்சி - 14

**இடம்:** சொக்கலிங்க முதலியார் வீடு.

**காலம்:** இரண்டாம் நாள் இரவு 9 மணி.

[மங்கைநல்லாள் சோர்வுடன் ஓரறையில் படுத்திருக்கிறாள். கண்ணப்பன் அருகில் அமர்ந்து மெதுவாக பேச முயலுகிறான்.]

**கண்:** (அன்புடன்) இன்று முழுவதும் சாப்பிடவே யில்லையாமே?

**மங்கை:** (துக்கத்துடன்) எதற்கண்ணா சாப்பாடு?

**கண்:** அவர்களுக்கு விருப்பமில்லாததைச் செய்ய விடுவார்களா? அவ்வாறு நாம் செய்வதும் பிழைதானே?

**மங்கை:** என் விருப்பம் தவறானதா?

**கண்:** பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக நடக்கலாமா?

**மங்கை:** நான் கேட்டதற்கு விடையில்லையே! என் விருப்பம் தவறானதா? தவறில்லாத வழியிலும் பெற்றோரின் தவறான வழியிலும் நம் விருப்பத்தைக் கட்டிப் போட வேண்டுமா?

**கண்:** பின் என்ன? பெற்றோர் விருப்பமே நம் விருப்பம்.

**மங்கை:** அப்படியானால் நமக்கென்று விருப்பமோ அறிவோ இல்லையா? நாம் என்ன உயிரற்ற, உணர்வற்ற மரங்களா?

**கண்:** யாரில்லை யென்றார்கள்? எனினும், அவர்களுக்கும் ஏதாவது தெரியும் என்று நீ எண்ணவேண்டாமா? நம்மைவிட அவர்களுக்கு உலகப் பயிற்சி, இன்ப துன்ப ஈடுபாடுகள் உண்டென்பதை மறுக்க முடியுமா?

மங்கை: ஒரு நன்மை செய்வதிலே என்ன பயிற்சி வேண்டும்? அந்த நன்மையும் நம் கடமையோடு சேர்ந்திருக்கும்போது செய்யாதிருப்பது எப்படி?

கண்: எது நன்மை என்கிறாய்?

மங்கை: நம் வீட்டுக்கே நாள் முழுதும் உழைக்கும் அவளுக்கு இடையில் நல்லதாக இராவிட்டாலும் கிழியாத ஆடை கட்டவும் இயலவில்லை. சிறுபெண். அவளுக்கு எல்லோரையும் போல இருக்க வேண்டுமென்ற ஆவலிருப்பது இயற்கை. நம்மைக் கெஞ்சிக் கேட்கிறாள்; மேலும், நம் வேலைக்காரி நல்ல உடையுடுத்தாமல் இருப்பது நமக்கே நாணம் தராதா?

கண்: (அன்புடன் நகைத்து) உனக்கு உலகப் பயிற்சி யில்லையென்று இதனால் நன்றாய்த் தெரிகிறதே! வேலைக்காரிக்குப் பெரிய வீடுகளில் பொங்கலுக்குத்தான் ஒரு புடவை கொடுப்பார்கள். அதுவும் மட்டமான புடவைதான் கொடுப்பார்கள்!

மங்கை: இந்த வழக்கம் எனக்குத் தெரியும். இது தகுமா என்றுதான் கேட்கிறேன்.

கண்: அதுதான் தகுதி. செல்வர்கள் அணியும் ஆடையை அவர்கள் அணிந்தால் அழகாகவும் இராது.

மங்கை: சீச்சீ! இவ்வாறு சொல்ல நாணமில்லையா உனக்கு? உழைத்துழைத்திளைத்தார்கள். வெயிலின் வெப்பத்தால் கருகினார்கள்! அவ்வாறு அவர்கள் பனியிலும் மழையிலுங்கூட உழைக்காவிட்டால் இந்தப் பாழாய்ப் போன செல்வர்களுக்குப் பூப்போன்ற மிருதுத் தன்மையும் பொன் போன்ற நிறமும் எங்கிருந்துவரும்?

**கண்:** (புன்முறுவலுடன்) நல்ல சவுக்கடி கொடுக்கிருயே!

**மங்கை:** உள்ளத்தைக் கூறுவது சவுக்கடி போலப் பட்டால் எது பூமாலை போல இருக்குமோ? போகட்டும்; உன் பிறந்த நாள் விழா எப்படித் திட்டம் கொண்டிருக்கிறது? அது தகுதியா?

**கண்:** நாஞ அந்தத் திட்டம் போட்டேன்? அதுவும் உலகியலின்படி நடக்கிறது.

**மங்கை:** நல்ல உலகியல்! ஓடியாடி உழைப்பவர்கள் ஒட்டிய வயிறுடன் ஓய்ந்து கிடப்பதும், திண்ணை தூங்கிகள் எண்ணி யெண்ணித் தின்றுவிட்டு ஏப்பமிடுவதுந்தான் உலகியலாஞல், அது அழிய வேண்டும் அண்ணு! மக்கட் பிறவியிலேயே இவ்வகை அறிவிலாச் செயலிருக்கலாமா?

**கண்:** [நகைத்து] உன் சொற்பொழிவு உருக்கமானதுதான்! ஆஞல், அது வெறுங் கானல் நீர்தான் என்று நினை. பள்ளிக்கூடம் உலகமாகாது.

**மங்கை:** ஏன் பள்ளிக்கூடம் உலகமாகாது? பள்ளியில் படிப்பது உலகத்தில் நடக்கத் தெரிந்து கொள்ளத் தானே?

**கண்:** பள்ளிக்கூடத்திலே எல்லோரும் உயர்வு தாழ்வின்றிப் பழகுகிருர்கள். அப்படியே அவர்கள் வாழ்விலும் முடியுமா?

**மங்கை:** அது என்னவோ, நீ கூறுவது ஒன்றும் விளங்கவில்லை—விளங்கவில்லை யென்பதில்லை—சரியென்று ஒப்ப முடியவில்லை. பாழாய்ப் போன போர் இந்த நாட்டிலும் நடைபெற்று அணுகுண்டை வீசி யாராவது அழித்து விட்டால், இனி உண்டாகும் உலகமாவது சமநெறியிலே செல்லாதா?

**கண்:** ஏது? மிகவும் வெறுத்துப் பேசுகிறாய்! எப் போதும் வலியவர் எளியவரை வாட்டி வதைத்துத் தாம் மட்டும் சோர்வின்றியிருந்து சாப்பிடுவது மாறாது. ஒரே உடம்பிலும் கைகால்கள் உழைத்துக் கொடுக்க, வாய் உண்டு மகிழ்தல் வழக்கந்தானே?

**மங்கை:** உன் உவமை பொருத்தமில்லை அண்ணா! ஒரே உடம்பில் வாய் உண்பது கைகால்களுக்கு நன்மை செய்கிறதே! வாய் உண்ணாவிட்டால் கைகால்கள் சோர்ந் தும் விடுமே! அவ்வாறே செல்வர்கள் தின்று கொழுத் தால் ஏழைகள் வாட்டமின்றியிருக்க முடியுமா? நீ கூறும் உடம்பில் வயிறு கொழுத்துக் கைகால்கள் வற்றிப் போய்த்தானே யிருக்கின்றன?

**கண்:** [நாணத்துடன்] நீ என்ன, இப்போது சீர் திருத்தம் செய்து விட்டுத்தான் சாப்பிடப் போகிறாயா? ஒருத்தி தலையாட்டினால் உலகமே ஆடுமோ என்ன?

**மங்கை:** உங்கள் ஊறிப் போன பழக்க வழக் கங்கள் மாறினாலும் மாறாவிட்டாலும் நான் மட்டுமாவது அமைதியும் சம நோக்குமாக நடந்து கொள்ளப் பார்க் கிறேன். அம்முயற்சியிலே வீழினும் மேன்மையென்றே நினைக்கிறேன்.

**கண்:** ஓ! உண்ணாவிரதமிருந்து பெற்றோர்களைத் திருத்தப் பார்க்கிறாயோ? உன் முயற்சிக்குக் கடவுளருள் கிட்டுமாக! இப்போது என்னை என்ன செய்யச் சொல் கிறாய்?

**மங்கை:** நீ போய் வயிறு நிறையச் சாப்பிடு என் கிறேன்.

**கண்:** இந்த வீட்டிலே தோன்றியவை இரண்டு செடிகள். அவைகளில் ஒன்று வாடிவதாம் மற்றொன்று செழிப்புடன் வளர்வதும் நன்றாயிருக்குமா? நானும் இனி பட்டினியாகவே யிருப்பேன்.

**மங்கை:** [நகைத்து] உனக்கு என்ன அண்ணா குறை? உன் தோழனுக்கு வேண்டியதை நீ செய்ய முடியும். என்னைப் போலப் பட்டினியாக இருப்பானேன்?

**கண்:** உண்மையே; நீயும் உன் தோழிக்காக எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் வேலைக்காரிக்குத் தானே இப்போது வருந்துகிறாய்? வேலைக்காரியும் தோழியும் சமமா?

**மங்கை.** அட பாழாய்ப் போன உலகமே! உனக்குத்தான் கண்ணில்லையா? அது கிடக்கட்டும், அண்ணா! பூங்காவனத்தை இனி வேலைக்காரியாக ஏற்றுக் கொள்ள வேண்டாம்; என் தோழியாக எப்போதும் என்னுடன் இருக்கவாவது வழி செய்ய முடியுமா உன்னால்?

**கண்:** அப்படியானால் இந்த உளுத்துப் போன சமூகம் உளுக்காமல் நின்று விடுமா?

**மங்கை:** (சிந்தனை செய்து) ஆம் அண்ணா! அம்முறை தவறுதான்! வேலைக்காரிக்கு வேண்டியதைச் செய்ய முடியாதவர் தோழிக்கு மட்டும் ஏன் செய்யவேண்டும்? மேலும் சமநெறி நோக்கிற்கு இது தவறுதானே?

**கண்:** (நகைத்து) ஏது ஏது! நான் விளையாட்டுக்குக் கூறியது வினையாகவே முடிந்ததா? எனக்கு மிகவும் பசிக்கிறதம்மா! வா, சாப்பிட்டு விட்டு மறுபடியும் ஆற அமரப் பேசுவோம்.

மங்கை: (வெறுப்புடன்) அப்படியானால், இது வரையில் விளையாட்டுக்குத்தான் பேசினாயோ? போ, போ! என் பசியை யெல்லாம் உங்கள் பழக்க வழக்கங்கள் தின்று விட்டன!

கண்: பட்டினியோடு எந்த வினையையும் இடையூறின்றி முடிக்க முடியாதம்மா!

மங்கை: உடல் நோய்க்கு உற்ற மருந்து பட்டினி தான்.

கண்: எந்த உடலுக்கு நோய்? உன் உள்ளத்திற்குத் தானே?

மங்கை: இல்லை, உங்கள் பழக்க வழக்க உடலுக் குத்தான்.

கண்: எங்கள் பழக்க வழக்க உடலுக்கு நீ பட்டினி யிருப்பது என்ன முறை?

மங்கை: நானும் அந்த உடலின் உறுப்புத்தானே! ......அண்ணா! ஒரு வேண்டுகோள்.

கண்: என்ன அது?

மங்கை: பூங்காவனத்தை ஒரு முறை காலையில் வரச் சொல்கிறாயா? தோட்டத்தின் வழியாக இந்த அறைக்கு வெளியே பலகணியின் ஓரமாகவாவது வந்தால் நான் பார்ப்பேன். இது செய்ய முடியுமா?

கண்: உன் வேண்டுகோளை நிறைவேற்றுகிறேன். என் வேண்டுகோளை நிறைவேற்றுகிறாயா?

மங்கை: என்ன அண்ணா?

கண்: நீ வந்து ஒருருண்டை சாப்பிட வேண்டும்.

**மங்கை:** (துக்கத்துடன்) இதுதானா அண்ணா உன் வேண்டுகோள்? என் நோக்கம் நிறைவேற நீ செய்யும் துணை இதுதானா? அது நிறைவேறாமல் நான் உண்ணவே மாட்டேன்.

**கண்:** (கண்ணீர் ததும்ப) வேண்டாம் இந்தப் பிடிவாதம் அம்மா!

**மங்கை:** (ஒருபுறமாக நோக்கிய வண்ணம்) நான் என்ன செய்வேன் அண்ணா! உணவை நினைத்தவுடன் ஒவ்வொரு சோறும் என் உணர்வை விழுங்கும் பூதம்போற் காட்சியளிக்கின்றதே! என் பசிக்கு உணவு, நம்மைப் போலவே பிறரையும் நடத்தவேண்டும் என்பதுதானே? நீ வீரனாக இருந்தால் என் விருப்பத்திற்கு இடையூறாக இருக்கக்கூடாது.

**கண்:** (சிந்தனையுடன்) அப்படியே, உன் விருப்பம் நிறைவேறும் வழியில் நடக்கிறேன். எனக்குமட்டும் அவ்வுணவு அமுதமா? நானும் இன்று முதல் பட்டினியே! (செல்கிறான்)

**மங்கை:** (கண்ணீர் வடிய) என்னால் நீயும் இடுக்கண் அடைவதா? வேறு வழி எனக்குத் தோன்றவில்லையே!

## காட்சி - 15

**இடம் :** எல்லப்பன் வீடு.

**காலம் :** மூன்றும் நாட் காலை 8 மணி.

[எல்லப்பன் தனிமையாக வீட்டின் வெளிக்குறட்டில் உலாவுகிறார்.]

**எல் :** (தானே) குழந்தை யுள்ளத்திலே எந்த வேறுபாடுமிருப்பதில்லை! அதன் மூளையு மில்லை யெனலாம். அது அப்படியே வளர்ந்தால் சமநெறி தழைக்கும். நல்ல மரத்திலே புல்லுருவியைப்போல் அச்சிறுவர்களின் வீட்டுப் பழக்கந் தோன்றிச் சமநெறியை அழித்துச் செருக்கென்னும் முட்புதரோடு துணையாகி விடுகிறது! (பேசாமல் உலாவுகிறார்) பள்ளியிலே மாணவர்கள் பழகும் முறை எவ்வளவு மாசற்றது! தானே உயர்ந்த குலமென்று ஓதி யெழுதி வைத்துக்கொண்ட பிராமணக் கொழுந்தும், தானே பிறப்பினாலே நிலவுரிமை பெற்றவன்—ஆண்டான்—என்று ஆட்சிபுரியும் வேளாளக் கொழுந்தும் கடைப்பட்டவனென்று கழிக்கப்பட்ட பறைக் குலக் கொழுந்துடன் சற்றும் வேறுபாடின்றிப் பின்னித் தழைக்கின்றன! ஆனால், வீட்டிலோ, இடையிலே பெரிய மதிற் சுவர்! கரை காண முடியாத பெருங் கடல்! பெரும் பள்ளம்! தீயிட்டியை யுடைய நெருப்பு மலை!......மேடைகளிலே வாய் வலிக்கப் பேசுவார்கள். தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்கு முடியாத வழியெலாம் முழக்குவார்கள்! ஆனால், வீட்டிலே அரை வயிற்றுக் கஞ்சி அளிக்கவும் அருகிலே அமர்ந்து—நின்றாவது—பேசவும் உள்ளத்திலே அன்றி வெளியிலும் இடந்தர மாட்டார்கள்! இவ்வுலக நெறியை என்னென்பது? வேலைக்காரிக்கு—நாளெல்லாம்

நலந் தர உழைப்பவளுக்கு—அழகிய சிறு பெண்ணுக்கு மானத்தை நன்றாக மறைத்துக்கொள்ள இந்தப் பரந்த உலகிலே — செல்வம் வளருந் திருமாளிகையிலே—சிறு புடவை ஒன்று கிடைக்கவில்லையே!

**பூங்கா:** (உள்ளிருந்தபடியே) பெருக்கிவிட்டேன் ஐயா!

**எல்:** சரி, நீ போகலாம். (பூங்காவனம் வெளியே வருகிறாள்) உன் பெயரென்ன அம்மா!

**பூங்கா:** (நாணத்துடன்) பூங்காவனம்.

**எல்:** (புன்முறுவலுடன்) நல்ல அழகான பெயர்! உனக்கு மாலையிலே ஒரு புடவை வாங்கி வருகிறேன். நாளைக் காலையில் வாங்கிக் கொண்டுபோ.....எத்தனை முழம் வேண்டும்?

**பூங்கா:** (வியப்புடன்) ஏன் எனக்குப் புடவை ஐயா!

**எல்:** உடுத்திக் கொள்ளத்தான்.

**பூங்கா:** இன்றுதானே வேலைக்கு வந்தேன்?

**எல்:** (நகைத்து) அதனால் என்ன? உனக்குத் துணி அவசியம் வேண்டியதுதானே! வேலை செய்வதற்கும் துணிக்கும் என்ன ஒட்டுப்பற்று?

**பூங்கா:** (நாணத்துடன்) வேலைக்கேற்ற கூலி கிடைச்சாப் போதாதா?

**எல்:** (அன்புடன்) நீ வேலை செய்வதற்காகப் புடவை வாங்கித் தரவில்லை அம்மா! என் தங்கை துணி வேண்டுமென்றால் வாங்கித் தரமாட்டேனா?

**பூங்கா:** (வியப்புடன்) நீங்க சொல்றது எனக்கு விளங்கலையே! உங்க தங்கச்சிக்கு வாங்கிக் கொடுக்கலாம். எனக்கு வாங்கிக் கொடுக்கலாமா?

**எல்:** (அன்புடன்) உடன் பிறந்தால் மட்டும் தங்கையா? உன் நிலையை அறிந்த பிறகும் உனக்கு உதவி செய்யாமல் வாழ்பவன் ஒரு மனிதனா? மனிதர்க்கே அவமானமில்லையா இம்மாதிரி ஒருவர் வாட மற்றொருவர் பார்த்திருப்பது?

**பூங்கா:** எங்கள் அம்மாவைக் கேக்கறேன் போய் வரேன். மங்கையைப் பார்க்கணும். அது வரச் சொல்லிச்சாம். பாவம்! ரெண்டு நாளாப் பட்டினியாக் கிடக்குதாம்! அதன் அண்ணன் வந்து சொன்னாரு.

**எல்:** அப்படியா? அம்மா எங்கே?

**பூங்கா:** வழக்கமா வேலை செய்யும் வீட்டுக்குப் போனாங்க. வரதுக்குள்ளே நானும் போயிட்டா, ரெண்டு பேருமா மங்கை வீட்டுக்குப் போவோம். இன்னுமே வேலை எதுவும் இல்லையே?

**எல்:** ஒரு வேலையு மில்லை. நீ போகலாம். (போகிறாள். முனிசாமி முதலியார் வருகிறார்.) வாருங்கள், உள்ளே போவோமா?

**முனி:** இல்லை. வேறே ஒரு வேலையாகப் போக வேண்டும். உங்களிடம் ஒன்று சொல்ல வந்தேன்.

**எல்:** ஒன்றல்ல, எத்தனை வேண்டுமானாலும் சொல்லுங்கள். கேட்கிறேன்.

**முனி:** சொக்கலிங்க முதலியார் உங்களை ஒன்று கேட்டுவரச் சொன்னார்.

**எல்:** என்ன அது?

**முனி:** கண்ணப்பன் பிறந்த நாள் வருகிறது.

**எல்:** ஆமாம்.

முனி: அன்றைக்குக் கலெக்டர் வருகிறார்.

எல்: ஆமாம். எல்லாம் தெரிந்தவைதானே?

முனி: (நினைவு வந்து) ஓ! ஆமாம்! உங்களுக்குத் தான் தெரியுமே? பல தொல்லைகளால் மறந்து விட்டேன். என் உள்ளமே ஒரு பலசரக்குக் கடை.

எல்: (நகைத்து) எல்லாருடைய உள்ளமும் பல சரக்குக் கடைதானே? ஓரே சரக்குத்தானா உலகி லுள்ளது? அது இருக்கட்டும், வந்ததைக் கூறுங்கள்.

முனி: நீங்கள் அன்றைக்குக் கலெக்டரை வர வேற்று ஆங்கிலத்திலே பேச வேண்டும்.

எல்: நானா பேச வேண்டும்?

முனி: ஆமாம். கலெக்டர் அப்படியே மெய் மறந்து போகவேண்டும்.

எல்: என்னாற் பேச முடியாதே!

முனி: (நகைத்து) ஏன் இந்தப் பொய்? நீங்கள் நன்றாகப் பேசுவீர்களென்று அறியாதார் யார்?

எல்: (நகைத்து) நான் பேசுவதிற் புலியென்றே வைத்துக்கொள்வோம். அன்று பேச முடியாதென்று கூறுகிறேன்.

முனி: ஏன்?

எல்: நான் வரப்போவதேயில்லை அன்றைக்கு!

முனி: ஏன்? வெளியே எங்கேயாவது போகிறீர் களா?

எல்: இல்லை. நான் அந்த விருந்துக்கு வர முடியாது என்கிறேன்.

முனி: ஏன்?

எல்: சொல்ல வேண்டுமா?

முனி: சொல்லாமல் எப்படித் தெரியும்?

எல்: சொன்னால் வருந்த மாட்டீர்களே?

முனி: ஏன் வருந்துகிறேன்?

எல்: நாடெங்கும் உள்ள மக்கள் உண்பதற்குப் போதுமான உணவும் கிடைக்காமல் வருந்துகிறார்கள். ஆனால், உயர்ந்த உணவு வகைகளை அமர்ந்து உண்ண விரும்புகிறீர்கள் அல்லவா?

முனி: உண்மையே! அதனால்?

எல்: அதனால், நானும் மற்றவர்களுண்ணும் நிலையிலேயே இருப்பேன். ஆகையால், நான் வரவில்லை.

முனி: (புன்முறுவலுடன்) ஏழைகளுக்குத்தான் உணவு போடுகிறோமே?

எல்: கலெக்டருடன் ஒன்றாக அமர்ந்து உண்ணுவார்களா?

முனி: அது எப்படி முடியும்? உலகம் விரும்பாதே.

எல்: ஏழைகளை—நம்முடன் பிறந்தவர்களை—நமக்குழைத்தவர்களை—ஒன்றாக வைத்துண்ண உலகம் விரும்பாது. ஆனால், அவர்களுழைப்பை—அவர்களை வயிற்றிலடித்து—உண்ண உலகம் விரும்பும்.

முனி: நாம் கூப்பிட்டாலும் அவர்கள் வந்து கலெக்டரோடிருந்து உண்ண அஞ்சுவார்களே!

எல்: ஆம்; அவ்வளவு தொலைவில் நாம் வைத்திருக்கிறோம். அவர்களை மட்டிகளாக்கி விட்டோம். அந்தப் பாவந் தொலைய வேண்டுமானால், அவர்களை விழிப்படையச் செய்ய வேண்டும். விலக்கிவைத்த நாமே கூட்டிக் கொள்ளவும் வேண்டும்.

**முனி :** அப்படியானால், நீங்கள் வந்து பேசமாட்டீர்களென்று சொல்லிவிடட்டுமா?

**எல் :** உம்! நன்றாகச் சொல்லுங்கள்.

**முனி :** ஏனென்று கேட்டால் என்ன சொல்வது?

**எல் :** என் கருத்தைத் தெளிவாகச் சொல்லுங்கள்.

**முனி :** அது நன்றாயிராதே! பொல்லாங்கு ஏன்?

**எல் :** பொய் சொல்வது ஆசிரியனுக்காகாது. அப்படி என்ன பொல்லாங்கு நேரும்?

**முனி :** எல்லாப் பொல்லாங்கும் வரும்; வேலைக்கே வினை வரினும் வரும்.

**எல் :** வஞ்சகம் நிறைந்த உலகிலே உண்மைக்கு உயர்வில்லை யென்பதை உணர்வேன். எனினும், உள்ளம் விரும்பா நெறியிலே ஒருபோதும் செல்லேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

**முனி :** உங்கள் விருப்பம்! நான் சென்று வருகிறேன். (செல்கிறார்)

## காட்சி - 16

இடம்: சொக்கலிங்க முதலியார் வீட்டுக் கூடம்.

காலம்: மூன்றாம்நாட் காலை 9 மணி.

[மங்கைநல்லாள், பூங்காவனம், இலக்குமி மூவரும் உரையாடுகிறார்கள்.]

**பூங்கா:** (கண்ணீர் வடிய மங்கையின் கையைப் பற்றிக் கொண்டு) என்னம்மா! இப்படி யிளைச்சிப் போனியே! கேட்டது மெய்யாச்சே!

**மங்கை:** என்ன கேட்டாய்?

**பூங்கா:** சாப்பிடாதே பழி பண்றேண்ணுதான் கேட்டேன்.

**மங்கை:** உடம்புதானே யிளைத்தது? இளைத்துப் போகட்டுமே! நீ இப்போது என்ன செய்கிறாய்?

**பூங்கா:** (கண்ணீரைத் துடைத்துக் கொண்டு) தெரியலியா உனக்கு? உன்னை வதைச்சிக்கிட்டிருக்கிறேன்.

**மங்கை:** நீயா என்னை வதைக்கிறாய்? நானல்லவோ உன்னை வதைக்கிறேன்? (பூங்காவனத்தின் கண்ணீரைத் துடைக்கிறாள்)

**பூங்கா:** நீ பேசறதே இப்படித்தான்.

**மங்கை:** ஆமாம்! பயனில்லாத வீண் பேச்சுத் தானே?

**பூங்கா:** எங்கிட்டே உனக்கு அன்புண்டா?

**மங்கை:** இருந்து என்ன பயன்? என்ன செய்கிறேன்? கொலைதானே!

**பூங்கா:** இந்த மாதிரிப் பேசாதே! அன்பு இருக்குதாண்ணு சொல்லு.

**மங்கை:** இருக்கிறதென்று வைத்துக்கொள்.

**பூங்கா:** அப்படின்னா நான் சொல்றப்படியே செய்.

**மங்கை:** என்ன சொல்கிறாய்? என்னால் முடிந்ததைச் செய்யமாட்டேன் என்று நினைக்கிறாய்?

**பூங்கா:** நீ இப்படிப் பழி பண்ணாதே சாப்பிடணும்.

**மங்கை:** (நகைத்து) சாப்பிடுவது எதற்கு?

**பூங்கா:** வாழ்ந்து பெருகுறதுக்கு.

**இலக்குமி:** ஆமாண்டியம்மா! சின்னக் கொழுந்து இப்படி வத்தலாமா?

**மங்கை:** பூங்காவனம் மட்டும் முற்றிய செடியோ?

**இலக்:** பூங்காவனமும் நீயும் ஒண்ணும்மா! நீ நல்ல நிலத்துலே முளைச்ச செடி!

**மங்கை:** நல்ல நிலமா? நாற்றமெடுத்த சாக்கடை நீர் பாயும் நிலம்! அதனாலேதான் வேரழுகுகிறது! (தாமரைக்கண்ணி வருகிறாள்)

**தாமரை:** (சீற்றத்துடன்) ஏன் இந்தப் பீடைகள் இங்கே வந்தார்கள்? இந்தக் குடும்பத்தைக் குட்டிச் சுவராக்க மடிகட்டிக் கொண்டார்களோ?

**மங்கை:** யாரம்மா, குடும்பத்தைக் குட்டிச்சுவராக்குகிறார்கள்? நான் வரச் சொன்னதால் வந்தார்கள். குட்டிச் சுவராக்குகிறவர்கள் நீயும் அப்பாவுந்தான். (தேவதாஸ் வந்து நிற்கிறான்)

**தாமரை:** அடியே அம்மா! இது என்ன பெண்ணடி? குலத்துக்குக் கோடரிக் காம்பாய் முளேச்சுதே! (வேலைக்காரிகள் பக்கம் திரும்பி) எல்லாம் இந்தச் சனியன்கள் வீட்டில் காலை வைத்ததிலிருந்துதான் வந்தது. நீங்கள் இரண்டு பேரும் ஏன் இப்படி வதைக்கிறீர்கள் இவளை?

**பூங்கா:** (கண்ணீர் வடிய) நாங்கள் அதைச் சாப்பிடச் சொல்லத்தானம்மா வந்தோம். அது மாட்டேண்ணு மல்லுக் கொடுக்குது! பாவம்! வாடி வதங்கிப் போயிட்டுது அம்மா!

**தேவ:** (மங்கையின் முகத்தைப் பார்த்துக் கொண்டே) மங்கையின் உள்ளம் நல்ல உள்ளந்தான்! இருந்தாலும் பெரியவர்கள் விருப்பத்திற்கு மாருக நடக்கக் கூடாது. இப்படிச் சாப்பிடாமல் வீணே உடம்பை உலர்த்துவதால் என்ன பயன்?

**மங்கை:** செல்வச் செருக்கு அழிவதுதான் பயன். என்னைப் பறிகொடுத்த பிறகாவது எல்லோரும் நம்மைப் போல் மனிதர்கள் என்ற உணர்ச்சி வராதா?

**தேவதாஸ்:** (வியப்புடன்) ஆ! என்ன உயர்ந்த குணம்? (தாமரைக்கண்ணியை நோக்கி) நான் சொல்கிறேனென்று வருத்தப்படாதீர்கள். குழந்தையின் விருப்பப்படி நடந்து கொள்ளுங்கள். அதனல் உங்களுக்கு நல்ல புகழ் உண்டாகும். உங்கள் குலம் விளங்கும்.

**தாமரை:** ஆமாம் ஐயா! ஆமாம்! நீ போய்க் கணக்கெழுது. சிட்டுக் குருவிக்குப் பட்டாமணியம் ஏன்?

தேவ: (நகைத்து) நீங்கள் கூறுவது சரிதான் அம்மா! இருந்தாலும் இந்த வீட்டின் உப்பை உண்ணும் நான் இந்த வீட்டின் நன்மையையும் நாட வேண்டாமா? உங்கள் பிடிவாதத்தால் அருமையான மாணிக்கத்தை இழந்து விடுவீர்கள் போலிருக்கிறதே என்று கூறினேன். (மங்கையின் கண்கள் அன்புடன் நோக்குகின்றன. இவனும் நோக்குகிறான். மங்கையின் முகம் வெட்கத்தால் சிவக்கிறது. தேவதாஸ் செல்கிறான்)

மங்கை: (அவனைப் பார்த்துக்கொண்டே) அம்மா! பூங்காவனத்தை இனியாவது இங்கேயே யிருக்கச்செய்து என்னைப்போல் பார்த்துக்கொள்ள மாட்டாயா? இல்லாவிட்டால் இவளுடன் நானும் வெளியே செல்கிறேன்.

தாமரை: ஓ! அவ்வளவு தூரம் வந்து விட்டதா? நீ இப்படியே செத்தாலும் சரி; உன் மனம் போனபடி நடக்க விடமாட்டேன். (மங்கையின் கையைப் பிடித்து இழுக்கிறாள். மங்கை பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளத் தானும் பின்னுக்கு இழுக்கிறாள். அந்த வேகத்தில் தாயின் கை சோரத் தவறிக் கீழே விழுகிறாள். தலையில் அடிபட்டு மூர்ச்சையாகிறாள். எல்லோரும் 'ஐயோ' என்று அலறுகிறார்கள். மங்கையை எடுத்து ஒரு பெஞ்சின்மேல் படுக்க வைக்கிறார்கள். தேவதாஸ் கூக்குரல் கேட்டு ஓடி வருகிறான். தலையில் காயத்தைக் கண்டு பஞ்சு கேட்கிறான். பூங்காவனம் உள்ளே ஓடிப்போய் பஞ்சும் மருந்துப் புட்டியும் கொண்டு வருகிறாள். தேவதாஸ் அப்பஞ்சை மருந்தில் நனைத்து வைத்துத் துணியினால் கட்டுகிறான். பிறகு டாக்டரை அழைக்க ஓடுகிறான்.)

---

## காட்சி - 17

இடம்: எல்லப்பன் வீடு.

காலம். நான்காம் நாள் காலை 8 மணி

[எல்லப்பன் ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். இலக்குமி எதிரே தரையில் அமர்ந்திருக்கிறாள். அவள் கையில் இரண்டு புடவைகள் இருக்கின்றன.]

**இலக்:** (மகிழ்வுடன்) என் பொண்ணு சொன்னா. நான் நம்பலே. உங்களைக் கடவுள் காப்பாத்தணும்.

**எல்ல:** இதை ஒரு பெரிதாக நினைக்க வேண்டாம். எனக்கு என்ன செலவிருக்கிறது? பூங்காவனத்திற்கு இதைவிட இன்னும் அதிகமாகவும் செய்யலாம்.

**இலக்:** உங்களுக்கு இன்னும் கலியாணமாகலிங்களா?

**எல்ல:** (வருத்தத்துடன்) ஆகித் தவறி விட்டது.

**இலக்:** (கண்ணீர் ததும்ப) எப்போது?

**எல்ல:** (புன்முறுவலுடன்) அதைப்பற்றி ஏன் வருத்தப்படுகிறீர்கள்? எனக்கு இருபதாவது வயசிலே கலியாணமாச்சு. இருபத்திரண்டாவது வயசிலே தவறிப் போச்சு.

**இலக்:** ஐயோ பாவம்! இப்போ என்ன வயசு?

**எல்ல:** இருபத்தாறு.

**இலக்:** பாவம், சின்ன வயசு! பின்னே ஏன் மறுகலியாணம் பண்ணிக்கலே?

எல்ல: செய்து கொள்வதில்லை யென்று முடிவு செய்திருந்தேன்.

இலக்: அடடா! அந்தக் குழந்தை அவ்வளவு நல்லா இருந்தது போலேருக்குது.

எல்ல: ஆமாம்.

இலக்: (பெருமூச்சு விட்டு) இருந்தாலும் இந்தச் சின்ன வயசிலே இப்படி யிருக்கலாமா? பொண்ணுப் புறந்தாத்தானே துன்பப்பட்டுக்கிணு இருக்கணும்? ஆம்புளைக்கென்னுங்க? எத்தனைப் பொண்ணு வேணுண்ணலும் பண்ணிக்கலாம். ஏதாவது உங்க உறவிலே சாதியிலே ஒரு பொண்ணை நல்லதாப் பாத்து முடிச்சிக்கிட்டு வந்துடுங்க.

எல்ல: (புன்முறுவலுடன்) இரண்டு மூன்று நாளாக அந்த எண்ணமும் வந்திருக்கிறது.

இலக்: (களிப்புடன்) சாமி புண்ணியத்துலே நடக்கணுங்க. பொண்ணு எங்கே சொந்தத்துலே கிந்தத்துலே இருக்குதுங்களா?

எல்ல: பலபேர் இருக்கிறார்கள். இருந்தாலும்......

இலக்: உங்களுக்குப் புடிக்கலியாங் காட்டியும். அப்புறம்?

எல்ல: இரண்டு நாளைக்குமுன் ஒரு பெண்ணைப் பார்த்தேன். அந்தப் பெண் என் வீட்டுக்காரி மாதிரியே இருக்கிறாள். அவளைப் பார்த்ததிலிருந்து அவளைப் பண்ணிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் வந்தது.

இலக்: எல்லாம் கடவுள் சித்தம். நல்லவங்களுக்கு எல்லாம் நல்லாத்தானுங்க கிடைக்கும். பொண்ணைப் பார்த்து முடிவு பண்ணிட்டிங்களா?

**எல்ல:** இன்னும் அந்தப் பேச்சு வெளியிலே வரவேயில்லை. பெண் வீட்டாருக்கும் தெரியாது.

**இலக்:** உடனே கேட்டு முடிவு பண்ணிடுங்க. அந்த முதலியாரூட்டிலே நேத்து நடந்தது தெரியுங்களா?

**எல்ல:** தெரியாதே! முதலியார் வீட்டுப் பெண் பார்க்க விரும்புவதாகப் பூங்காவனம் கூறினாள்.

**இலக்:** ஆமாம். அது ரொம்ப வாடிப் போச்சிங்க! கொடியாட்டம் துவண்டு போயிருந்ததுங்க! பூனை கையிலே கிளியாட்டம் நேத்து அந்தம்மாகிட்ட ஆப்புட்டு முழிச்சுதுங்க. எங்களோடே பேசக் கூடாதுண்ணு புடிச்சி இழுத்தாங்க, அந்தப் புண்ணியவதி! அது திமிரிச்சி. அப்படியே கைநழுவி விழுந்துட்டுதுங்க. மண்டையிலே நல்ல அடி! ரத்தம் பிச்சிகிட்டுதுங்க!

**எல்ல:** (பரபரப்புடன்) ஐயோ! பாவம்! அப்புறம்?

**இலக்:** டாக்டர் வந்தார்! கட்டுப் போட்டுட்டுப் போனார்.

**எல்ல:** இப்போது?

**இலக்:** கொஞ்சம் தெளிவுதான். நேத்து சாயந்திரந்தான் பூங்காவனமும் அந்தப் பொண்ணுமா கொஞ்சம் சாப்பிட்டாங்களாம். பூங்காவனத்துக்கு மறுபடியும் அங்கே வேலை கிடைச்சுது. துணிமணியும் கிடைச்சுது! நான் போகட்டுங்களா?

**எல்ல:** சரி, போய் வாருங்கள். (போகிறாள்.)

## காட்சி - 18

**இடம் :** சொக்கலிங்க முதலியார் வீடு.

**காலம் :** நான்காம் நாள் காலை 9 மணி

[சொக்கலிங்க முதலியார் உலாவிக்கொண்டிருக்கிறார். கண்ணப்பன் நிற்கிறான். முனிசாமி முதலியார் வருகிறார்.]

**சொக் :** (முகவாட்டத்துடன்) வாருங்கள் முதலியார்! அமருங்கள் !

**முனி :** (ஒரு நாற்காலியில் அமர்ந்து) மங்கைக்கு மண்டையில் அடிபட்டதாமே? எப்படி யிருக்கிறது ?

**கண் :** (வெறுப்புடன்) மண்டையில் அப்படி ஒன்றும் அடியில்லை; மனத்திலேதான் நல்ல அடி !

**சொக் :** (அதைக் கவனியாதவர்போல) நல்ல காலம். அப்படி யொன்றும் அதிகமில்லை. இரண்டு நாளிலே ஆறிவிடும்.

**முனி :** டாக்டர் வந்தாரோ ?

**சொக் :** அவர் வந்துதான் கட்டுப் போட்டார். அந்தப் பெண்ணின் விருப்பப்படி நடக்கவும் ஏற்பாடு ஆய்விட்டது. இந்தப் பையன் விருப்பப்படியும் நடக்க வேண்டுமாம்.

**முனி :** என்ன அப்பா அது ?

**கண் :** அந்த டாக்டர் மண்டைக்குக் கட்டுப் போட்டார். அக்கட்டை இரண்டு நாள் கழித்து அவிழ்த்து விடலாம். புண்ணும் ஆறும். ஆனால் இவர்கள் கட்டும் மனக் கட்டிருக்கிறதே, அது புண்ணுக்குமே யொழிய ஆற்றாது ; அவிழவும் அவிழாது.

முனி: என்ன முதலியார்?

சொக்: கழனியிலே தண்ணீர் நிற்க வேண்டுமானால் வரப்பு இருக்கவேண்டும். இல்லாவிட்டால் நீரும் போம்! ...ரும் போகும்! பட்டினிதான்.

கண்: பெரிய வெள்ளம் வருகிறபோது இவர்கள் வரப்பெல்லாம் போய் மண்மேடிட வேண்டியதுதான்!

சொக்: போதும் போதும்! இந்தப் பிள்ளைகளே என் குடிக்குத் தீ வைப்பார்கள், முதலியார்! வேறு நெருப்பே வேண்டியதில்லை.

முனி: கண்ணப்பா! பெரியவர்களுக்குத் தெரியாதது உனக்குத் தெரிந்ததாய்ப் பேசாதே. உன் வேலையைப் பார். பள்ளிக்கூடம் போக நேரமாயிற்று.

கண்: பெற்றோர்கள் செய்வது பிள்ளைகளின் தலையிலேதானே விடியும்?

சொக்: ஓ!

கண்: ஒரு மாதமாகக் குமஸ்தாவுக்கும் சம்பளம் கொடுக்கவில்லை; படியாட்களுக்கும் படி கொடுக்கவில்லை. இப்படி யிருந்தும், என் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு ஆயிரம் ரூபாய் செலவு செய்யத் திட்டம்......பசுவைக் கொன்று செருப்பைத் தானம் கொடுப்பது போல அவர்களை வாட்டி, விருந்தும் தானமும் செய்வதா நல்லது?

சொக்: (சினத்துடன்) சரிதான்! நீ போடா! பிஞ்சிலேயே பழுக்க வேண்டாம்.

கண்: போகாமல் எனக்கிங்கே என்ன வேலை? உங்களுக்குக் குடும்பம் வளர்ச்சியடைய வேண்டும் என்ற எண்ணமில்லை. பணம் பணம் என்றும், மதிப்பு மதிப்பு என்றும் அலைகிறீர்கள். மதிப்பு முதலை, உங்களைப் பாவ மடுவிலே இழுத்துச் செல்வதைச் சிறிதும் சிந்திக்கவில்லை.

**சொக்:** சரிதான் போடா! உங்கள் பள்ளிக்கூடத்திலே படித்த பாடத்தை யெல்லாம் பரீக்ஷையிலே எழுதினால் தேர்ச்சியடையலாம். என்னிடத்திலே ஏன் ஒப்பவிக்கிறாய்?

**கண்:** (கண் கலங்க) அப்பா! ஏதாவது குறையிருந்தால் சொல்லுங்கள். என் நன்மையை நாடித்தான் இந்தப் பழிவேலையைச் செய்கிறீர்களென்று அறிவேன். உங்கள் பார்வை, வானத்திலே யிருக்கும் தாரகைகளையும் முழு நிலவையும் பார்த்துப் பார்த்து அழகிய உலகமென்று மகிழ்கிறது. நம் மாளிகையின் பக்கத்திலே, சாக்கடையிலிருக்கும் புழுவைப்போல நெளிந்து நெளிந்து சேற்றிலே உழைத்து வெயிலையும் மழையையும் தோழமை கொண்டு வாடும் நம் படியாட்களைப் பற்றிச் சிந்திப்பதில்லை. உங்களுக்குப் பின்னாலே வாயைத் திறந்து கொண்டு வரும் இந்தப் பூதத்தைப் பாராவிட்டால்......

**சொக்:** (வெறுப்புடன்) பார்த்தீர்களா? நல்ல அழகான சொற்பொழிவு செய்கிறானே! இவனுக்கு என்ன பரிசு கொடுப்பது? (முனிசாமி முதலியார் தரையைப் பார்த்த வண்ணமே இருக்கிறார்) ஏட்டுச் சுரைக்காயா கறிக்குதவும்? கண்ணப்பா!

**கண்:** அப்படியானால் ஒருவன் படிப்பது எதற்கு? 'அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்' என்பது பொய்யா? திருவள்ளுவர், 'ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்—பேதையிற் பேதையாரில்' என்று கூறியதை அடிக்கடி கூறுவீர்களே! இப்போது மட்டும் கடமையெல்லாம் ஏட்டுச் சுரைக்காயாய்ப் போய் விட்டதா? ஏழையழுத கண்ணீர் கூரிய வாளன்றோ?

**சோக்:** இப்போது என்னடா செய்யச் சொல்கிறாய்?

**கண்:** 'அல்லற் பட்டாற்று தழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை?' என்ற வள்ளுவர் வாய்மொழியைக் கேட்டதில்லையா? ஆகையால், அவர்களை வருத்திவிட்டு என் ஆயுள் வளர விருந்தினரை உண்பித்து, அந்தணர்களைக் கொண்டு எரியோம்பினால் என்ன பயன்? அந்த ஆயுள் ஓமத்திலே என் பாவங்கள் எரிந்து போகுமென்று நினைக்கிறீர்களா? என் ஆயுளை வளர்ப்பது எது என்றால் நமக்காக உழைக்கும் வேலையாட்களின் இன்பக் கண்ணீரொன்றே ஆகும். ஆகையால் அவர்களுக்கு உணவும் உடையும் கொடுங்கள்.

**சோக்:** போதுமடா உன் புத்தி! உன்னைப் பெற்று வளர்த்த பலன் கைமேற் கிடைத்து விட்டது! படிப்பும் இல்லை. ஊர் சுற்றுவதிலேயும் குறைவு இல்லை! இப்போது இந்த முட்டாள்தனமான எண்ணமெல்லாம் வேறே வந்திருக்கிறது! இனி உருப்பட்டாற் போலத்தான். என் மூச்சு இருக்கும் வரையில் என் விருப்பப்படிதான் செய்ய வேண்டும். அப்புறம் நீ எப்படியாவது அழித்து விட்டுப் பிச்சையெடுக்கப் போ.

**கண்:** எனக்காகச் செய்யும் ஒரு நன்மையிலே கூட என் விருப்பப்படி நடக்கமாட்டீர்களா?

**சோக்:** நீ என்னைக் குறைவுபடுத்தவா பார்க்கிறாய்? ஒரு திட்டம் போட்டு அதன்படி எல்லார்க்கும் அழைப்பு அனுப்பிவிட்ட பிறகு, நிறுத்த முடியுமா அவைகளை? மேலும் உலக வழக்கத்திற்கு மாறாக நடப்பதென்பது முடிகிறதா?

**கண்:** (துக்கத்துடன்) வேண்டாமப்பா, வேண்டாம். உங்கள் விருப்பப்படியே செய்து கொள்ளுங்கள். ஆனால், என்னை மட்டும் அன்று பார்க்க முடியாது!

**சொக்:** (திகைத்து) அன்றைக்கு இங்கே இருக்க மாட்டாயா? எங்கே போகிறாய்?

**கண்:** இவ்வளவு பெரிய உலகிலே இடமா இல்லை?

**சொக்:** இது வேறேயா? (சினத்துடன்) இம் மாதிரியெல்லாம் பயமுறுத்த முடியாதடா! போவதானால் இப்போதே போ! (இரணியனுக்குப் பிரகலாதனாக வந்து விட்டாய்! முளைத்து மூன்றிலைகூட ஆகவில்லை! அதற்குள் உலகத்தைத் தலைகீழாகப் புரட்டிவிடலா மென்ற எண்ணமா?)

**முனி:** (பெருமூச்சுவிட்டு) கண்ணப்பா! ஏன் இன்றைக்கு இப்படி நடந்து கொள்கிறாய்? அப்பாவின் சொற்படி நடப்பது உன் கடமை. 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.'

**கண்:** (அவர் சொல்வதை நோக்காதவனாக) அப்பா! தங்கள் கருத்துப்படி இப்போதே வெளியேறுகிறேன். என்னைப் பெற்று இதுவரை வளர்த்துவிட்ட நன்றியை மறவேன். அதற்காகவே, இனியும் என் பொருட்டு நீங்கள் பாவச் செயலிலே இறங்காதபடி வெளியேறு கிறேன். (செல்கிறான்)

**முனி:** என்ன முதலியார்! பேசாமலிருக்கிறீர்களே!

**சொக்:** (பல்லைக்கடித்துக் கண்கலங்க) போகட்டும்! கழுதை கெட்டால் குட்டிச்சுவர்தானே? வராமல் எங்கே போவான்? என்னை இகழ்ந்து செல்கிறவனை நான் அழைப்பதா?

## காட்சி - 19

**இடம் :** உயர்நிலைப் பள்ளியில் ஓரறை.

**காலம் :** நான்காம் நாள் பகல் $1\frac{1}{2}$ மணி

[எல்லப்பனும் முனிசாமி முதலியாரும் நாற்காலியில் அமர்ந்திருக்கிறார்கள்.]

**எல் :** அந்தப் பையன் இன்று பள்ளிக்கூடத்திற்கு ஏன் வரவில்லை?

**முனி :** ஆமாம்! வந்து படித்துக் கிழித்தான்?

**எல் :** என்ன அப்படிக் கூறுகிறீர்கள்?

**முனி :** போகிறான், தறிதலைப் பையன்! தலைக்கு மேலே செருக்கு!

**எல் :** (வியப்புடன்) என்ன தவறு செய்தான்?

**முனி :** அவன் பிறந்த நாள் விழாவிற்கு முதலியார் போட்டிருந்த திட்டங்களெல்லாம்.........அடடா! நான் .........

**எல் :** என்ன தடுமாறுகிறீர்கள்?

**முனி :** (நகைத்து) உங்கள் மாணவன் உங்களைப் போலவே யிருக்கிறான்.

**எல் :** (மகிழ்வுடன்) தறிதலையாகத்தானே? அப்படித்தான் இருக்கவேண்டும். படிப்பில் ஒருவிதமாக இருந்தாலும் இந்த வழியிலே நன்றாக இருக்கிறான்போலிருக்கிறதே! அப்புறம்?

**முனி** : அப்புறமென்ன? அவன் விருப்பப்படி அவர் நடக்க முடியாதென்றார். கோபித்துக் கொண்டு வீட்டை விட்டுப் போய்விட்டான்.

எல் : (திகைத்து) எங்கே போயிருப்பான்?

முனி : அது எங்கேயோ?

எல் : தேடவுமில்லையா?

முனி : இன்னும் அவ்வளவு கவலை உண்டாகவில்லை அவருக்கு; வந்து விடுவான் என்கிறார்.

எல் : ஏழைகளுக்கிரங்கும் உள்ளமிருக்கிறது அவர் பிள்ளைகளுக்கு. அந்தப் பெண் பூங்காவனத்திற்கு இப்போது ஆதரவு கிடைத்ததென்று கேள்விப்பட்டேன்.

முனி : ஆமாம். மங்கையின் தலையில் அடிபட்டது பூங்காவனத்திற்கு நல்லதாயிற்று.

எல் : மங்கையின் எண்ணம் ஈடேறிற்று என்று சொல்லுங்கள்.

முனி : சரிதான்! மங்கையாலேயே பூங்காவனத்தின் வாழ்வே ஈடேறுமா? நல்ல மாப்பிள்ளையாகக் கிடைத்தாலன்றோ அவள் சுகப்படுவாள்? நல்ல குணமிருக்கிறது! பணமில்லையே!

எல் : நான் ஒன்று கேட்கிறேன். செய்வீர்களா?

முனி : என்ன?

எல் : அந்தப் பெண்ணை நானே மணந்து கொள்கிறேன்.

முனி : (நகைத்து) ஏன் பரிகாசம் செய்கிறீர்கள்?

எல் : உண்மையாகவே அவளைப் பார்த்ததிலிருந்து அந்த எண்ணம் உண்டாயிற்று. அவள் இறந்த என் மனைவியைப் போலவே யிருக்கிறாள். ஏழையாகவும் நற்குணவதியாகவுமிருக்கிறாள்.

முனி: (வியப்புடன்) ஏழைக்கு உதவ வேண்டுமென்ற எண்ணமா? புலி பசித்தால் புல்லைத் தின்பது போலிருக்கிறதே உங்கள் எண்ணம்!

எல்: நான் புலியுமல்ல; அவள் புல்லுமல்ல! இயற்கையாக இறைவன் கொடுத்த அழகும் பண்பும் அமைந்த செல்வி அவள்.

முனி; அவளும் முதலியார் இனந்தான்.

எல்: (நகைத்து) 'எல்லோரும் ஓர்குலம்' என்பதை மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

முனி: இல்லையே! நான் குறையொன்றுஞ் சொல்லவில்லையே!

எல்: போகட்டும், நீங்கள் தயவுசெய்து அவர்களைக் கேட்டுப்பாருங்கள். விரும்பினால் செய்து கொள்கிறேன்.

முனி: அந்தப் பெண்ணுக்கு யோகமென்று சொல்லுங்கள். என் பணி அவர்களைச் சம்மதிக்கச் செய்வது தானே?

எல்: ஆம். அவ்வாறு செய்தால் நன்றியுடையவனாக இருப்பேன்.

முனி: ஒரு வேளை மணவிருந்து கிடைப்பதை விடுவேனோ? சென்றுவரலாமா?

எல்: எனக்கும் மணியாகிவிட்டது. சென்று வாருங்கள்.

# காட்சி - 20

**இடம்:** சொக்கலிங்க முதலியார் வீடு.

**காலம்:** நான்காம் நாள் பகல் 2 மணி.

[ஒரு படுக்கையறையிலே கட்டிலில் மங்கைநல்லாள் படுத்திருக்கிறாள். பூங்காவனம் பக்கத்தில் விசிறிக் கொண்டு நிற்கிறாள். தாமரைக்கண்ணி வருகிறாள்]

**தாமரை:** (பூங்காவனத்தைப் பார்த்து) ஏன் நிற்கிறாய்? அப்படியே கட்டில்மேலே உட்கார்ந்து கொண்டு விசிறு. (கட்டிலில் வந்து உட்கார்ந்து மங்கையை மெதுவாகத் தொட்டு) மங்கை! மங்கை!!

**மங்கை:** (மெதுவாகக் கண்விழித்து) அம்மா! ஐயோ! தலை விண் விண்ணென்று வலிக்கிறதே! ஓரே மயக்கமாக இருக்கிறதே!

**தாமரை:** (கண்ணீர் விட்டு) பாவி நான்! பெற்ற தாயாயிருந்தும் மாட்டைப் போல நடந்து கொண்டேனே! கொஞ்சம் கஞ்சி குடிக்கிறாயாடி கண்ணே! (அழுகிறாள்)

**மங்கை:** (அன்புடன்) ஏனம்மா அழ வேண்டும்? அப்பா மாத்திரம் பிடிவாதம் பிடிக்கலாமா? படியாளுக்கெல்லாம் துணி கொடுக்கச் சொன்னால் முடியாது என்கிறாரே!

**தாமரை:** ஐயோ! இதற்கென்னடி நான் செய்வேன்? இவளுக்கு வேண்டியதைத்தான் நான் செய்தேன்.

**பூங்கா:** (கலக்கத்துடன்) பிடிவாதம் வேண்டாம்மா! பெத்தவங்க மனம் நோவக் கூடாது. அவுங்களை ஒண்ணுக் தொந்தரவு பண்ணாதே அம்மா!

**மங்கை:** (மெதுவாக) பூங்காவனம்! உன் வேலையைப் பார் நீ! அப்பாவின் மனம் இரங்கினாலன்றி நான் சாப்பிட மாட்டேன். கடலைக் கடக்க விரும்பியவள் அலைக்குப் பயந்தால் முடியுமா?

**தாமரை:** (தலையில் கையை வைத்துக் கொண்டு) மங்கை! எங்கேயாவது கிணறு குட்டைதானம்மா பார்க்க வேண்டும். என்ன பாவம் பண்ணினேனோ, இந்தக் கதிக்குக் கொண்டு வந்தது தெய்வம். (சொக்கலிங்க முதலியார் வருகிறார்.)

**சொக்:** (நின்று) என்ன உபதேசம் பலிக்கவில்லையா? உன் பெண்ணும் பிள்ளையும் நம் குடியை ஒழித்துவிட்டுத் தான் மறுவேலை பார்க்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டார்கள்! அந்த முதலியார் பகலில் வந்து சாப்பிட்டாரா?

**தாமரை:** (கண்ணீரைத் துடைத்துக் கொண்டு) இன்னும் வரவில்லை. பள்ளிக்கூடம் விட்டு விட்டார்களா?

**சொக்:** இப்பொழுது மணி இரண்டு. பள்ளிக்கூடம் திரும்பவும் தொடங்கிவிட்டிருப்பார்கள். உம். அப்படி யானால் இன்னும் வரவில்லையோ?

**தாமரை:** இன்னும் வரவில்லை. திருப்பித் திருப்பிக் கேட்கிறீர்களே! நீங்கள் ஏதாவது திட்டினீர்களோ?

**சொக்:** (வெறுப்புடன்) திட்டினேனா? பின் அவனை வாழ்த்தவா சொல்கிறாய்? குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்பு! இரணியனுக்குப் பிரகலாதன் மாதிரி!

**தாமரை:** (கலக்கத்துடன்) என்ன சொல்கிறீர்கள்? எதிரில் நின்று கூடப் பேசமாட்டானே!

**சோக் :** (பெருமூச்சு விட்டு) அப்படித்தான் இருந்தான். எல்லாம் போச்சு !

**தாமரை :** என்னவென்று தெளிவாகச் சொல்லுங்களேன் !

**சோக் :** சொல்வதென்ன? உன் பெண் மாதிரிதான் ! படியாளுக்கெல்லாம் விருந்தும் வேட்டியுமாம். வேறே விருந்தோ பூசையோ ஒன்றும் வேண்டாமாம். முடியாதென்றேன். கோபித்துக் கொண்டு போனான்.

**தாமரை :** (பெருமூச்சு விட்டு) ஐயோ ! எங்கே போய் விட்டானோ? என்னமோ தெரியலையே?

**சோக் :** (கண்ணீர் ததும்ப) கலங்காதே; வருவான். பார்ப்போம். கடவுள் இருக்கிறார்.

**தாமரை :** சரி நீங்கள் சாப்பிட வாருங்கள்.

**சோக் :** என் வயிற்றுக்குத்தான் நல்ல உணவு கொடுத்தார்களே ! (செல்கிறார்)

**தாமரை :** (கண்ணீர் வடிய) ஐயோ கடவுளே ! என் குடும்பத்துக்கு என்ன வரப் போகிறதோ? (கைகூப்பி) மாரியம்மா ! நீதான் என் பிள்ளையைக் கொண்டுவந்து சேர்க்கவேண்டும்.

---

# காட்சி - 21

**இடம்:** சொக்க நகருக்குப் பத்து மைல் தொலைவில் பெருவழியில் (ரோட்டில்) ஒரு மர நிழல்.

**காலம்:** நான்காம் நாள் பகல் 3 மணி.

[கண்ணப்பன் சோர்வுடன் அமர்ந்திருக்கிறான்.]

**கண்:** (தனக்குள்) கண்ணப்பா! என்னடா இது! (காலை அமுக்கிப் பிடித்துக் கொண்டு) கால் வலிக்க இவ்வளவு தொலைவு ஓடி வந்தாய்! புலி வாயிலிருந்து தப்பிய மான் போல்—பாம்பின் வாயிலிருந்து தப்பிய தவளையைப்போல்—ஓடி வந்தாயே! ஏன்?......அப்பா அம்மாவின் அன்பிலே ஊறிய நீ அந்த அன்பை இப்படி வெறுக்கலாமா? அவர்கள் உன்னைப் பெற்று வளர்த்துப் பெரியவனாக— அறிவுடையவனாக—ஆக்கியது அன்பில்லாமையா?......அன்பில்லாமலில்லை. ஆனால், இந்த அன்பு அறியாமையாலே உண்டான செருக்குக்குப் பலியிடும் அன்பு! இந்த அன்பைக் கண்டு மயங்காதே!......என்ன இருந்தாலும் இப்படி அவர்களைக் கலங்கவிட்டு ஓடி வரலாமா? 'பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு' என்பது உண்மைதானே? அவர்கள் எப்படிக் கலங்குகிறார்களோ? அன்பின் மிக்க தங்கை வருந்த மாட்டாளா? (கண்ணீர் விடுகிறான். துணியாலே துடைக்கிறான்)............உள்ளமே! கலங்காதே! ஏழைகளை உயர்நிலைக்குக் கொண்டுவர விரும்பினாய்! உன் நண்பன் உபதேசத்திலே தெளிந்தாய்! உன் தங்கையின் —ஒரு பெண்ணின்—உறுதியினாலே நீயும் உறுதி கொண்டாய். நீ மட்டுமன்று, உன் பெற்றோர்களையும் கொடும் பாவச்

சுழலிலிருந்து வெளியேற்ற முயற்சிக்கிறாய்! இதை இந்தப் பொல்லாத, அறிவற்ற கண்ணீரால் கழுவி விடாதே! கண்ணின் இயற்கை அது! உன் உறுதியை விட்டால் உலகிலே நீ பிறந்த பயனைப் பெறமாட்டாய்.

[ஒரு ஜட்கா வண்டி சொக்க நகரிலிருந்து செல்கிறது. அதில் தேவதாசும் மேரியும் அமர்ந்திருக்கிறார்கள். இவன் அவர்களைப் பார்க்கிறான். அவர்கள் இவனைப் பார்க்கவில்லை.]

நல்ல காலமாக அவர்கள் பார்க்கவில்லை. இவர்கள் எங்கே செல்கிறார்கள்? இன்று பள்ளிக்கூடமில்லையா? தேவதாசும் லீவெடுத்திருக்கிறானோ? ஐயோ பாவம்! நம் தந்தையின் இயந்திரங்களில் இதுவும் ஒன்று. ஓய்வு ஒழிவின்றி உழைக்க வேண்டும். இயந்திரத்திற்கும் எண்ணெய்ச் செலவு உண்டு. இதற்கு அதுவும் கிடைப்பதில்லை......மேரியை நான் காதலிக்கிறேன். (நகைக்கிறான்) பள்ளிக்கூடக் காதல்! சிறு பிள்ளைத்தனமான காதல்! வீண் காதல்! எட்டாப் பழமான காதல்! சமூகம் இந்தக் காதலைக் கண்டால் கனலை வீசும்! வெடிகுண்டைத் தூக்கி யெறியும்!......இப்போதுதான் சாதியைக் குழி தோண்டிப் புதைக்கிறார்களே! ஆனால் நம் வீட்டிலோ நீர் பாய்ச்சி வளர்க்கிறார்கள்! எங்களைப் போன்றவர்களை எடுத்து வீசுகிறார்கள்!

[ஜட்கா வண்டி திரும்பி வருகிறது. இவன் அதைக் கவனிக்கவில்லை. வண்டி நிற்கிறது. தேவதாஸ் இறங்கி அருகில் வந்து நிற்கிறான்]

**தேவ:** கண்ணப்பா!

**கண்:** (திரும்பித் திடுக்கிட்டு) ஏது இங்கே?

தேவ: (புன்முறுவலுடன்) நான் உன்னைப் போலக் கோபித்துக்கொண்டு வரவில்லை. வீர நகரில் மேரியின் தோழி யொருத்தியின் உடல்நலக் குறைவைப் பார்க்கப் போகிறோம். உன்னைக் கடந்து சிறிது தொலைவு போகும் வரையில் உன்னைப் பார்க்கவில்லை. மேரிதான் திரும்பிப் பார்த்து அடையாளங் கண்டுபிடித்தாள். வா, வந்து வண்டியில் ஏறிக்கொள். (மேரியும் இறங்கி வருகிறாள்)

கண்: நீ போ, தேவதாஸ்! சில மாதங்களாவது கால்நடையாகத் தமிழ்நாடு முழுமையும் சுற்றி வரப் போகிறேன்.

மேரி: (புன்முறுவலுடன்) 'எல்லோரும் ஓர் குலம்' என்று சொற்பொழிவு செய்யவா?

கண்: (நகைத்து) ஏன் பரிகாசம் செய்கிறாய், மேரி!

தேவ: இதுவா பரிகாசம்? உன்னைப்போன்ற வீரர்கள் கிளம்பினால் உடனே நாடு நலம்பெறும்.

மேரி: தவத்தாலே உடலும் இளைத்துவிட்டதே! உண்மையிலே தவம்புரிய விருப்பமா?

தேவ: வா, அப்பா! உன்னை இனிமேல் தனியே விட விருப்பமில்லை.

கண்: என் நோக்கம் நிறைவேறாமல் என் தந்தையைப் பார்க்கமாட்டேன். நீ போ.

தேவ: (புன்முறுவலுடன்) உன் தந்தையைப் பாராமலே இருக்க வழி செய்கிறேன்.

[கையைப் பிடித்து அழைத்துச் செல்கிறான். மூவரும் வண்டியிலேறுகிறார்கள். வண்டி செல்கிறது.]

## காட்சி - 22

**இடம்:** சொக்கலிங்க முதலியார் வீடு.

**காலம்:** ஐந்தாம் நாள் காலை 10-மணி.

[சொக்கலிங்க முதலியார் சோர்வுடன் உலவுகிருர். கதவின் மறைவிலே தாமரைக்கண்ணியும் மங்கையும், அமர்ந்திருக்கிறார்கள். முனிசாமி முதலியார் ஒரு நாற்காலில் உட்கார்ந்திருக் கிருர்.]

**தாம:** (விம்மியவாறு) தலைக்குயர்ந்த பிள்ளையை மிரட்டி அனுப்பிவிட்டீர்களே! இனிமேல் சுகமாக இருங் களேன்.

**சொக்:** கழுதை கெட்டாற் குட்டிச் சுவர்! எங்கே போய்விடுவான்? கையிலே உள்ள துட்டுத் தொலைந்தால் தானே வருகிறான். காற்றில்லாவிட்டால் காற்றாடி தானே இறங்கி விடுகிறது. நிழலருமை வெயிலிற் போனால் தெரிகிறது.

**தாம:** கொழுந்து வெயிலிலே வாடினால், மரம் நன்றாய்த் தானே குளு குளுவென்று இருக்கும்?

**சொக்:** அப்படியானால் அவன் விருப்பப்படி விட்டு விடலாமென்கிறாயா? அவன் செய்யும் பிழை திருந்துவ தெப்படி?

**தாம:** வெளியே துரத்துவதுதான் திருத்துவதோ?

**சொக்:** (தலையிலடித்துக் கொண்டு) ஐயையோ! நானா துரத்தினேன்? இவர்கூட நேற்று இருந்தாரே, கேட்டுப் பாரேன்.

**தாம:** (கண்ணீர் வடிய) அவன் போயே போய் விட்டான்! நீங்களே எல்லாங் கொண்டாடுங்களேன்! இந்த வீட்டுக்கு ஒரே விளக்கு—கண்ணிலே பாப்பாவைப் போலக் காப்பாற்றினேன். 'குயவனுக்குப் பல நாளைய வேலை! தடியடிக்காரனுக்கு ஒரு நாளைய வேலை! (விம்மிக் கொண்டே) எங்கே போய்ச் சோற்றுக்குக் கையேந்து கிறானே? கோபித்துக்கொண்டு குளத்திலே குட்டையிலே விழுந்து விட்டானோ?

**முனி:** (அன்புடன்) அப்படியெல்லாங் கடவுள் கைவிடமாட்டார். வருத்தப்படாதீர்கள். (முதலியாரைப் பார்த்து) முதலியார்! உலகமே இப்போது அப்படித்தான் இருக்கிறது. அந்த ஆசிரியர்கூட அப்படித் தானே இருக்கிறார்?

**சொக்:** ஆமாம்!

**முனி:** இந்தக் காலத்திலே உழைப்புக்கு மதிப்புக் கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். நாமும் ஊருடன் ஒன்றாய் ஓட வேண்டியதுதான் நல்லது.

**சொக்:** (சினத்துடன்) அதுதான் நடவாது. இந்த உலகமே தலைகீழாகப் புரண்டாலும், நான் போட்ட திட்டப்படியேதான் நடப்பேன். இல்லாவிட்டால் மானக் கேடு! மேலும், அழைப்பிதழெல்லாம் அனுப்பிய பிறகு அந்தத் திட்டத்திற்கு மாறாக நடப்பதா? விரலால் நசுக்க வேண்டிய மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைப் பிரித்துக்கொண்டோடுவதா?

**மங்கை:** (அமைதியாக) இந்தப் பிறந்த நாள் விழா யாருக்காக? அப்பா!

**சொக்:** சீ! போதும் வாயை மூடு. நீங்களிருவரும் இரண்டு புல்லுருவிகளாகவே முளைத்தீர்கள்.

**மங்கை :** (பெருமூச்சுடன்) நாங்களா அப்பா, புல்லுருவிகள்? நீங்கள் இதுவரை செய்த பிழைகளுக்கெல்லாம் கழுவாயாக நாங்கள் செய்ய விரும்புகிறோம். நீங்களோ சிறிதும் தளராமற் பாவம் நிறைந்த உங்கள் வழியையே பின்பற்றுகிறீர்கள். தினமும் பத்திரிகை படிக்கிறீர்களே! உலகம் எப்படி யிருக்கிறதென்று தெரியவில்லையா?

**சொக் :** (உறுதியுடன்) உலகம் இருக்கிறது! குனிந்து எடுத்தாலன்றோ பொருளின் அருமை தெரியும்? தறிதலைப் பையன்கள் ஏழைத் தொழிலாளிகளைக் கிளப்பிவிட்டுச் சாப்பாட்டுக்குத் திண்டாட விடுவதைத் தவிர வேறு என்ன பயன்?

---

## காட்சி - 23

**இடம் :** உயர்நிலைப் பள்ளியில் விளையாடும் வெளி.

**காலம் :** ஐந்தாம் நாள் இரவு 8 மணி.

[எல்லப்பனும் கன்னியப்பனும் உரையாடல்.]

**எல் :** அவன் இப்போது திரும்பியிருக்கும் வழி இனிய வழி. உழைத்துழைத்துத் தேய்ந்து கிடக்கும் மக்களைக் கைதூக்கி விடாவிட்டால் இன்னும் நம் நாடு ஓரேயடியாக வீழ்ச்சியடையும்.

**கன்னி :** நான் அவனிடம் உறுதிமொழியும் வாங்கியிருக்கிறேன், சார்!

**எல்:** அவன்தான் இப்போது அப்பணியிலே ஒப்பி யிறங்கி விட்டானே! உண்மையில் அவனைப் போன்ற செல்வர்கள் இறங்கினால்தான் நன்மை கிடைக்கும்.

**கன்னி:** அவர்களெல்லாம் மனம் ஒப்பிவிட்டால் அப்பணிக்கு முயற்சியே வேண்டுவதில்லையே! (தேவதாஸ் வருகிறான்.)

**எல்:** (மகிழ்வுடன்) ஓ! தேவதாஸா? வாருங்கள்.

**தேவ:** (பரபரப்புடன்) கண்ணப்பன் முதுகிலே கத்திக்குத்து! (மற்ற இருவரும் திடுக்கிடுகிறார்கள்.)

**எல்:** மிகவுங் காயமோ? ஏன்?

**தேவ:** உயிருக்குக் கெடுதியில்லை! கொஞ்சம் மிகவுங் காயந்தான்.

**கன்னி:** ஐயோ! (கண்ணீர்வடிய) யார் குத்திவிட் டார்கள்? கோபித்துக்கொண்டு போயிருந்தானே!

**தேவ:** ஆமாம். நேற்று மூன்று மணிக்கு நான் வீரநகருக்குப் போகும்போது இந்நகருக்குப் பத்து மைல் தொலைவிலே பார்த்தேன். என்னோடு அழைத்துச் சென்றேன். இன்று பகல் ஒரு மணிக்கு வந்தோம். என் வீட்டிலேயே இருந்தான். இரவு முன்னேரத்தில் ஒரு சந்து வழியே போகும்போது, யாரோ ஓடிவந்து கையிலிருந்த கடியாரத்தைப் பிடுங்கிக் கொண்டு குத்தி விட்டான்.

**எல்:** இப்போது போய்ப் பார்க்கலாமா?

**தேவ:** வாருங்கள் போகலாம். உங்களைக் கூப்பிட் டுப் போகத்தான் வந்தேன். இருவரும் வரவேண்டும்.

கன்னி: முதலியாருக்குத் தெரியுமோ?

தேவ: எல்லாருக்குந் தெரியும். அவரும் அங்கே தான் மயக்கத்துடன் தலையிலே கையை வைத்துக் கொண்டு அருகில் அமர்ந்திருக்கிறார். பாவம்! அந்த அம்மாள் மூர்ச்சையாய்ப் போய்விட்டார்கள். அந்தப் பெண்ணும் பட்டினி கிடந்தது. இதுவும் சேரவே,.........

கன்னி: தலையில் அடி வேறே, பாவம்!

தேவ: ஆமாம். எல்லாம் சேரவே, நினைவு தப்பிப் போய்க் கிடக்கிறது. அதிலும் அந்தக் குடும்பத்தின் நிலை பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. களிப்பின் அலையிலே சென்ற கப்பல் நீர்ச் சுழலிலே அகப்பட்டது போலிருக்கிறது!

எல்: (எழுந்து) வாருங்கள் போவோம். முனிசாமி முதலியார் எங்கே? (கன்னியப்பனும் எழுகிறான்.)

தேவ: அவரும் அங்கேதான் இருக்கிறார். அவர் இல்லாவிட்டால் அங்கே என்ன இருக்கிறது? (செல்கிறார்கள்.)

---

## காட்சி - 24

**இடம் :** சொக்கலிங்க முதலியார் வீட்டில் ஒரு பெரிய கூடம்.

**காலம் :** ஐந்தாம் நாள் இரவு 9 மணி.

[கண்ணப்பன் ஒரு கட்டிலில் முதுகில் கட்டுடன் படுத்திருக்கிறான். மற்றொரு கட்டிலில் மங்கை நல்லாள் படுத்திருக்கிறாள். கன்னியப்பன் கண்ணப்பனுக்கும், மேரி மங்கைக்கும் விசிறுகிறார்கள். தாமரைக்கண்ணி ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறாள். ஒரு டாக்டர், சொக்கலிங்க முதலியார், முனிசாமி முதலியார், எல்லப்பன், தேவதாஸ் ஆகியோர் ஒவ்வோராசனங்களிலே அமர்ந்திருக்கிறார்கள். பூங்காவனம் குறுக்கும் நெடுக்குமாக ஏதோ வேலை செய்து கொண்டிருக்கிறாள்.]

**டாக்டர் :** (அன்புடன்) முதலியார்! கவலைப்பட வேண்டாம். இன்னும் நான்கு நாட்களிலே கண்ணப்பன் தெளிந்து விடுவான். அவனுக்கு எக்கெடுதியும் நேராது.

**சொக் :** (சோர்வுடன்) பிழைத்துவிடுவா னென்கிறீர்களா? எத்தனை நாளாகும்?

**டாக்டர் :** (அன்புடன்) இன்னும் நான்கு நாட்கள்.

**முனி :** (இரக்கத்துடன்) என்ன இது? பித்துப் பிடித்தவர் போலிருக்கிறீர்களே! கவலையை விடுங்கள்.

**சொக் :** உம். பித்து! பித்தாவது! என் மகனைக் குத்தி விட்டார்கள். இனி என்ன மதிப்பு இருக்கிறது? வெளியே தலை காட்டுவதெப்படி?

எல்: (கவலையுடன்) சென்றதை நினைந்து வருந்துவதிற் பயனென்ன? இம்மாதிரி எவ்வளவோ ஒவ்வொரு நாளும் நடக்கின்றன! உலகம் போகிற போக்கில் நாமும் சென்றால்......

சொக்: இனி அப்படித்தான்! என் குழந்தைகளின் விருப்பமே என் விருப்பம்! என் உயிரை வேண்டுமானாலும் கொடுக்கிறேன். என் மக்கள் தெளிவாக எழுந்தால் போதும்!

தாமரை: (கை கூப்பி) எல்லாத் தெய்வங்களும் இந்த இரண்டு கண்களையும் கெடுக்காமற் கொடுக்க வேண்டும். எங்கள் வீடு, நிலம், செல்வம் எல்லாம் எங்கள் மக்களுக்குத்தானே! அவர்கள் எப்படிச் செய்தாலும்......(தாடையில் போட்டுக் கொண்டு) போதும்! போதும்! புத்தி!

டாக்டர்: கவலை வேண்டாம் அம்மா! நான் இதோ சாப்பிட்டுவிட்டு வந்து விடுகிறேன். பிறகு, இங்கேயே இருக்கிறேன். என் கையாலேயே வேளை தவறாமல் மருந்து கொடுக்கிறேன்.

சொக்: ஐயோ! நீங்கள் போகவேண்டாம். சாப்பாடு இங்கே கொண்டு வரச் சொல்கிறேன். தேவதாஸ்! நீ போய்ப் பத்துப் பேருக்குச் சாப்பாடு கொண்டு வரச்சொல். எல்லோரும் இங்கேயே சாப்பிடுங்கள். ஒருவரும் வீட்டுக்குப் போகவேண்டாம்.

டாக்: (அன்புடன்) அப்படியே இருக்கிறேன்.

முனி: (எல்லப்பனைப் பார்த்தவாறே) நாங்கள் இங்கே இருப்பதில் தடையில்லை. ஆனால், சாப்பிட்டு விட்டு வருகிறோமே!

எல்: ஆம், அதுதான் ஏற்றது.

சொக்: (துக்கத்துடன்) வேண்டாம். ஒருவரும் போக வேண்டாம்.

[டாக்டர் எல்லோரையும் பார்த்து ஒத்துக் கொள்ளும்படி குறிப்பிடுகிறார்.]

எல்: சரி, சரி. உங்கள் விருப்பப்படியே நடக்கிறோம்.

சொக்: தேவதாஸ்! போ சீக்கிரம்.

தேவ: இதோ அரைமணிக்குள் வந்து விடுகிறேன் (செல்கிறான்.)

முனி: பாவம்! தேவதாஸ் இப்போது தன்னை மறந்து உழைக்கிறான். (கமலம் வருகிறாள்)

தாமரை: வாருங்கள் அம்மா! (துக்கத்துடன்) வந்து பாருங்கள் இந்த வேடிக்கையை! (கமலம், கண்ணப்பனையும் மங்கையையும் அருகிற் சென்று பார்க்கிறாள்.)

டாக்டர்: நோயாளிகள் அயர்ந்திருக்கிறார்கள். அவர்களோடு பேசாதீர்கள்.

சொக்: எல்லோரும் இங்கேயே யிருங்கள், அம்மா! இங்கேயே சாப்பிடுங்கள். குழந்தைகள் குணமாக வேண்டுமென்று கடவுளை வேண்டுங்கள்.

கமலம்: நான் சாப்பிட்டுவிட்டேன். இங்கேயே யிருக்கிறேன். துன்பம் வந்திருக்கும்போது ஆறுதல் கூறவாவது வேண்டாமா? உங்கள் உப்பைத் தின்றோமே காலமெல்லாம்!

சொக்: என்ன உப்போ? உங்கள் மகன் தன் வேலையைப்போலவே எல்லாவற்றையும் பொறுப்பாகச் செய்வான். அவன் வந்த பிறகு எனக்குக் கவலையே கிடையாது அம்மா! கடவுள் அவனுக்கு எல்லா நன்மையும் அளிப்பார்.

எல்: (அன்புடன்) இந்த மாதிரி உள்ளன்புடன் நடந்து கொள்வதுதான் சிறந்தது. பிறந்தால்தானு ஒரு குடும்பம்? அன்பே ஒரு குடும்பமாக ஆக்கும்.

---

## காட்சி - 25

இடம்: சொக்கலிங்க முதலியார் வீடு, அதே கூடம்.

காலம். ஒன்பதாம் நாள்.

[கண்ணப்பன் கட்டிலிலே சாய்ந்தவாறு அமர்ந்திருக்கிருன். மங்கைநல்லாள், மேரி, தாமரைக் கண்ணி, இலக்குமி, கமலம், பூங்காவனம் ஆகியோர் ஒரு பாயில் அமர்ந்திருக்கிருர்கள். சொக்கலிங்க முதலியார், முனிசாமி முதலியார், எல்லப்பன், கன்னியப்பன், தேவதாஸ் ஆகியோர் மற்ருெரு பாயில் அமர்ந்திருக்கின்றனர்.]

சொக்: கண்ணப்பா! இனி உன் விருப்பப்படியே நடக்கத் துணிந்து விட்டேன். ஆனுல், சிறு முளையாகிய நீ, இந்த அனலிலே வெதும்பி விடுவாயோ என்றுதான் அஞ்சுகிறேன்.

**கண்:** பள்ளிக்கூடத்திலே உயர்வு தாழ்வு என்கிற நஞ்சு இல்லை. உலகமும் ஏட்டுச் சுரைக்காயாக உயர்வு தாழ்வை வேண்டாம் என்கிறது. இந்தப் பள்ளி கிலேயிலேயிருந்து விலகினல் கொஞ்சங் கொஞ்சமாக அந்த நஞ்சு பரவிப் பண்பைப் பாழ்படுத்துகிறது. ஆகவே, இப்போதே அந்த நஞ்சைக் கக்குகிற கொடுநாகத்தை வெட்டி வீழ்த்த வேண்டும். சாதி என்னும் அந்த நாகத்தின் நஞ்சு ஒரு துளிபட்டால் எவ்வளவோ நற்பண்புகளெல்லாம் அழிந்து விடுகின்றன. இந்தத் தொண்டில் நான் மட்டுமன்று, எவ்வளவோ இளைஞர்கள் இப்போதே இறங்கிவிட்டார்கள்.

**சொக்:** (முனிசாமி முதலியாரைப் பார்த்து) உங்கள் கருத்தென்ன? இவன் வாழ்க்கையின் கரடுமுரடான நெறியிலே சிறிதும் பழகவில்லை. நாம் சமநெறியை ஒப்புக்கொண்டாலும் வாழ்க்கையிலே நடத்திக் காட்ட முடியாத இடையூறுகளை உணர்ந்திருக்கிறோம். நீங்கள் துணைபுரிவதானல் அந்நெறியிலே அவனை விடுகிறேன்.

**முனி:** என்னல் இயன்ற அளவு துணைபுரிகிறேன். என்னைவிட நண்பர் எல்லப்பன் அவனை நடத்திச் செல்வார்.

**சொக்:** அவர் கருத்தென்னவோ?

**எல்:** இப்பணி கிடைத்தால் ஏற்று நடத்துகிறேன். உலகமெங்கும் கொந்தளிக்கிற இந்தச் சமநெறி யலைகளை இனி எதிர்க்க முடியாது. இந்தச் சமநெறியை முழு மனத்துடன் ஏற்கும் இளைஞர்களை அவ்வழியே விட வேண்டுவதுதான் உங்கள் கடமை. அறுசுவை உண்டியை ஆர அமர உண்பதைத் தவிர, அதனை உழைத்துச் சேர்த்தறியோம் நாம். அந்த உண்டி, உழைப்பாளிகளின்

வியர்வை நீராலும் தன்னலமற்ற கொடையினாலுந்தான் கிடைக்கிறதென்பதை எண்ணுகிலோம். அந்த உண்டியிலே அவர்களுடைய இரத்தம் சொட்டியிருப்பதை உழைப்பு மணமறியாத நம் நாசி உணரவில்லை.

**சோக் :** (பெருமூச்சுவிட்டு) ஆம். உண்மையே.

**எல் :** நிலமும் நெல்லும் எருவும் இருந்தால் மட்டும் பயிரிட்டுவிட முடியுமா? மழை பெய்தவுடன் எருவையும் நெல்லையுங் கொண்டுபோய் நிலத்திற் போட்டுவிட்டால் விளைந்து, கையிலே—அன்று—வீட்டிலே வந்து உட்காருமோ? அவைகளை எடுத்துச் செல்லவும் பழக்கமில்லாத நாம் வேளாளரென்று பெயரெடுத்திருக்கிறோம். நம்மாலேயே உலகம் நடக்கிற தென்றெண்ணி இறுமாந்துவிட்டோம். உண்மையிலே அந்த வேளாண்மை உழைப்பாளிகளாலேதான் உருவாகிறதென்பதை எண்ண மறுக்கிறோம். அந்த நினைவு வரும்போதெல்லாம் நம்மையறியாமலே நடுங்குகிறோம். எந்த இன்பஞ் சொந்தமென எண்ணினோமோ—பிறருடைய காலால் நடந்து, கையால் வேலை செய்து, உடம்பினால் உழைத்து, இனிய உணவையுண்டு, அவர்கள் உழைப்பையுஞ் சேர்த்து ஏப்பமிட்டோமோ—அந்த இன்பம் போய்விடுமே யென்ற எண்ணத்தினால் அப்பக்கமும் திரும்பிப் பார்க்க மறுக்கிறோம்!

**சோக் :** (கண்ணீர் வர) உண்மை!

**எல் :** உழைப்பாளி தேனைத் திரட்டிக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு உப்புப்போட்ட நீரை வாங்கிப் பருகுகிறான். நவதானியங்களையும் வண்டி வண்டியாக உழைத்துச் சேர்த்து நம் வீட்டிலே போட்டுவிட்டுத் தன் குடிசைக்குப் படி நெல்லுடன் செல்கிறான். நறுமணப் பொருள்களை வாரிக் கொடுத்துவிட்டு வியர்வை நாற்றத்துடன் வெளி

யேறுகிறான். அவன் உழைப்பு மணம், உழைப்பினிமை யைத் தவிர ஒன்றையும் அறியான். குழாயைத் திருப்பி விட்டு நீரைப் பிடிப்பதுபோல அவனை உழைக்கவிட்டு நாம் பயனை அடைகிறோம். நம்முடைய கைகள் அவன் உழைப் பைப் பிசைந்து பிசைந்து வழுவழுப்பாகி உழைப்புக் கருவி யைப் பிடிக்க முடியாமல் வழுக்குகின்றன!

**எல்லோரும்:** உண்மை! உண்மை!!

**எல்:** நம்முடைய சரக்கு அறையிலே ஒருவன் கை வைத்தால் திருடனென்கிறோம்; பிடித்துச் சிறைப்படுத்து கிறோம், அரசாங்கச் செலவிலே! ஆனால், உழைப்பாளியின் சரக்கை அப்படியே நாம் கொள்ளையடிப்பதைச் சிந்திக் கிறோமா? இல்லை. மனிதன் வழக்கத்தில் கொண்டுவந்த தன்னலச் சட்டம் இதற்கு இடங் கொடுக்கிறது. ஆங்கி லேயன் நம்மைச் சுரண்டுவதைக் கண்டிக்கிறோம். ஆனால், உழைப்பாளியைச் சுரண்டுவதை விடவில்லை. விற் பனை வரியை வியாபாரியே கொடுக்க வேண்டியிருந்தும் பொருள் வாங்குவோனே அதைக் கொடுக்கும் இழிவு எப் படி எல்லோரு மறிந்திருந்தும் நடைமுறையில் மறுக்கப் படவில்லையோ, அப்படியே வேளாளரென்ற பட்டம் அவர்களடைய வேண்டியிருந்தும் நாமே அடைவதும் மறுக்கப்படாத புன்மையாகி விட்டது! உழைக்காதவன் உண்கிறான்; உழைப்பவன் பட்டினி கிடக்கிறான்.

**சோக்:** ஆம். மிகவும் உண்மையே. வேலை செய் வோர்க்கு வேண்டிய அளவு ஊதியமில்லை யென்பதை என் உள்ளம் நன்றாயறியும். எனினும், வழக்கத்தின் அடிச் சுவடு மிராசுதார்களை அதை மாற்ற மறுத்திருந்தது.

**எல்:** அந்த அடிச்சுவடும் தன்னலத்தின் போக்கிலே செல்வதாற்றான் விடமுடியவில்லை.

**முனி :** ஆமாம். அது இருக்கட்டும். இந்த மாறுதல் ஒருவரிடம் மட்டும் நடந்தாற் போதுமா?

**கண் :** ஒன்றுன்றுய்த்தானே நூறுகும்? நாம் ஒரு வழியிற் சென்றுல், மற்றவர்களும் பின்பற்றி வருவார்கள்.

**சொக் :** கண்ணப்பனுடைய பிறந்த நாள் நாளையதின மாயிற்றே! முன்னேற்பாடுகள் வேறு முறையிலே யிருக் கின்றனவே! எப்படி மாற்றுவது?

**எல் :** நாம் செய்யப் போகும் புதிய ஏற்பாட்டிற்குக் கலெக்டராயினும் மற்ற உத்தியோகஸ்தராயினும் தடை கூற மாட்டார்கள். ஆகையால், 'ஆடம்பரமின்றி, உழைப் பாளிகளுடனிருந்து, நல்லுணவையுண்டு, அவர்களோரடு யாவரும் ஒருமனமாகக் கண்ணப்பனை வாழ்த்தி இறைவனை வழிபடுவோம்' என்ற கருத்துடன் பிறந்த நாள் விழா வரவேற்பிதழ்களை இன்றே அனுப்புவோம்.

**சொக் :** அப்போது எல்லோரும் வருவார்களென் கிறீர்களா?

**எல் :** தன் குற்றத்தை உணராதவன் ஒப்புக் கொள்ளமாட்டான். அவனை நாம் விட்டு விட்டுத்தான் சமநெறியிலே நுழைய வேண்டும். அவன் தன் குற்றத்தை யுணரும் நாளும் விரைவிலே வரும். சாதிச் செருக்கும் நம்முடைய சமநெறி நீரிலே கழுவப்படல் வேண்டும்.

**சொக் :** தங்கள் விருப்பப்படியே நடத்தி விடுவோம். இதற்கேற்ற முயற்சிகளை இப்போதே தொடங்குவோம். தாங்களே நாளைய விழாவை முன்னின்று நடத்த வேண்டும்.

**எல்:** (மிக மகிழ்வுடன்) தங்கள் ஆணைக்குக் கட்டுப் படுகிறேன். உண்மையிலே தங்கள் உள்ளம் இவ்வகையிலே மாறுதலடைந்ததற்கு என் உள்ளம் கட்டுக்கடங்காமல் மகிழ்கிறது.

**கண்:** (களிப்புடன்) இன்றே நான் பிறந்த நாள்! என் தந்தையார் இப்போதே எனக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்தார். என் ஆசிரியரும் இப்போதுதான் என்னை நல்வழியிலே செலுத்தினார். எனக்கு இந் நெறியிலே காரணராயிருந்தவர்கள் என் நண்பன் கன்னியப்பன், என் தங்கை மங்கைநல்லாள் ஆகிய இருவருமே. ஆகவே, அவர்களுக்கு என் நன்றி.

**கன்னி:** 'சொல்வது எளிது. செய்வது அரிது' நான் வாய்ச்சொல் வீரன். நீயே செயல்முறைச் சேவகன். உன் தொண்டு வாழ்க! சமநெறி தழைக்க!

**மங்கை:** இப்போதுதான் என் நோன்பும் முடிவடைந்தது.

**கண்:** இவ்வளவுக்கும் காரணமாக இருந்தது இந்தக் கத்திக் குத்தேதான். அதனாலேதான் குத்தியவனை ஒன்றும் செய்ய வேண்டாமென்றேன். என் அப்பாவின் மனம் இந்தக் கத்திக் குத்தாலேதான் மாறியது.

**கன்னி:** முதுகிலே பட்டும் வெற்றிச் சின்னமானது வியப்பே!

**முனி:** இந்தச் சமநெறித் தொண்டிலே செல்லும் ஒவ்வொருவரும் தங்களைத் தூய்மை செய்து கொள்ள வேண்டும். கண்ணப்பன் பிறந்த நாள் விழா முதல் தூய்மை. இரண்டாவது தூய்மை எல்லப்பனரின் திருமணம். அவர் பூங்காவனத்தை மணந்து கொள்ள முடிவாகி யிருக்கிறது.

**சோக்:** (வியப்புடன்) அப்படியா!

**எல்:** இதில் வியப்படைவதற்கு என்ன இருக்கிறது? நற்பண்பும் அழகும் நிறைந்த பூங்காவனம் வறியவளாயிருந்தாள்; வறுமையை நினையாமல் அவளுடைய பண்புகளுக்கு மதிப்புக் கொடுப்பது அறிவாளிகளின் கடமை. ஆகவே, மணக்க விரும்பினேன். முனிசாமி முதலியார் அவர்களை ஒப்புக் கொள்ளும்படி செய்தார்.

**மங்கை:** (வியப்புடன் பூங்காவனத்தைத் தழுவிக் கொண்டு) வாத்தியாருக்கே வழி வைத்து விட்டாயே! (பூங்காவனம் நாணித் தலை குனிகிறாள்.)

**சோக்:** மிக நன்று. ஆனால், இதிலே சாதி வேற்றுமை யில்லை.

**முனி:** ஆம்.

**தாமரை:** சாதி வேற்றுமை இல்லை யென்றால் இன்னும் ஒரு திருமணம் நடக்கும்.

**சோக்:** எது அது?

**தாமரை:** கோபிக்க மாட்டீர்களே? நம் மங்கை தேவதாஸை விரும்புகிறாள். (மங்கையின் முகம் நாணமடைகிறது.)

**கண்:** ஏன் நாணம் அடைகிறாய், மங்கை? சாதி வேற்றுமைதானே நாணமடைய வேண்டும்!

**சோக்:** கால் வேறுபாடு! (பெருமூச்சு விடுகிறார்) அப்புறம்? கண்ணப்பன் மேரியைக் காதலிக்கிறானே?

**கமலம்:** ஆமாம். சிறுவர்களின் செய்கையாகவே யிருக்கிறது!

**எல்:** (வியப்புடன்) இல்லை! இதுதான் பெரியோர் செய்கை. தன்னலமற்ற உண்மைக் காதலர்கள் இவர்கள். நான் என்னைப்பற்றிப் பெருமையாக நினைத்திருந்தேன். இவர்கள் என்னை வென்றுவிட்டனர்.

**முனி:** ஆம். இவர்கள் மனம் மிகவும் தூயது; தூய அன்புடையது. ஆகவே, இவர்கள் மணம் மூன்றாவது தூய்மையாகும்.

**சொக்:** தேவதாஸும் மேரியும் ஒப்புக் கொள்கிறார்களா? (இருவரும் மகிழ்வுடன் நாணித் தலைகுனிகிறார்கள்) அப்படியானால் இவர்கள் மணத்தை—மூன்று காதலர்களின் மணத்தை—விரைவில் முடிப்போம்.

**கண்:** (நகைத்து) பொருத்தம் பார்க்க வேண்டாமோ?

**சொக்:** மனம் பொருந்தியதே போதும். கண்ணப்பன் முதுகுக் கட்டவிழ்ந்தவுடன் திருமணக் கட்டைத் தொடுப்போம். அந்த அந்தக் காதலர்களும் ஒன்றாக நில்லுங்கள். இப்போது முதலிலேயே ஆசி கூறிவிடுறோம்.

[மங்கை மேரியைக் கண்ணப்பன் அருகிற் கொண்டு நிறுத்துகிறாள். மங்கையும் தேவதாஸும் ஒன்றாகவும், எல்லப்பனும் பூங்காவனமும் ஒன்றாகவும் நிற்கிறார்கள். முனிசாமி முதலியாரும், சொக்கலிங்க முதலியாரும், மற்ற மூன்று மாதரும் ஆசி கூறுகிறார்கள்.]

—

4074

Liberator Press Ltd., 2-11, Mount Road, Madras.